விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : 16 + XVI

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 29 ஞாயிற்றுக்கிழமை (15.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 361

## 2020ஆம் கல்வியாண்டில்
## 83 ஆயிரம் மாணவர்கள் பல்கலையில் உள்ளீர்ப்பு

*உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன*

(கொழும்பு)

2020ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 33 ஆயிரத்தில் இருந்து 83 ஆயிரம் வரையில் அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. 15

## இலங்கை பௌத்த நாடு என
## அர்த்தப்படுத்துவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை - விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பௌத்த நாடு என அர்த்தப்படுத்துவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அத்துடன், மகாவம்சம் போன்ற வரலாற்று நூல்கள் பாலி மொழியில் எழுதப்பட்ட புனைக் கதைகள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வாராந்தம் ஊடகவியலாளர்கள் முன்வைக்கும் 15

## தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில்
# சந்தேகக் கண் கொண்டு
# இந்தியாவை பார்க்கக் கூடாது
## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் இந்தியாவை சந்தேகக் கண் கொண்டு பார்க்கக் கூடாதெனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் காலதாமதமின்றி தீர்வு வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



## 100 ரூபாயால் சீமெந்தின் விலை குறைப்பு

(கொழும்பு)

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 50 கிலோ கிராம் சீமெந்து பக்கெட்டின் விலை 100 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. 15

## யாழ் மாவட்ட அரச அதிபராக
### சுகுணவதி தெய்வேந்திரம்?

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனுக்கான இடமாற்றம் உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில். அவரின் இடத்திற்கு திருமதி சுகுணவதி தெய்வேந்திரம் அல்லது கொழும்பைச்சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக 15

## ஜனாதிபதி கோட்டா மீது குற்றச்சாட்டு முன்வைத்த வெள்ளைவான் சாரதிகள் இருவரும் சி.ஐ.டியால் கைது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவால் அழைத்துவரப்பட்டு கோட்டாபய ராஜபக்ஷ மீது வெள்ளை வான் குற்றச்சாட்டை வெளிப்படுத்தி ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய சாரதிகள் இருவரும் குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற வெள்ளை வான் கடத்தல் விவகாரத்தின் பிரதான சூத்திரதாரியாக கோட்டாபய ராஜபக்ஷவே செயற்பட்டார் என்றும் சுமார். 300 பேர் கடத்தப்பட்டு சித்திரவதைகளுக்கு உட்படுத்தி கொல்லப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. 03



### வடக்கில் கைவிடப்பட்ட
## காணிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கைவிடப்பட்ட தனியார் காணிகளை துப்புரவு செய்வதற்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த காலத்துக்குள் சுத்திகரிக்கப்படாத காணிகளை சுவீகரித்து அவற்றை 15

### மோசடியில் ஈடுபட்டால்
## பொலிஸில் அறிவியுங்கள்
### கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

தனது பெயரை கூறிக்கொண்டு மோசடியில் ஈடுபடும் நபர்கள் குறித்து அருகில் இருக்கும் பொலிஸ் நிலையங்களில் உடனடியாக அறிவிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். (ம-3)

### ஜெனிவா தீர்மானம் தொடர்பில்
## அரசின் முடிவைப் பொறுத்தே அடுத்த நடவடிக்கை - சுமந்திரன்

(கொழும்பு)

ஜெனிவா தீர்மானம் தொடர்பில் அரசாங்கம் எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றது என்பதனை பார்த்துக்கொண்டிருக்கின்றோம். அரசாங்கத்தின் முடிவை அடுத்தே எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள் 15

### விசாரணை நடந்த போது
## மயங்கி விழுந்த சுவிஸ் தூதரக பணியாளர்
### சி.ஐ.டி நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் சுவிஸ் தூதரக பெண் அதிகாரியிடம் விசாரணை நடத்தப்பட்ட போது அவர் இரண்டு முறை மயங்கி வீழ்ந்தார் என சிஐடியினர், கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்னவுக்கு தெரிவித்துள்ளனர். சுவிஸ் தூதரக ஊழியர் கானியர் பானிஸ்டர் பிரான்சிஸைக் கடத்தியதாகக் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை.

செயிண்ட் பிரிட்ஜெட் கொன்வெண்ட் அருகே ஒரு சம்பவம் நடக்கவில்லை என்று திருமதி பிரான்சிஸ் சி.ஐ.டிக்கு அளித்த அறிக்கையிலிருந்து தெரியவந்துள்ளது.

கொள்ளுப்பிட்டி பல்மேரா கோர்ட் அபார்ட்மென்ட் அருகே 15

### இந்தியா ஒருபோதும் கைவிடாது
## தமிழர் உரிமை பெற சிங்கள மக்கள் எதிர்க்க மாட்டார்கள்
### சம்பந்தன் நம்பிக்கை வெளியீடு 15

## - பள்ளிக்குடா கடற்கரையில் -

# கடல் ஆமை இறைச்சியுடன் கடற்படையால் ஒருவர் கைது

சாவகச்சேரி கடற்கரை பிரதேசத்தை அண்டிய பள்ளிக்குடா கடற்கரை பகுதியில் 6 கிலோ கடலாமை இறைச்சியுடன் கடற்படையினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கரையோர பாதுகாப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில் சட்டவிரோத மீன்பிடி மற்றும் சட்டவிரோதமான முறையில் கடல் உயிரினங்களை பிடிப்பவர்களை கைது செய்யும் நடவடிக்கையும் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையிலேயே பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாவகச்சேரியை அண்டிய பள்ளிக்குடா கடற்கரை பகுதியில் 6 கிலோ கடலாமை இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பள்ளிக்குடா கடற்கரை பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதை அவதானித்த கடற்படையின் கரையோர பாதுகாப்புப் பிரிவினர் அதில் ஒன்றினை தொடர்ந்து சென்றபோது அவரிடமிருந்து 6 கிலோ கடலாமை இறைச்சி கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கைக்குண்டு கண்டெடுப்பு

பருத்தித்துறை சமரபாகு வடமேற்கு ராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள வெற்றுக் காணியில் கைக்குண்டு ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இராணுவ பாதுகாப்பில் அவ்விடம் இருக்கின்றது. இன்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் அனுமதி பெற்றதும் கைக்குண்டு செயலிழக்கச் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ம-3.60)


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் உள்ள இரும்புக்கடைக்கு பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு: (1493)

076 007 8009

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (1487)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

பிறவுண் றோட், நீராவியடி, யாழ்ப்பாணம் (இலங்கை வேந்தன் மண்டபம்) அருகில் 3 மாணவர்கள் தங்கி நின்று படிப்பதற்கு வீடு வாடகைக்கு உண்டு. (1494)

தொடர்பு:-077 894 1096

## ENGLISH PERSONAL CLASSES

ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள் அனுபவமிக்க ஆசிரியரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

T.P: 077 658 9443

யாழ்ப்பாணம் (1478)

## விற்பனைக்கு

சுன்னாகம் பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் 10 1/2 பரப்புக் காணிக்குள் சகல வசதிகளுடனும் சுற்று மதிலுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

(தரகர்கள் தேவையில்லை.)

தொடர்புகளுக்கு:- (1488)

00447397910191

0779467807, 0212223252


### யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

### பாடசாலை சிற்றுண்டிச்சாலைக்கான

## கேள்வி மனுக் கோரல்

எமது பாடசாலையின் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி விண்ணப்பம் பாடசாலை நிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் இல 35/2015 சுற்றுநிருபத்திற்கேற்ப சிற்றுண்டிச்சாலை நடத்தப்பட வேண்டும்.

இதற்கான விண்ணப்பத்தை 16.12.2019 தொடக்கம் மு.ப 8.30 - பி.ப 12.00 மணி வரை பாடசாலை அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து 30.12.2019ஆம் திகதி பிற்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கூறுவிலைகள் 30.12.2019 நண்பகல் 12.00 மணிக்கு திறக்கப்படும்.

அதிபர்

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,

பருத்தித்துறை.

(C-8547)

### யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பளை

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யா/யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 22.12.2019ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு சங்கத் தலைவர் அதிபர் திரு.தி.வரதன் அவர்களின் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு கல்லூரி வளர்ச்சியில் பங்கெடுக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

ச.பிறேமிலன்

செயலாளர்

0778448760

(1491)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 05 - 1944



மறைவு 11 - 12 - 2019

## திருமதி இராஜேஸ்வரி பரமநாதன்

யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இந்துக் கல்லூரி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி பரமநாதன் அவர்கள் 11.12.2019 புதன்கிழமை அன்று கனடாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரமநாதனின் ஆருயிர் மனைவியும் வதனி (சுவிஸ்), றஜனி (ஐக்கிய அமெரிக்கா), பகீரதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிறிறதன், சிவானந்தன் அனுசா ஆகியோரின் மாமியாரும் பரஞ்சோதியின் அன்புச் சகோதரியும் அக்சரன், பிரதீப், பிரவீணா, அஸ்வினா, அகிலயா ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் Chapel Ridge Funeral home இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
க.கந்தசாமி (மைத்துனர்)

(1483)



## 1ம் ஆண்டு நினைவு

பத்து மாதம் சுமந்து
பாலூட்டி வளர்த்த
எம் தாயே - உனை
பாலூற்றி அனுப்பி
ஓராண்டாய் தவிக்கின்றோம்
யாழ்.கொழும்புத்துறை கிழக்கு
மண்ணில் உதித்தவரே
பூநகரி மண்ணில் வாழ்ந்தவரே
வட்டக்கச்சி மண்ணில்
நிலையாக வாழ்ந்து
வெற்றிகளை நிலையாக்கியரே
சீர் கட்டிய மண்ணுலகை
விட்டு சென்றதேனோ

நோயென்று படுத்திடாத இலட்சுமியே
குடும்பத்தின் குலவிளக்காய்
ஒளியூட்டிய எம் தாயே
ஓராண்டு வந்ததம்மா
ஆயிரம் ஆண்டுகள்
அடுத்தடுத்து வந்தாலும்
ஆழி சூழ் உலகில் அன்னை
உன் நினைவு மங்கிடுமோ
நீ தந்த பாசத்தை இவ்வுலகில்
எமக்கினி யார் தருவார்

திருமதி

## பொன்னுத்துரை இலட்சுமிதேவி

(சுமதி அம்மா)

திதி:சங்கடஹரசதுர்த்தி

15.12.2019

தோற்றம் 29-05-1942

மறைவு 26-11-2018

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைனைப் பிரார்திக்கின்றோம்


குடும்பத்தினர், பிள்ளைகள், மருமக்கள்
இல.905, கட்சன் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

(C-8538)

# மணல் கொள்ளையர்களிடமிருந்து கிராமங்களைக் காப்பாற்றுங்கள்

## ஏ-9 வீதியை மறித்து மக்கள் போராட்டம்













(முறிகண்டி)

சட்டவிரோத மணல் அகழ்விற்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் ஏ-9 வீதியை மறித்து நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி, கோவில் வயல் மக்களே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இயக்கச்சி சந்தியில் ஒன்று திரண்ட மக்கள் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சிறிது நேரம் ஏ9 வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பளை பொலிஸ் நிலைய பொலிஸார், மக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இயக்கச்சி, கோவில் வயல் என்பன ஆனையிறவு நீரேரி, சுண்டிக்குளம் நீரேரிக்கு இடையில் அமைந்துள்ள ஒடுங்கிய தாழ் நிலப்பரப்பு என்றும், தற்போது மேற்கொள்ளப்படும் துரித மண் அகழ்வால் கிராமம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர்.

அத்துடன், முள்ளியான் மண்டலாய் வாய்க்காலும், அதை அண்டிய மணல் மேடும் பிரதேசத்தின் வெள்ள அனர்த்தத்தை குறைத்து வந்ததாகவும், அந்தப் பகுதியும் மணல் கொள்ளையர்களால் திருடப்படுவதால் தமது கிராமங்கள் அழிவடையும் சூழல் உருவாகுவதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் உடனடியாக கவனமெடுப்பதாகவும், மணல் கொள்ளையர்கள் பயன்படுத்தும் வீதிகளில் காவல் கடமையில் பொலிஸாரை நிறுத்துவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

அத் துடன், பொலிஸாரின் காவல் கடமைக்கு பிரதேச மக்களும் இணைந்து ஒத்துழைப்பு வழங்குவ தென முடிவானது. இதையடுத்து மக்கள் கலைந்து சென்றனர். (இ-7-9-100)

# அவசர சேவைகளுக்கான தொலைபேசி இலக்கங்கள்;

## டெங்கு அவசர தொலைபேசி இலக்கம் 021 222 5000

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அவசர தேவைகளுக்கான துரித தொலைபேசி இலக்கங்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், அமைச்சுக்கள் அறிவித்துள்ளன.

கல்வி அமைச்சு - 1988, பரீட்சைத்திணைக்களம் 1911, தகவல் திணைக்களம் 1919, சிறுவர், பெண்கள் பணியகம் 1938, சுற்றுலா தகவல் 1912, மின்சார அமைச்சு 1901, அதி வேகப் பாதை 1969, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 1980, சிறுவர் துஷ்பிரயோகம் 1929, மின்தடை 1987, கலால் திணைக்களம் 1948, தனியார் பேருந்து 1955, குற்றப் புலனாய்வு 1933, ஓய்வூதியத் திணைக்களம் 1970, இலஞ்ச ஊழல் 1954, விவசாய ஆலோசனை 1920, வெளிநாட்டு வேலைவாய்ப்பு-1989, வீதி அபிவிருத்தி சபை 1968, இலங்கை மின்சார சபை 1910, மொழிகள் தொடர்பாக 1956, சாட்சிப்பாதுகாப்பு 1975, யாழ். டெங்கு ஒழிப்புப் பிரிவு 021 222 5000 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# உலகம் முழுவதிலும் தேசியவாத கொள்கை மேலோங்கியுள்ளது

## ஹரீன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

உலகம் முழுவதிலும் தேசியவாத கொள்கைகள் மேலோங்கியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் மேற்கண்டவாறு பதிவிட்டார்.

பிரித்தானியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கொன்சர்வேட்டிவ் கட்சி வெற்றியீட்டியுள்ளதன் ஊடாக தேசியவாத கொள்கையின் இடையறாத் தன்மை வெளிப்படுகின்றது.

லிபரல் கொள்கையைப் பின்தள்ளி தேசியவாத அடிப்படையிலான கொன்சர்வேட்டிவ் கொள்கைகள் மேலோங்கியுள்ளன.

அமெரிக்கா, இந்தியா, இலங்கையிலும் இதே தேசியவாத கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டமை தேர்தல் முடிவுகள் மூலம் அம்பலமாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெள்ளை வான் கடத்தல் குறித்து கருத்து தெரிவித்த இருவர் கைது



(கொழும்பு)

ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்னவின் ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு வெள்ளை வான் கடத்தல் தொடர்பில் கருத்து தெரிவித்த இருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் காலகட்டத்தில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வெள்ளை வான் சாரதி என தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு ஜனாதிபதி வேட்பாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்த இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கோலி போல் உழைக்க வேண்டும் என்கிறார் மேற்கிந்திய தீவுகளின் உதவி பயிற்சியாளர்



விராட்கோலி போல் வெஸ்ட்இண்டீஸ் கிரிக்கெட் அணி வீரர்கள் கடுமையாக உழைக்க வேண்டும் என்று அந்த அணியின் உதவி பயிற்சியாளர் ரோட்டி எஸ்ட்விக் தெரிவித்தார்.

இந்தியா-வெஸ்ட்இண்டீஸ் அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டி தொடரில் முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சேப்பாக்கம் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்ட பிறகு வெஸ்ட்இண்டீஸ் அணியின் உதவி பயிற்சியாளர் ரோட்டி எஸ்ட்விக் அளித்த பேட்டியில்,

ஹெட்மயர், பூரன், ஹோப் ஆகிய இளம் வீரர்கள் முன்னேற்றம் கண்டு வருகிறார்கள். இது எங்களுக்கு உற்சாகம் அளிக்கிறது. நீங்கள் எந்த அளவுக்கு கடினமாக உழைத்து போட்டிக்கு தயாராகிறீர்கள் என்பது தான் முக்கியமானதாகும். கடினமான உழைப்பின் மூலம் தான் விராட்கோலி உயர்ந்த நிலையை எட்டி இருக்கிறார். அவரிடம் இருந்து இதனை நிறைய வீரர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். உங்களுக்கு வாய்ப்பு கிடைத்தாலும், கடினமாக உழைக்கவில்லை என்றால் சாதிக்க முடியாது. கடின உழைப்பு உங்களுக்கு சலிப்பை ஏற்படுத்தலாம். ஆனால் அது தான் உங்களுக்கு சிறந்த வெற்றியை தேடிக்கொடுக்கும்.

இந்த போட்டி தொடரில் எங்கள் அணி வீரர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள். உண்மையிலேயே எங்கள் வீரர்கள் கடினமாக உழைத்து வருகிறார்கள். இதனால் வெற்றியை ருசிக்க தொடங்கி உள்ளனர். 20 ஓவர் போட்டியில் ஹெட்மயர் ஆட்டம் அருமையாக இருந்தது. டெஸ்ட் போட்டி போன்ற நீண்ட நேர போட்டிகளை எடுத்து கொண்டால் அவர் இளம் வயது வீரர் என்பதை மக்கள் மறந்து விடுகிறார்கள். ஒருநாள் போட்டியில் அவர் 4 சதங்கள் அடித்து இருக்கிறார். அவரிடம் நிறைய திறமை இருக்கிறது. கிரிக்கெட்டை பொறுத்த மட்டில் ஒருபோதும் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது.

இந்தியாவுக்கு எதிரான 20 ஓவர் போட்டித் தொடரில் எங்கள் அணியினர் ஆடிய விதம் மகிழ்ச்சி அளிக்கிறது. கரீபியனில் நடந்த இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் இடையிலான 20 ஓவர் தொடரில் இரு அணிகளுக்கும் இடையிலான செயற்பாட்டில் அதிக வித்தியாசம் இருந்தது. ஆனால் இந்த 20 ஓவர் தொடரில் இரு அணிகளுக்கும் இடையே சிறிய வித்தியாசம் தான் தெரிந்தது. இதே போல் ஒருநாள் போட்டி தொடரிலும் நாங்கள் நன்றாக செயற்படுவோம் என்று நம்புகிறேன் என அவர் கூறினார்.

## சீரற்ற காலநிலை காரணமாக

## இலங்கை-பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் நான்காம் நாள் ஆட்டமும் கைவிடப்பட்டது

ராவல்பிண்டியில் நடைபெற்றுவரும் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் சீரற்ற காலை நிலை மற்றும் போதிய வெளிச்சமின்மை காரணமாக முழுமையாக கைவிடப்பட்டது.

பத்தரை வருடங்களின் பின்னர் பாகிஸ்தானில் நடைபெறும் வரலாற்று முக்கியம் வாய்ந்த இந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளமை வீரர்களுக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட சபையினருக்கும், கிரிக்கெட் இரசிகர்களுக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

முதல் மூன்று தினங்களிலும் 91.5 ஓவர்கள் மாத்திரமே வீசப்பட்டுள்ளதுடன் முதலில் துடுப்பெடுத்தாடும் இலங்கை அணி அதன் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தனஞ்சய டி சில்வா 87 ஓடடங்களுடனும் டில்ருவன் பெரேரா 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

இலங்கை துடுப்பாட்டத்தில் .திமுத் கருணாரட்ன (59), ஓஷத பெர்னாண்டோ (40), நிரோஷன் திக்வெல்ல (33), ஏஞ்சலோ மெத்யூஸ் (31) ஆகியோர் ஓரளவு திறமையை வெளிப்படுத்தினர்.

வெள்ளி இரவு பெய்த கடும் மழை மற்றும் நேற்று காலை நிலவிய மப்பும் மந்தாரமுமான காலநிலை காரணமாக நான்காம் நாள் ஆட்டம் விளையாடப்படாமல் பாகிஸ்தான் நேரப்படி முற்பகல் 11.30 மணிக்கு முழுமையாக கைவிடப்பட்டது.

இதன் காரணமாக இந்த டெஸ்ட் போட்டி சுவாரஸ்யமற்ற முடிவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.





# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



மலர்வு 1948.10.02

உதிர்வு 2019.11.15

அமரர்

## கண்மணி(கமலா) பரமசிங்காரம்

கடந்த 15.11.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி கண்மணி பரமசிங்காரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து வரும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*எங்கள் குலவிளக்கின் இழப்பினை அறிந்து துயரில் பங்குபற்றியோர், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோர் மற்றும் பலவழிகளிலும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் அன்புரிமையுடன் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர் (1489)

தகவல்
குடும்பத்தினர்

# போரிஸ் ஜோன்சனுக்கு ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து





(கொழும்பு)

பிரித்தானிய பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள போரிஸ்ஜோன்சனுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்ட டுவிட்டர் பதிவில், பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றதற்கு போரிஸ் ஜோன்சனுக்கும் கொன்சவேர்ட்டிவ் கட்சிக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் வெற்றியானது தேசிய கொள்கை சார்பு அரசாங்கங்களின் தற்போதைய உலகளாவிய போக்கை பிரதிபலிக்கின்றது. புதிய பிரதமருக்கும், அரசாங்கத்திற்கும் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் மக்களுக்கும் எனது வாழ்த்துக்கள்" எனத் தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட டுவிட்டர் பதிவில், 2019 பிரித்தானிய பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கும்கொன்சவேர்ட்டிவ் கட்சிக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரது தீர்க்கமான தலைமைத்துவம் இந்த வெற்றிக்கு வழிவகுத்தது என்பதில்சந்தேகமில்லை. பிரதமராக பதவி வகிக்கும் காலத்திற்கு எனது வாழ்த்துக்கள்" என தெரிவித்தார். (இ-7).




# கடமையைச் செய்ய விலைபேசும் அரச அதிகாரிகள் குறித்து முறையிட "1954" என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்

## ஜனாதிபதி கோட்டாபய நடவடிக்கை

(கொழும்பு)

ஊழல் இல்லாத அரச சேவையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் கடமையைச்செய்ய விலைபேசும் அதிகாரிகளை இனம் காண்பதற்கு 1954 என்ற தொலைபேசி இலக்கத்தை செயற்படுத்துவதற்கு தனியான ஊடகப் பிரிவு உருவாக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் இப் பிரிவுக்கு பொது மக்கள் 'தங்களுடைய முறைப்பாட்டை எந்த நேரத்திலும் தெரிவிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)


# 31 ஆம் நாள் நினைவு நிகழ்வும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 20 - 12 - 1946



உதிர்வு 15 - 11 - 2019

அமரர். ஆன்டி செல்லத்துரை

கடந்த 15.11.2019 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் ஆன்டி செல்லத்துரை அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு 15.12.2019 இன்று ஞாயிற்றுக்கிழமை விசுவமடுவில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. இன்றைய தினம் நடைபெற உள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- எங்கள் குல விளக்கின் இழப்பினை அறிந்து துயரில் பங்குபற்றியோர், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோர், நினைவுப் பிரசுரங்கள் மற்றும் பல வழிகளிலும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் அன்புரிமையுடன் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல 86/1, விசுவமடு (சி-8511) தகவல்:- குடும்பத்தினர்.



# அமரர் ஆறுமுகம் இராஜ்குமார் அவர்களின் 31 ஆம் நாள் நினைவலைகள்–15.12.2019



அமரர் ஆறுமுகம் இராஜ்குமார்

ஈழமணித் திருநாட்டில் இனிய வலி.வடக்கு மண்ணில் வாழ வழிகாட்டும் பளை வீமன்காமம் அளவை நகர் சூழ நிறை உறவுகளால் சோபிதமாய் வந்து உதித்தாய் ஆறுமுகம் ராஜ்குமார் ஆன்றோன் என வளர்ந்தார்.
வாழ்வினுக்கோர் கமலம் என ஞானேஸ்வரி வந்தணைந்தார். காலநெடும் பயணம் அதில் கனிந்த செல்வன் கிரிதரனும் கண்மணியாம் ரவிச்சந்திரன் இனியவனாம் மயூரனொடு வாழ வைக்கும் வாழ்வின் ஒளி சிந்து எனும் ஷஜி மலர்ந்தாள்.

நீலநெடும் கடல் கடந்து நித்திலம் சேர்வான் கடந்து பாரதத் தாய் மடியினிலே பரவசமாய் வாழ்ந்திருந்தார். கோலமிகு ஈழநகர் மீண்டு வந்து குடிபுகுந்தார். ஆலமுண்ட சிவன் பாதம் அமைதியுடன் இணைந்து விட்டார்.

புன்னகை பூத்த முகம், புத்துலக கனவு விழி, மென்மை தவழ் அன்பு மொழி, மேன்மை நிறை வாழ்க்கை நெறி, கண்ணசைவால் கவலை கொல்லும் கருணை நிறை இனிய சுகம்,மண்ணகத்தார் போற்றி செய்ய விண்ணகத்தில் அமைதி கொள்க..

அன்பிற்கு அடைக்கலமாய், அறிவிற்கு உறைவிடமாய், பண்பிற்கு பிறப்பிடமாய், பணிவுக்கு புகழிடமாய்,இன்பத்தை விதைப்பவராய், துன்பத்தை துடைப்பவராய் என்றைக்கும் எம் இதய அந்தரங்கம் தனில் உறைக.

ஓடோடி உன் வாசல் உரிமையுடன் நாம் வந்தோம்.நீர் ஓடிப் போகையிலே நாம் இடையில் நின்று விட்டோம். யாரோடு யார் வந்தார் யாரோடு எவர் செல்வார். நீர் ஓடும் விழிகளுடன் நாம் ஏங்கி நிற்கின்றோம்.

வான் தூங்கும் நிலவிற்கும் மாதம் ஒரு மறைவு உண்டு. கான் தூங்கும் இரவினிலே கதர் தூங்க விரைவதுண்டு. தேன் தூங்கும் மலர் இதழ்கள் உதிர்ந்து மண்ணில் மறைவதுண்டு.
ஏன் தூங்க முடிவு செய்தீர்.ஏன் விரைந்து விடை கொடுத்தீர்
ஐயா உம் நினைவில் அன்பு நெஞ்சம் நிறையட்டும்
ஐயா உம் வழியில் அறக்கொடைகள் வளரட்டும்.

பொய்யாப் பழம் கதையாய் போன கதை முடியட்டும்.மெய்யாய் இப்புவியில் உம் நாமம் ஒளிரட்டும். ஐயா அமைதி கொள்க . அருவுருவாய் காத்தருள்க.
செய்யார் திருவடியில் சிரம் சாய்த்து வணங்குகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

விண்ணில்: 15.11.2019 மண்ணில்:01.12.1955 (C-8540) -அன்பு நெஞ்சங்கள்-

# ஜனநாயகமும் சகவாழ்வும் உரையாடல்

(யாழ்ப்பாணம்)

சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இனங்களுக்கு இடையிலான உறவுகள், சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள், நாட்டின் ஜனநாயக எதிர்காலம் போன்ற விடயங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள சென். ஜோன் த பப்டிஸ்ற் தேவாலய பரிஷ் மண்டபத்தில் மாலை 4 மணிவரை இடம்பெறும். (இ-7)

# 'கண்டேன் கைலாசம்' நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 17.11.2019 அன்று லண்டனில் வெளியிடப்பட்ட டாக்டர் பரமேஸ்வரஐயர் அம்பிகாபதி எழுதிய "கண்டேன் கைலாசம்" நூலின் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் கந்தர்மடம் பழம்வீதி ஸ்ரீ சித்தி விநாயகராலயத்தில் இடம்பெறும். (இ-7)

# மக்கள் பயன்படுத்தும் குளத்திலிருந்து முதலைகளை அகற்றுமாறு கோரிக்கை



(கரணவாய்)

கரவெட்டிப் பகுதியில் அமைந்துள்ள குளம் அக்கிராம மக்கள் குளிப்பதற்கு பயன்படுகிறது. தற்போது பெய்துவரும் கடும் மழையினால் குளம் நிரம்பி வழிவதுடன் இரண்டு முதலைகளும் குளத்தினுள் வந்து சேர்ந்துள்ளன.

சிறுவர்கள், முதியவர்கள் எனப் பலரும் குளத்து நீரைப் பயன்படுத்துவதால் அவ்விடத்திற்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

எனவே வன ஜீவராசி திணைக்களம் உடனடியாக நடவடிக்கை எடுத்து இரு முதலைகளையும் அவ்விடத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-60)

## சங்காபிஷேகமும் ஹோம அபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரத்தில் கார்த்திகை கடைசி சோமவார விசேட நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும் (1008) விசேட ஹோம அபிஷேகமும் நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். (இ-5)

## நினைவுப் பகிர்வும் நூல் வெளியீடும் இன்று

(யாழ்ப்பாணம்)

கலை இலக்கியச் செயற்பாட்டாளருமான குமாரசுவாமி குமார தேவனின் அஞ்சலிக் கூட்டமும் அவரது நினைவுகளைப் பகிர்கின்ற "வாசிப்பும் அறிதலும்" என்கின்ற நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் தியாகி அறங் கொடை நிலைய மண்டபத்தில் (TCL) இடம்பெறும். (இ-9)

# வலி. கிழக்கு பிரதேசசபை பட்ஜெட் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத்திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டது.

வரவு-செலவுத்திட்டம் தவிசாளர் தி.நிரோஷினால் கடந்த விசேட கூட்டத்தின் மூலம் அவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு உரையாற்றப்பட்டது. வரவு- செலவுத்திட்டத்தை அவைக்குச் சமர்ப்பித்த தவிசாளர்,

கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விளக்கியதுடன் எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் உரையாற்றினார்.

நிலைபேறான அபிவிருத்தியாக கட்சி அரசியலுக்கு அப்பால் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு ஜனநாயகப் பண்புகளுடன் தயாரிக்கப்பட்ட இவ் வரவு-செலவுத் திட்டத்தை சகலரும் ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து உறுப்பினர்களின் விவாதங்களுக்கு அனுமதிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் முன்னெடுத்த அபிவிருத்திகள் தொடர்பான விமர்சனங்களையும் எதிர்வரும் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டங்களில் காணப்படும் விடயங்கள் தொடர்பாகவும் உறுப்பினர்களால் தவிசாளரை நோக்கி கேள்விக்கணைகள் தொடுத்து உரைகள் அமைந்தன.

அக்கேள்விகளுக்கு பதிலளித்த தவிசாளர், தொடர்ந்து உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட நல்ல விடயங்களை எமது சபை நடவடிக்கையில் உள்வாங்கிக் கொள்வதில் இச் சபையின் காத்திரம் அதிகரிக்கும் என்பதில் அதீத நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

ஆகவே சகலரும் ஐக்கியத்தினை வெளிப்படுத்தி சபையினை முன்கொண்டு செல்வது காலத்தின் அவசியம் எனக் குறிப்பிட்டார்.

உறுப்பினர்களின் உரைகளைத் தொடர்ந்து சபையின் திருத்தங்களுடன் அபிப்பிராயத்திற்காக வரவு- செலவுத்திட்டம் வைக்கப்பட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சபைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன. சபையின் முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் மாகாணம் தழுவிய ரீதியில் எதிர்வரும் ஆண்டின் உண்மை வருமானமாக பதிவளிப்பதற்கு முடிவுகள் எடுக்கப்பட்டதனால் கடந்த முறை குறிப்பிட்ட வேலைத்திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போனதை உறுப்பினர்கள் ஆட்சேபித்தனர்.

தற்போது கிடைக்கப்பெற்றிருக்கின்ற பணத்தை வட்டாரங்களுக்கு வெளியே பொதுவான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்ற யோசனை தவிசாளரால் முன்வைக்கப்பட்ட போது அதற்கும் சில உறுப்பினர்களால் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டன.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் தவிசாளர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சார்பாக நடந்துகொள்வதாக குற்றம்சாட்டினர்.

இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பினருக்கு என தான் சலுகை அளிக்கவில்லை என தவிசாளரால் பதிலளிக்கப்பட்டு காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன.

விவாதங்களைத் தொடர்ந்து தவிசாளரால் வரவு-செலவுத் திட்டத்திற்கான இறுதி அவை அனுமதி கோரப்பட்ட போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் வாக்கெடுப்பினைக் கோரினர்.

சபையில் பிரசன்னமாகியிருந்த கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, சுயேட்சைக்குழு மற்றும் சுதந்திரக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் தாம் வரவு- செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக ஆதரவு தெரிவித்தனர்.

அவ்வகையில் 38 சபை உறுப்பினர்களில் சபையில் சபை அமர்வுக்கு பிரசன்னமாகியிருந்த 31 உறுப்பினர்களில் 26 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 5 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்து வரவு- செலவுத்திட்டத்தை நிறைவேற்றினர். (இ-7)

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 70 ஆண்டுகள் நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 70 ஆண்டுகள் நிறைவு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் அக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முன்னாள் பேராயரும் தந்தை செல்வா அறங்காவற் குழுத் தலைவருமான கலாநிதி எஸ்.ஜெயநேசன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், சி. சிறீதரன், எம்.ஏ. சுமந்திரன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா மற்றும் வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை இளம் பொருளியலாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் வரி குறைப்பு தொடர்பான கலந்துரையாடல் நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் 3 மணி வரை பொருளியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

இதில் "அண்மைக்கால வரி குறைப்பு பொருளாதாரத் தாக்கமும்" என்னும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறைப் பேராசிரியர் கோ.அமிர்தலிங்கம் உரையாற்றுவார். (இ-5)

# இராசி பலன்

15.12.2019

கார்த்திகை 29, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு

திருதியை முற்பகல் 8.54 மணிவரை

புனர்பூசம் காலை 6.49 மணிவரை

பூசம் பின்னிரவு 5.49 மணிவரை

சுபநேரம் 9.21-10.51 மணிவரை

இராகுகாலம் 4.57-6.21 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

கிரகநிலை: ராகு; சந்; சனி, சுக், குரு, கேது; சூரி, புத; செவ்

சந்திராஷ்டமம்: பூராடம்

**மேடம்** — சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**இடபம்** — செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மகிழ்ச்சியும் உயரும் நாள்.

**மிதுனம்** — உன்னத வாய்ப்புக்கு அடித்தளம் அமைப்பீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், போசன சுகமுண்டு.

**கடகம்** — விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் பலனுண்டு, போசன சுகமுண்டு, உடல் நலன் சீராகும்.

**சிம்மம்** — உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்வீர்கள், மாற்றங்களால் வளம் காண வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படும்.

**கன்னி** — விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், வருங்கால நிலை கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம்.

**துலாம்** — உறவினர், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** — சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், விநாயகரை வழிபட்டு மகத்துவம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** — கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், திடீர் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய நாள்.

**மகரம்** — எடுத்த காரியங்களை எளிதில் நிறைவேற்றி வைப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.

**கும்பம்** — கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், மறைமுக போட்டிகள் மாறும்.

**மீனம்** — தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

# இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிக்கை

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான இரகசிய அறிக்கைகள் 2016 ஆம் ஆண்டு முதலே ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டது.

குற்ற விசாரணை திணைக்களத்தின் பரிசோதகர் நிஷாந்த சில்வா மேற்கொண்ட விசாரணை அறிக்கைகளே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த இரகசிய அறிக்கைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தான் கண்டதாக முன்னாள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன் ஏற்றுக் கொண்டதாக குறித்த ஊடகம் தெரிவித்தது.

எனினும் கடந்த நல்லாட்சி அரசாங்கம் அது தொடர்பில் எந்தவொரு விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லை என குற்றம் சாட்டப்பட்டது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்டமை தொடர்பான இரகசிய ஆவணம் முதலில் ஜெனிவாவிற்கு கிடைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை. இரகசிய பொலிஸ் விசாரணைகள் தொடர்பான 100 இரகசிய ஆவணங்கள் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகளின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூகாவிற்கு கிடைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது என அந்த ஊடகம் மேலும் தெரிவித்தது. (இ-7)


Canada VISA கூடிய விரைவில் உங்கள் கைகளில்

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்



Mr. P. Jegan
Director-Flex Institute

Sponsor Letters
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

Hotline: 0777-761 346

நிராகரிக்கப்பட்ட விசாக்கள் மிக விரைவில் பெற்றுத்தரப்படும்.

விசா பெற்றுக் கொண்ட சிலர்




flex Institute
Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06.
flexinstitute04@gmail.com www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை


## டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

### மக்களே! அவதானம்

(கொழும்பு)

கொழும்பு, கம்பஹா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

காய்ச்சல், உடல் வலி, தலைவலி, சருமத்தில் திடீர் புள்ளிகள் போன்றவை இந் நோய்க்கான அறிகுறிகளாகும் என்று தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் அருண ஜெயசேகர தெரிவித்தார்.

இதனால் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தெரிவித்த பணிப்பாளர் வீடு, வீட்டைச் சுற்றியுள்ள சுற்றாடலில் நுளம்பு பெருகும் இடங்களை துப்பரவு செய்யுமாறும் அறிவுறுத்தினார். (இ-7)


PUBLIC NOTICE

Dear Mitsubishi Elevator and Escalator Customers in Sri Lanka

As we approach the end of another successful year, **A G MELCO Elevator Company Lanka (Private) Limited, a Joint Venture with Mitsubishi Electric Corporation, Japan,** extend sincere appreciation and gratitude to our valued customers for over 35 years of association with us.

We offer the best quality of Mitsubishi Elevator and Escalator solutions to our customers and provide Genuine Spare Parts with our service packages. We follow the Japanese standard of service procedures while strictly complying to our safety standards and quality adherence.

Please be vigilant and only rely on authorized Original Equipment Manufacturers' representative, A G MELCO Elevator Company Lanka (Private) Limited, for all Mitsubishi Elevator or Escalator maintenance requirements. Elevator and Escalator - Servicing and Maintenance requires skilled technicians and recommended consumables to ensure safety of passengers and long-life of the equipment.

You can rest assured when associating with

**A G MELCO Elevator Company Lanka (Private) Limited**
**(Joint Venture with Mitsubishi Electric Corporation, Japan)**

464, 3rd – 5th Floors, Galle Road, Colombo – 03, Sri Lanka
Tel: +94-11-522 9229, 535 0000
Fax: +94-11-534 1299 | E-mail : srilanka@agmelco.com

MITSUBISHI ELECTRIC
ELEVATORS AND ESCALATORS

www.adinnovations.lk



வாடகைக்கு

அரியாலை மத்தி கண்டி றோட்டுக்கு சமீபமாக சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 077 339 9072 (1480)

மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் வயது-28, அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு மணமகன் தேவை. அரச பணி/தனியார் வங்கி விரும்பத்தக்கது.

தொடர்புக்கு: 076 999 4385 (1466)

மணமக்கள் தேவை

அமெரிக்காவில் உள்ள 1989 (அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்த மணமகனுக்கு படித்த மணமகள் தேவை, அவுஸ்திரேலியா (1984 சபைவேதம்), சுவீடன் (1993), ஜேர்மன் (1990) ஆகிய ஆண்டுகளில் பிறந்த மணமக்களுக்கு இலங்கையில் உள்ள படித்த மணமகள் தேவை, அத்தோடு வெளிநாட்டிலுள்ள மணமக்ன், மணமகளுக்கு இலங்கையில் உள்ள மணமக்கள் தேவை.

009 476 725 0144, 009 477 745 6837 } Viber Number
076 559 0349 (1468)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532


## கிளி/கிளிநொச்சி ம.ம.வி பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம் 2019

மேற்படி கூட்டமானது இன்று 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். பாடசாலையின் வளர்ச்சி மற்றும் எதிர்கால செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதன் பொருட்டு பாடசாலையின் பழைய மாணவர் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**வைத்திய கலாநிதி மு.சிறீதர்,**
**செயலாளர்.**

(C-8528)

# குண்டுத் தாக்குதல் தொடர்பிலான விடயங்களை கொட்டாஞ்சேனை பொலிஸார் மறைத்தது நிரூபணம்

(கொட்டாஞ்சேனை)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பிலான விடயங்களை மறைக்க கொட்டாஞ்சேனை பொலிஸார் பிழையான தகவல்களைப் பதிவு புத்தகத்தில் பதிவு செய்திருப்பது ஜனாதிபதி ஆணைக்குழு முன் நிரூபணமாகியது.

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய அதிகாரிகள் கடந்த 12 ஆம் திகதியும் நேற்று முன்தினம் 13 ஆம் திகதியும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் அளித்த சாட்சியங்களின் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டது.

இதற்கமைய நேற்று முன்தினம் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தின் ஆவணங்களுக்கு பொறுப்பான கான்ஸ்டபிள் நளீன் பண்டார ஆணைக்குழுவில் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தாக்குதல் தொடர்பான ஆவணங்கள் தாக்குதல் நடத்தப்பட்டு இரண்டு நாட்கள் கடந்த பின்னரே கிடைத்ததாகத் தெரிவித்தார்.

ஆனால் அந்த ஆவணம் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர் கிடைத்ததாக ஆவணப் புத்தகத்தில் பதிவிடுமாறு கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய மகிந்த கருணாரட்ன தனக்கு அறிவுறுத்தியதாக அவர் தெரிவித்தார்.

அவர் குறித்த கடிதத்தை வழங்கும் போது எவரும் அது குறித்து அறிந்திருக்கவில்லை எனவும் ஆகவே அதனை இரகசியமாக கையாளுமாறும் அவர் கேட்டுக்கொண்டதாக நளின் பண்டார ஆணைக்குழுவில் தெரிவித்தார்.

அதேபோல் தாக்குதலுக்குப் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் அப்போது வடகொழும்புக்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் அத்தியட்சகர் சஞ்ஜீவ பண்டார மற்றும் அவருடைய தனிப்பட்ட உதவியாளர் உபேந்திர என்பவர் தனது கையடக்கத் தொலைபேசிக்கும், பொலிஸ் நிலைய தொலைபேசிக்கும் அழைத்து குறித்த தகவல்களை ஆவணப் புத்தகத்தில் பதிவிட்டீர்களா? என்பது தொடர்பில் வினவியதாக தெரிவித்தார்.

அதற்கமைய ஏப்ரல் 13 ஆம் திகதி குறித்த கடிதம் கிடைத்ததாக தான் பதிவேட்டில் பதிவிட்டதாக கான்ஸ்டபிள் நளின் பண்டார ஆணைக்குழுவில் சாட்சியமளித்தார்.

ஏன் அவ்வாறு பிழையான விடயத்தை செய்தீர்கள்? என நீதிபதிகள் வினவியதற்கு கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய அதிகாரியின் வற்புறுத்தலுக்கமைய தனக்கு அதைச் செய்ய வேண்டி ஏற்பட்டதாக கான்ஸ்டபிள் நளின் பண்டார தெரிவித்தார்.

அவரையடுத்து கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் எம்.சிறிசேன சாட்சி வழங்கினார்.

தான் புனித லூசியா தேவாலயத்திற்கு கடமைக்காக சென்ற போது அதாவது காலை 6.15 மணியளவில் கையொப்பம் இட்டு சென்றதாகவும் அதனை அடுத்து குண்டு வெடித்ததன் பின்னர் முற்பகல் 8.45 மணிக்கு பொலிஸ் நிலையத்திற்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து போலி நேரத்தை பதிவு செய்த பின்னர் தான் வீட்டிற்கு சென்ற போது கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தொலைபேசியில் அழைத்து கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாக தெரிவித்ததற்கு அமைய தான் அந்த இடத்திற்கு சென்றதாகவும் அவர் கூறினார்.

அதன் பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு சென்று நேரத்தை 9.45 என பதிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது சாட்சியம் வழங்கிய பொலிஸ் பரிசோதகர் எம்.சிறிசேன அனைத்து நேரங்களும்கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய மகிந்த கருணாரட்னவின் வேண்டுகோளுக்கமைய மறுபடியும் மாற்றியதாக கூறினார்.

அதாவது பொலிஸ் பதிவு புத்தகத்தில் பக்கங்கள் பொருந்தும் வகையில் 371 முதல் 374 ஆவது பக்கம் வரையும் புதிய பக்கங்களை இணைத்ததாகவும் அவர் ஆணைக்குழுவின் முன் தெரிவித்தார்.


தவறான தகவல்களை பதிவிட்டமை குறித்து இதன்போது பொலிஸ் பரிசோதகர் ஏற்றுக்கொண்ட நிலையில் புதிய தகவலில் மேலதிக பொலிஸார் புறப்பட்டு சென்றதாக பதிவு செய்ததாகவும் அவர் ஆணைக்குழுவில் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் சாட்சியமளித்த முன்னாள் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த கருணாரட்ன 21 ஆம் திகதி தாக்குதலுக்கு முன்னர் தாக்குதல் தொடர்பான எந்தவொரு கடிதமும் தனக்குக் கிடைக்கவில்லை எனக் கூறினார்.

அதனை தாக்குதல் நடத்தப்பட்ட தினத்தன்று முற்பகல்வேளையில் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்ஜீவ பண்டாரவின் தனிப்பட்ட உதவியாளரால் உபேந்திர என் பவர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மூலமாக பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

அதேபோல் தாக்குதல் நடத்தப்பட்ட தினத்தன்று இரவு 9 மணியளவில் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்ஜீவ பண்டார கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்து குறித்த கடிதத்தை அனுப்ப முடியாமல் போனதாகவும் அது தனது தனிப்பட்ட உதவியாளரினால் காணாமல் போனதாக தெரிவித்ததாக பொலிஸ் பரிசோதகர் எம்.சிறிசேன கூறினார்.

அதேபோல் குறித்த கடிதம் தாக்குதலுக்கு முன்னர் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்தது போல் பதிவு செய்யுமாறு பொலிஸ் அத்தியட்சகர் சஞ்ஜீவ பண்டார வழங்கிய ஆலோசனைக்கு அமைவாகவே முன்னெடுக்கப்பட்டதாக பதிவுசெய்யுமாறு தான் ஆவணக் காப்பாளருக்கு அறிவுரை வழங்கியதாகவும் தெரிவித்தார்.(இ-7)



மாவிட்டபுரம் நல்லிணக்கபுரம் சனசமூக நிலையத்தில் சேரன் நூலகம் கடந்த 2 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

## மாகாண நிலை

# சாதனையாளர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாகாண நிலை சாதனையாளர் கௌரவிப்பு விழா நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் நாளை மறுதினம் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாளொன்றிற்கு இரண்டு அமர்வுகளாக யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் காலை 9.30 மணிக்கும் பிற்பகல் ஒரு மணிக்கும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும்.

இதில் விருந்தினர்களாக முதலாம் நாள் முதல் அமர்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறைத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி இராசநாயகம், இரண்டாம் அமர்வில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) இ.உமாகாந்தன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் ஆகியோரும் இரண்டாம் நாள், முதலாம் நாள் அமர்வில் வடக்கு மாகாண பேரவைச் சேயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் பொ.வாகீசன், இரண்டாம் அமர்வில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) இ.பத்மநாதன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# கொழும்பு துறைமுக பாலர் பாடசாலை சகல வசதிகளுடனும் தரமுயர்த்தப்படும் அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு



(கொழும்பு)

கொழும்பு துறைமுக பாலர் பாடசாலை அனைத்து வசதிகளுடனும் தரமுயர்த்தப்படும். அத்துடன் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் சம்பளம் உள்ளிட்ட இதரப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் வீதிப் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்திலுள்ள பாலர் பாடசாலையின் வருடாந்த கலைவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

1985 ஆம் ஆண்டு லலித் அத்துலத்முதலியால் இப்பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

அவர் துறைமுகம் தொடர்பில் தூர நோக்கத்துடன் செயற்பட்டார். அதுபோன்றே மகிந்த ராஜபக்ஷ காலத்திலும் இத்துறைமுகத்தினுள் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

துறைமுக அதிகார சபை ஊழியர்களின் பிள்ளைகளைப் பராமரிப்பது சிறந்த சேவையாகும். பிள்ளைகளை பராமரிப்பதற்கு நல்லதொரு மனநிலை இருக்க வேண்டும். இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் சம்பளப் பிரச்சினையை எதிர்கொள்கின்றார்கள். இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அவர்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் 8 ஆயிரத்திற்கும் அதிகமான ஊழியர்கள் துறைமுக அதிகார சபையில் பணியாற்றிய போதிலும் 2019 ஆம் ஆண்டு 28 பிள்ளைகள் மாத்திரமே இப்பாலர் பாடசாலையில் புதிதாக இணைந்து கொண் டனர்.

தற்போதைய நிலையைக் காட்டிலும் இங்குள்ள வசதிகளை மேம்படுத்தி சிறந்த பாலர் பாடசாலையாக தரமுயர்த்தப்படும். இதன் ஊடாக இங்கே பராமரிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கைகளை அதிகரித்து துறைமுக ஊழியர்கள் மன நிம்மதியுடன் தங்கள் பணிகளை முன்னெடுப்பதற்கான சூழல் ஏற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 180 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 130 | 120 | 160 |
| பச்சைமிளகாய் | 250 | 350 | 240 | 180 | 250 |
| தக்காளி | 180 | 180 | 180 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120 | 70 | 80 |
| கோவா | 160 | 140 | 160 | 100 | 160 |
| கரட் | 300 | 250 | 320 | 140 | 300 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 | 80 |
| புடோல் | 140 | 120 | 180 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 400 | 420 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 400 | 320 | 320 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 180 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 70 | 120 |
| பயற்றங்காய் | 300 | 300 | 260 | 220 | 240 |
| லீக்ஸ் | 350 | 200 | 320 | 340 | 400 |
| பீற்றூட் | 260 | 120 | 200 | 70 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 120 | 240 |
| முருங்கைக்காய் | — | — | 800 | — | - |
| போஞ்சி | 250 | 250 | 240 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 180 | 100 | 160 |
| கீரை-1பிடி | 60 | 50 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 150 | 120 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 300 | 240 | 220 | 240 |
| வெங்காயப்பூ | 500 | — | 280 | — | — |
| முள்ளங்கி | 140 | 100 | 200 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 40 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 80 | 155 | 120 |

# வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்களின் ஆதரவைப் பெற கடுமையாக உழைக்க வேண்டும்

## சு.க.அமைப்பாளர்களுக்கு மைத்திரி அறிவுறுத்து



(கொழும்பு)


ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையில் எதிர்கால அரசாங்கத்திலான தேசிய ஒற்று மையை வளர்ப்பதற்கான பொறு ப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யிடமே உள்ளது என்று முன் னாள் ஜனாதிபதியும் அக் கட்சி யின் தலைவருமான மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள சு.க அமைப்பாளர்களை கொழும் பில் நேற்று முன்தினம் சந்தித்த போது அவர் இதனைக் கூறினார்.

“ஒரு வலுவான அரசாங்க த்தை அமைப்பதற்கு சு.க. தனது முழு ஆதரவையும் ஜனாதிபதிக்கு வழங்க வேண்டும். அந்த இலக்கை அடைய, வடக்கு மற்றும் கிழக்கி லுள்ள தமிழர்கள் மற்றும் முஸ் லிம்களின் நம்பிக்கையும் ஒத்து ழைப்பும் மிக முக்கியமானது.

எனவே, எதிர்வரும் தேர்த லில் அந்த பகுதிகளிலுள்ள மக்க ளின் ஆதரவை உறுதிப்படுத்த சு.க. தேர்தல் அமைப்பாளர்கள் கடுமையாக உழைக்க வேண டும்” என அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சந்தேகநபரான இளைஞன் தடுப்புக் காவலில் உயிரிழப்பு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் குழுவுடன் தொடர்புபட்டிருந்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்ஙீகப்பட்டி ருந்த இளைஞன் ஒருவர் தடுப்புக்காவலில் உயிரிழந்தார்.

காத்தான்குடியை சேர்ந்த குறித்த இளைஞரின் குடும்பத்தினருக்கு இந்த தகவல் நேற்று முன்தினம் வெள்ளிக்கி ழமை தெரிவிக்கப்பட்டது.

ஆனால் உயிரிழந்தமைக்கான காரணம் தொடர்பாக எந்தவொரு தகவலும் இது வரை வெளியாகவில்லை.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பேரில் உயிரிழந்த இளைஞ னின் சகோதரனும் தடுப்புக்காவலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கடன் சுமை அதிகரிப்பு

# 3 குழந்தைகளைக் கொன்று கணவன், மனைவி தற்கொலை

## விழுப்புரத்தில் சோகம்

(விழுப்புரம்)

விழுப்புரத்தில் பாலில் சயனைட் கலந்து கொடுத்து 3 குழந்தைகளை கொன்று கணவன், மனைவி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

விழுப்புரம் சித்தேரிக்கரை சலாமத் நகரைச் சேர்ந்தவர் அருண் குமார்(வயது 34). இவர் கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு சிவகாமிசுந்தரி (வயது 28) என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

இவர்களுக்கு பிரியதர்ஷினி(வயது4), யுவஸ்ரீ (வயது3), பாரதி(வயது1) ஆகிய 3 பெண் குழந்தைகள் இருந்தனர். அருண் குமார் அந்த பகுதியில் நகை பட்டறை வைத்து நகை செய்யும் தொழில் செய்து வந்தார். இவரது நகை பட்டறையில் 5 பேர் வேலை பார்த்து வந்தனர்.

இதனால் அவர் பல இடங்களில் கடன் வாங்கி தொழில் செய்தார். அதிலும் நஷ் டம் ஏற்பட்டது. கடன் கொடுத்தவர்கள் பண த்தை திருப்பி கேட்டனர். அருண்குமா ரால் பணத்தை கொடுக்க முடியவில்லை.

இதனை தொடர்ந்து அவர் 3 நம்பர் லொட்டரி சீட்டுகளை கட்டுக்கட்டாக வாங்கி னார். அதிலும் அவருக்கு பரிசுகள் விழ வில்லை. இதனால் மேலும் கடன் தொகை அதிகரித்தது. குடும்பம் நடத்த முடியாமல் தவித்தார். வாழ்க்கையில் விரக்தியடைந்த அவர் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தார்.

கடந்த வியாழக்கிழமை மாலை அருண் குமார் வீட்டில் இருந்து வெளியில் சென்றார். பின்பு சயனைடு வாங்கிக்கொண்டு வீட்டு க்கு வந்தார். இரவு 10 மணியளவில் அருண்குமார் பாலில் சயனைடு கலந்தார். அதன்பின்பு தனது மனதை கல்லாக்கி கொண்டு தனது 3 குழந்தைகளுக்கு கொடுத்தார்.

பால் குடித்த சிறிது நேரத்தில் 3 குழந் தைகளும் மயங்கி விழுந்தனர். அதன் பின்னர் சிவகாமிசுந்தரியும் அந்த பாலை குடித்தார். அவரும் சிறிது நேரத்தில் மய ங்கி விழுந்தார். அதன்பின்பு அருண்குமார் மதுவில் சயனைடு கலந்து குடித்து விட் டார்.

முன்னதாக 3 குழந்தைகளுக்கும் பாலில் சயனைடு கலந்து கொடுத்து விட்டு நானும், மனைவியும் தற்கொலை செய்து கொண்டோம் என அருண்குமார் செல் போனில் காணொலியைப் பதிவு செய்து அவரது நண்பர்களுக்கு அந்த காணொ லியை அனுப்பி வைத்தார்.

இந்த காணொலியை பார்த்து அதிர்ச் சியடைந்த நண்பர்கள் அவரது வீட்டுக்கு விரைந்து சென்றனர். அப்போது அங்கு அருண்குமார், அவரது மனைவி சிவகாமி சுந்தரி மற்றும் அவரது குழந்தைகள் பிரியதர்ஷினி, யுவஸ்ரீ, பாரதி ஆகியோர் மயங்கி கிடந்தனர்.

அருண்குமார் குடும்பத்துடன் தற் கொலை செய்துகொண்ட தகவல் அறிந்த தும் அவரது உறவினர்கள் அங்கு திரண் டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட் டது.

இந்த சம்பவம் தொடர்பாக விழுப்புரம் தாலுகா பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)


YAMAHA வழங்கும் புத்தாண்டு பரிசு மழை

சிறப்பு விலைத் தள்ளுபடி 15,000/= முதல் 125,000/= வரை

Fascino Scooter
ஒன்றை கொள்வனவு செய்து



20000/= பெறுமதியான Oppo AIK 2 Gb Ram 32 Gb Memory ஒன்றை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்

Fz-SV.3
ஒன்றை கொள்வனவு செய்து



25,000/= பெறுமதியான Oppo A5S (Finger Print) ஒன்றை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்

நிபந்தனைக்குட்பட்டது:
தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு மட்டுமே...

இச் சலுகை டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ் இடம் இருந்து மட்டுமே.
உடன் பதிவுக்கு: 077 554 5843/077 662 3824
காட்சியறை: 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-8529)



JAFFNA MEDICAL ASSOCIATION
ANNUAL GENERAL MEETING-2020

NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Wednesday, 29th January 2020 at 11.00 a.m at the Audutorium of Medical Students' Hostel, Jaffna, for the following purposes.

1. To receive and consider the Annual report of the committee of Management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2019 and report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
3. To elect the committee of management for year 2020.
4. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

By order of the committee of management

Honorary Secretary
15th December 2019

(1459)

# தேர்தலுக்குப் பின் கட்சித் தலைமையை சஜித்துக்கு வழங்குவது முட்டாள்தனம்

## அஜித் பி பெரேரா அழுத்தம் திருத்தம்



(பண்டாரகம)

**எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க தகுதி பெற்றுள்ள சஜித் பிரேமதாஸவுக்கு கட்சித் தலைவர் பதவியை வழங்குவதில் யாருக்கும் பிரச்சினையாக இருக்காது என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். அத்துடன் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் கட்சித் தலைமைப் பதவியை அவருக்கு வழங்குவதாக தெரிவிப்பது முட்டாள்தனமான வாதமாகும். அதில் எந்தப் பயனும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.**

பண்டாரகமயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஜித் பிரேமதாஸவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாவிட்டாலும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக, எதிர்க்கட்சிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்.

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் பிரதம வேட்பாளராக எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப் படுத்தி சஜித் பிரேமதாஸவை நிறுத்த அனைவரதும் இணக்கம் இருக்கின்றது.

நாட்டின் ஜனாதிபதியாகப் போட்டியிடுவதற்கு முதிர்ச்சி பெற்றுள்ள சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பதற்கு, அடுத்த பாராளுமன்றத் தேர்த்லில் பிரதமர் வேட் பாளராக்கும் அளவுக்கு தகுதி இருக்குமானால், கட்சியின் தலைவராக நியமிப்பதற்கு யாருக்கும் பிரச்சினையாக இருக்காது.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் புதிய தலைவர் ஒருவர் தேவை என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விடயமாகும். அந்தத் தலைவர் சஜித் பிரேமதாஸ மாத்திரமே என்பது முழு நாடும் அறிந்த விடயமாகும். ரணில் விக்கிரசிங்க நீண்ட காலம் இந்த நாட்டில் பிரதமராக இருந்துள்ளார்.

கட்சியின் தலைவராக மற்றும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்துள்ளார். அதனால் தற்போது அவர் அரசியலில் புதிய தலைவர் ஒருவருக்கு சந்தர்ப்பத்தை வழங்கி ஒதுங்கிக்கொள்ள வேண்டும்.

அத்துடன் கட்சியின் தலைமைப் பதவியை அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதாக தெரிவிப்பது, அடி முட்டாள்தனமான வாதமாகும். அதில் எந்தப் பயனும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சாரதிக்கு தூக்க கலக்கம்

# 50 அடி பள்ளத்திற்கு பாய்ந்த லொறி

## இருவர் படுகாயம்



(ஹற்றன்)

நுவரெலியாவிலிருந்து கொழும்பு பகுதிக்கு மரக்கறி வகைகளை ஏற்றிச்சென்று இறக்கிவிட்டு மீண்டும் நுவரெலியா நோக்கிப் பயணித்த லொறி ஒன்று விபத்துக்குள்ளானது.

நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் டெவன் பகுதியில் வைத்து, குறித்த லொறி வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக திம்புள்ள-பத்தனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் சாரதிக்கு தூக்க கலக்கம் ஏற்பட்டதன் காரணமாக அவரால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனமையால் இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த லொறியில் பயணித்த, சாரதியும் உதவியாளரும் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்து குறித்த, மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# ஸ்மாட் போன் தொடர்பான பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தால் ஸ்மாட் போன்களுக்கான மென்பொருள் தொடர்பான பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறிகள் நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஏழு நாட்களுக்கு தினமும் காலை 9 மணியளவில் தம்பசிட்டி சதா வதானி வாசிகசாலைக்கு அண்மையிலுள்ள பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இப் பயிற்சி நெறியில் பங்கு பற்ற விரும்புபவர்களை J1, J2, iphone 4, iphone4s, iphone5g, iphone5s ஏதாவதொரு ஸ்மாட் வகையான போனுடன் பயிற்சியில் கலந்து கொள்ளுமாறும் மேலதிக தகவ ல்களுக்கு 021 222 2288 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ் வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ-5)

# திருவருட்பா ஓதலும் திருவாசக முற்றோதலும்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மீசாலை வடக்கு வேம்பிராய் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தில் திருவருட்பா ஓதுதலும் திருவாசகம் முற்றோதலும் நாளை மறுதினம் 17 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வரை அதிகாலை 4.30 மணி முதல் காலை 7 மணிவரை திருவருட்பா ஓதுவதற்கும் காலை 7 மணி முதல் திருவாசகம் முற்றோதுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இதில் கலந்து கொள்பவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப் படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-5)

# ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் கொழும்பு துறைமுகத்திற்கு விஜயம்

(கொழும்பு)

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் MOTEGI Toshimitsu மற்றும் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் வீதி, பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பு துறைமுகத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.



இவ்விஜயத்தின் பொழுது துறைமுக கட்டுப்பாட்டு கோபுரத்தை இருவரும் பார்வையிட்டனர். இவ்விஜயத்தில் துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் கப்டன் அத்துல ஹேவாவித்தாரண மற்றும் சபையின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ். பிரதேச செயலகத்தால் விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பகுதிகளில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பிரதேச ரீதியான விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ். சுதர்சன் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் இன்று 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜே/81 கோட்டை மீனாட்சி அம்மன் வீதியில் விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (இ-10)

# இடை நிறுத்தப்பட்ட பணியாளர்களின் நிலை தொடர்பில் அமைச்சரவையில் எடுத்துரைப்பேன் - டக்ளஸ் உறுதி

(மாளிகாவத்தை)

பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்களின் எதிர்காலம் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடுவதாக கடற்றொழில் நீர் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்றுப் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட வடக்கு-கிழக்கு பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த போதே இவ்வாறு உறுதிமொழி வழங்கினார்.

கடந்த கால ஆட்சியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட காலப் பகுதியில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த சுமார் 2500 பேர் உட்பட நாடளாவிய ரீதியில் சுமார் 7500 பேர் பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.




எனினும், குறித்த நியமனங்கள் தேர்தல்கள் சட்டத்தை மீறும் வகையில் அமைந்திருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து அனைத்து நியமனங்களும் இடை நிறுத்தப்பட்டன.

இந்நிலையில், தற்போது புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள நிலையில் இடைநிறுத்தப்பட்ட நியமனங்கள் தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமையால் தாம் நிர்க்கதி நிலையில் இருப்பதாக குறித்த பிரதிநிதிகள் அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஏற்பட்ட பின்னடைவு காரணமாக எந்தவொரு விடயத்தையும் ஆணித்தரமாக பேச முடியாமல் இருப்பதாகவும் எனினும், அமைச்சரவையில் குறித்த நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டமையால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை எடுத்துரைத்து உரிய தீர்வினைப் பெறுவதற்கு முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## புகையிரதம் - கார் மோதி விபத்து

### தெய்வாதீனமாக உயிர்பிழைத்த இளைஞர்கள்





(சாவகச்சேரி)

சாவகச்சேரி -அரசடிச் சந்திப் பகுதியிலுள்ள புகையிரதக் கடவையில் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் கார் அகப்பட்ட போதிலும் அதில் பயணித்த இரு இளைஞர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த புகையிரதத்துடன் சாவகச்சேரிப் பகுதியில் இருந்து வந்த கார் அரசடிச் சந்தி ஊடாக தமோதரம்பிள்ளை வீதியால் பயணிக்க முற்பட்ட போது மோதியதில் இவ் விபத்து சம்பவித்தது.

புகையிரதக் கடவையில் அபாய சமிக்ஞை விளக்கு ஒளிர்ந்த போதிலும் சாரதியின் அவதானக் குறைவு காரணமாக விபத்து நேர்ந்தது. இதன் போது புகையிரதம் காரின் முன்பகுதியில் மோதி புகையிரதப் பாதையிலிருந்து காரை வெளியே தள்ளியது.

இதனால் காரில் பயணித்தவர்கள் காயங்கள் எதுவுமின்றி தெய்வாதீனமாக உயிர் பிழைத்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

## கொழும்புக் கம்பன் கழகம் நடத்தும் "நிருத்தோற்சவம்" ஆடல்வேள்வி

(கொழும்பு)

கொழும்புக் கம்பன் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் நாட்டியவிழாவான 'நிருத்தோற்சவம்' - 2019 எனும் பெயரிலான ஆடல் வேள்வி இம்மாதம் 27,28,29 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் தினமும் மாலை 6 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இவ் ஆடல்வேள்வியில் கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயமும் "பொன்னாலை சந்திர பரதகலாலயம்", "நாட்டியகலாகேந்திரா" ஆகியவையும் கலந்து கொள்கின்றன.

இவ்விழாவின் நடன நிகழ்ச்சிகளை நடன ஆசிரியர்களான ஸ்ரீமதி ஷாலினி வாகீசன், திருமதி திவ்யா சுஜேன், திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன், திருமதி கிருஷாந்தி ரவீந்திரா, திருமதி பவானி குகப்பிரியா, திருமதி தயானந்தி விமலச்சந்திரன் ஆகியோர் வழங்கிச் சிறப்பிக்கவுள்ளனர். (இ-5-7)

## வடக்கு - கிழக்கில் தேசிய பாடசாலைகள்; மாகாண சபைகளின் அதிகாரங்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் செயற்படவேண்டும்

### முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கில் தேசிய பாடசாலைகள் அமைக்கும் விடயத்தில் மாகாண சபைகளின் அதிகாரங்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் வலியுறுத்தினார்.

பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் சகல வசதிகளையும் கொண்ட 3 பாடசாலைகளை அபிவிருத்தி செய்து, அந்தப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மேம்படுத்துவதன் மூலம் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 வரையில் அதிகரிப்பதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதேபோன்று அனைத்து மாவட்டங்களுக்கும் மும்மொழி கற்பிக்கப்படுவதை உறுதி செய்யும் அனைத்து வசதிகளையும் கொண்ட தேசிய பாடசாலைகளை உருவாக்குவதற்கும் அடுத்த இரண்டு வருட காலப்பகுதிக்குள் இவ்வாறான 20 பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கும் கல்வி அமைச்சு திட்டமிடப்பட்டது.

இதற்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் மாகாணங்களின் அதிகாரங்களுக்கு பங்கம் ஏற்படுத்தாத வகையில் தேசிய பாடசாலைகளுக்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எமது ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாணத்தில் சில பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டன. வடக்கிலும் பல பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றுவதற்கு நான் நடவடிக்கையை எடுத்த போது பெரும்பான்மையான புத்திஜீவிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை மத்திய அரசு பெறும் முயற்சியாக இது அமையும் என்றும் அவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

இருந்தபோதிலும் தொகுதிக்கு ஒரு பாடசாலையை தெரிவு செய்து அதற்கான வளத்தைப் பெருக்கி அதனை தேசிய பாடசாலையாக மாற்ற முயற்சி எடுத்திருந்தோம். ஆனாலும் புத்திஜீவிகளின் ஆலோசனை காரணமாக அந்தச் செயற்பாட்டை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தோம்.

தற்போது இடைக்கால அரசாங்கமானது, பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் 3 பாடசாலைகளைத் தெரிவு செய்து தேசிய பாடசாலையாக மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் இத்தகைய செயற்பாடு மாகாணங்களின் அதிகாரத்தை மத்திய அரசாங்கம் பறிப்பதாகவே அமையும். எனவே தொகுதிக்கு ஒரு பாடசாலையைத் தெரிவு செய்து அவற்றின் வளங்களைப் பெருக்கி தேசிய பாடசாலையாக மாற்றுவது குறித்து மீள பரிசீலிக்கலாம். ஆனால் முழுமையாக பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டால் அது மாகாணங்களுக்கான அதிகாரத்தை பறிப்பதாகவே அமையும்.

இல்லாவிடின் வடக்கு- கிழக்கில் மாகாண பாடசாலைகளை, மாகாண சபை அதிகாரத்துக்குள்ளேயே வைத்துக்கொண்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் இவ்வாறு 3 பாடசாலைகளை அபிவிருத்தி செய்தால் அது பயனளிக்கக்கூடியதாக இருக்கும்.

வடக்கில் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் தொகுதிக்கு ஒரு பாடசாலையை தேசிய பாடசாலையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

உதாரணத்துக்கு வட்டுக்கோட்டை தொகுதி, காங்கேசன்துறை தொகுதி, பருத்தித்துறை தொகுதி, ஊர்காவற்றுறை தொகுதி, கோப்பாய் தொகுதி போன்றவற்றில் தேசிய பாடசாலைகள் இல்லாத நிலை காணப்படுகிறது.



அத்தகைய இடங்களில் பாடசாலை ஒன்றைத் தெரிவு செய்து வளங்களைப் பெருக்கி அதற்கான நடவடிக்கையை எடுக்க முடியும்.

அதுவும் அப்பகுதி புத்திஜீவிகளுடனும் அரசியல் தலைவர்களுடனும் கலந்துரையாடியே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரையில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் பெரும்பான்மையான பாடசாலைகள் வளங்களற்ற பாடசாலைகளாகவே உள்ளன.

காணி வசதி, உள்ளக வசதிகள் என்பன அந்தப் பாடசாலைகளில் இல்லை. எனவே இவ்வாறான பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக பெயரளவில் மட்டும் மாற்றுவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள 'அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த நிலையில் பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் 3 பாடசாலைகளை தெரிவுசெய்து அனைத்தையும் தேசிய பாடசாலைகளாக மாற்றும் செயற்பாடு என்பது அதிகாரத்தை மத்தியில் குவிப்பதற்கான நடவடிக்கையாக அமைந்துவிடும்.

இதேபோன்று மும்மொழிப் பாடசாலைகளை அமைக்கும் விடயத்திலும் வடக்கு-கிழக்கு தொடர்பாக விசேட ஆலோசனை நடத்தப்பட வேண்டும்.

புதிய கல்வி அமைச்சர் இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தீவிரமடையும் டெங்குத்தாக்கம்; வவுனியாவில் விசேட செயற்றிட்டம்





(நெளுக்குளம்)

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, வவுனியா வர்த்தகசங்கம், பொலிஸ் திணைக்களம், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்களை உள்ளடக்கியதான மாபெரும் டெங்கு ஒழிப்பு மேற்பார்வை நடவடிக்கை ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது டெங்குத் தாக்கம் அதிகம் உள்ள வவுனியா நகரத்தை உள்ளடக்கிய, வீடுகள், வர்த்தக நிலையங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களுக்கு சென்ற உத்தியோகத்தர்கள் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அடையாளப் படுத்தியதுடன், நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், விழிப்புணர்வுக் கருத்துரைகளும் வழங்கப்பட்டன.

வவுனியாவில் டெங்குத் தொற்று அதிகரித்திருக்கும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் உரிய திணைக்களங்கள் மற்றும் பொதுஅமைப்புகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-299)




# டெங்கை ஒழிக்க குழு அமைப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் தீவிரமடைந்துள்ள டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியா வர்த்தக சங்கத்தினருடனான கலந்துரையாடல் வவுனியா சுகாதார அதிகாரி பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பொதுச்சுகாதார பரிசோதகர் சிவரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் வவுனியா வர்த்தக சங்க உறுப்பினர்கள், வர்த்தகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா நகரத்தினை டெங்கு அற்ற பிரதேசமாக மாற்றும் நோக்கில் சமூகத்தினை ஒன்று திரட்டி அவர்கள் மூலமாக டெங்கு ஒழிப்பினை முன்னெடுப்பதுடன் வவுனியா வர்த்தக சங்கத்தினருடன் இணைந்து வாரத்தில் ஒருநாள் வர்த்தக நிலையங்கள், வீடுகள் போன்ற இடங்களை பார்வையிடுவதுடன் டெங்கு கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு திட்டமிடல் செயற்றிட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன் போது வர்த்தகர்கள், வைத்தியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், பொதுமக்கள் அடங்கிய 9 குழுவினை அமைத்து வாரத்தில் ஒருநாள் வவுனியா நகர் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (9-250)

# உரிய அறிவித்தலின்றி மின்சாரம் துண்டிப்பு

## மக்கள் விசனம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்றுக் காலை 8மணிமுதல் நகர் பகுதி உட்பட பல பகுதிகளில் ஒழுங்கான முறையில் அறிவித்தல் வழங்கப்படாது மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதியிலுள்ள வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர்.

மின்சார சபையின் இச் செயற்பாடு காரணமாக பல வியாபார நிலையங்களில் வியாபாரம் மந்த கதியில் இடம்பெறுவதாக வியாபார நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

திடீரென முன் அறிவித்தல் ஒழுங்கான முறையில் வழங்கப்படாது மின்சாரம் நிறுத்தப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகவும் வவுனியாவில் பல இடங்களில் இவ்வாறாக திடீரென முன்னறிவித்தலின்றி மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளதால் பல பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்படுவதுடன் இச் செயற்பாட்டினால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் உரிய அதிகாரிகள் மின்தடை குறித்து ஊடகங்களுக்கும் உரிய முறையில் முன்னறிவித்தல் விடுத்து மின்துண்டிப்பை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-299)

# தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல்






(பரந்தன்)

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் தமிழர் தாயகத்தின் பல இடங்களிலும் இடம்பெற்றன.

அந்த வகையில் நேற்றைய தினம் கிளிநொச்சியிலும் இடம்பெற்றது.

கிளிநொச்சியில் உள்ள தமிழரசுக் கட்சியின் அறிவக அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து விளக்கேற்றி மலர் அஞ்சலி செய்யப்பட்டதுடன் நினைவுரைகளும் இடம்பெற்றன.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான குருகுலராஜா, பசுபதிப்பிள்ளை, பிரதேச சபை தவிசாளர்களான வேழமாலிதன், சுரேன், பிரதேச சபை உறுப்பினர்களான ஜீவராஜா, சாந்தி, சிவமோகன், நந்தகுமார், சத்தியானந்தன், கலைவாணி மற்றும் கட்சி ஆதரவாளர்கள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-312)

# முல்லைத்தீவில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் அமைப்பதற்கான இடங்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை

## பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள பண்ணையாளர்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை அமைப்பதற்கான இடங்கள் எவையும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் கௌரிதிலகன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பராமரிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, வெலிஓயா ஆகிய பகுதிகளில் வாழும் சுமார் அறுபது வீதத்திற்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரமாக கால்நடை வளர்ப்பும் விவசாயமும் காணப்படுகின்றது.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்களும் விவசாயிகளும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறு பயிர்ச் செய்கை காலங்களில் கால்நடைகளைப்பராமரிப்பதற்கான மேய்ச்சல் தரவைகளை அமைத்துத் தருமாறு தொடர்ச்சியான கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றபோதும் இதுவரை மேய்ச்சல் தரவைகள் அமைத்துத்தரப்படவில்லை எனவும் இதனால் தமது கால்நடைகளை வேறு இடங்களிலும் குளங்களின் அலைகரைப்பகுதிகளிலும் வைத்து பராமரிக்கும் போது குளங்களில் நீர் மட்டம் உயரும் போது அவற்றை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்படும். அதனால் தாங்கள் சிரமங்களை எதிர் கொள்வதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளரிடம் வினவியபோது, முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது 85 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. இதற்கான மேய்ச்சல் தரவைகள் என்பது பாரிய பிரச்சினையாகவுள்ளது.

மேய்ச்சல் தரவைகளை அமைப்பதற்கான இடங்களை அடையாளப்படுத்தி அதனை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் அடையாளப்படுத்தப்படுகின்ற இடங்கள் வனவளத்திணைக்களத்திற்குச் சொந்தமான இடங்களாக இருப்பதனால் இதனை விடுவிப்பதில் இழுபறிநிலை காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# பாடசாலை ஆரம்ப திகதி மாற்றம்

**(கிளிநொச்சி)**

**கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தர (2019) பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளதால் 2020 ஆம் ஆண்டிற்கான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகும் என வித்தியாலய அதிபர் மு.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஜ-5)**

என்னைத் துதி பாடுகிறவர்களைவிட என்னைக் கடுமையாக விமர்சிப்பவர்களால் நான் அதிகம் நன்மை பெற்றுள்ளேன். ~ காந்தியடிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நித்தியானந்தா சுவாமிகளின் கைலாசா உருவாக்கம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊடகங்களையும் அண்மைக்காலமாக ஆக்கிரமித்திருக்கக்கூடியவர் சுவாமி நித்தியானந்தா அவர்கள்.

கடந்த சில வருடங்களாக நித்தியானந்தா சுவாமி தொடர்பில் எழுந்த சர்ச்சைகள் காரணமாக அவர் பற்றி எழுதினால் மட்டுமே ஊடகங்களின் விற்பனை தாராளமாக இருக்கும் என்ற அடிப்படையில், நித்தியானந்தா சுவாமிகளைப் பற்றி தமிழகத்தில் எழுதாத ஊடகங்கள் இல்லை எனலாம்.

சுவாமி நித்தியானந்தா மிகச்சிறந்த ஆன்மிக உரையாளர். அவரின் சொற்பொழிவைக் கேட்பதற்காக இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்றனர்.

அவர் மீது ஆன்மிக பக்தி கொண்ட இலட்சோப இலட்சம் மக்கள் சுவாமிகள் தொடர்பான விமர்சனங்களை கவனத்தில் எடுக்கவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை சுவாமி நித்தியானந்தா கூறுகின்ற ஆன்மிக தத்துவங்களை செவிமடுத்து அதன்வழி முத்திப் பேரின்பம் பெறுதல் என்பதைத் தவிர அவர்களிடம் வேறு எந்த நினைப்பும் இல்லை.

ஆனாலும் நாளுக்கு நாள் சுவாமி நித்தியானந்தா பற்றிய சர்ச்சைகளோடு இந்திய நாளேடுகள், சஞ்சிகைகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

ஒரு பொதுநிலையில் நின்று நித்தியானந்தா பற்றிய ஊடகங்களின் செய்திகளையும் கட்டுரைகளையும் பார்க்கும்போது ஊடக ஒழுக்கவியல் மீறப்படுகிறதோ என்று கூட எண்ணத் தோன்றும்.

தவிர, நித்தியானந்தா இந்து சமயத்துறவியாக இருப்பதன் காரணமாகவே இத்துணை விமர்சனங்கள் எழுகின்றன.

அவர் வேறு சமயமாக இருந்தால், ஊடகங்கள் தங்களை சுய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கும் என்று கூறுவோரும் உளர்.

எதுஎவ்வாறாயினும் சுவாமி நித்தியானந்தாவின் பக்தர்கள் அவர் மீது மிகுந்த பக்தி வைராக்கியம் கொள்வதை ஊக்குவிப்பதாகவே ஊடகங்களின் செயற்பாடுகள் உள்ளன என்பதும் நிராகரிக்க முடியாத உண்மை.

எதுஎவ்வாறாக இருந்தாலும் இப்போது சுவாமி நித்தியானந்தா தென்அமெரிக்காவிலுள்ள தீவு ஒன்றை வாங்கியுள்ளார் என்பதும் அதற்கு **கைலாசா** என்று நாமம் சூட்டியுள்ளதுமான தகவல்களே பரபரப்பாகியுள்ளன

வெளிநாட்டில் தீவு ஒன்றை வாங்கி அதற்கு கைலாசம் எனறு பெயர் சூட்டுகின்றளவில் சுவாமி நித்தியானந்தாவின் ஆளுமைத்திறன் பற்றியோ ஆன்மிக பலம் பற்றியோ ஊடகங்கள் தகவல் வெளியிடுவதாக இல்லை.

மாறாக அவரைத் தூற்றுவதிலும் விரசமாக எழுவதிலுமே ஊடகங்களின் பங்குள்ளது.

எம்மைப் பொறுத்தவரை சுவாமி நித்தியானந்தாவின் தனி மனித ஆளுமையும் ஆன்ம பலமும் ஒழுக்க விழுமியத்தினூடாக வெளிப்படுமாக இருந்தால் உலகில், இந்து மதத்துக்கான மிகப் பெரும் பலமாக இருக்கும்.

அந்தவகையில் நித்தியானந்த சுவாமிகள் குறித்த விமர்சனங்களை ஒருபுறம் வைத்துவிட்டு, வெளிநாட்டில் உள்ள தீவொன்றை வாங்கி அதற்கு கைலாசா என்று பெயரிட்டு அறிவிப்பதென்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம் என்பதை மட்டும் இங்கு நாம் கூறிக் கொள்ளலாம்.

## டெங்கு அனர்த்த காலப்பகுதிக்குள் இராணுவத்தின் உதவி பெறப்படும்

### அங்கஜன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில நடைமுறைப்படுத்தப்படுகின்ற டெங்கு அனர்த்த காலப்பகுதியில் இராணுவத்தின் உதவியையும பெறத் தீர்மானித்துள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் இம்மாத இறுதிவரை யாழ்.மாவட்டத்தில் டெங்கு அபாய பிரதேசங்களாக இனம காணப்பட்ட பகுதிகளை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரும் முகமாக விழிப்புணர்வு மற்றும் சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட யாழ். மாநகர சபைப் பகுதியை உள்ளடக்கிய குருநகர் பகுதிகளில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக சகல பிரதேச செயலகங்களிலும் குறித்த செயற்பாடு விரிவுபடுத்தப்பட்டுள்ளதோடு அறிவுறுத்தல்களை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இச் செயற்பாட்டிற்கு யாழ்.மாநகர சபைச் சுகாதாரப் பிரிவும் மற்றும பொலிஸார், பிரதேச செயலக அதிகாரிகள் தமது முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

ஆகவே எதிர்காலத்தில் டெங்கு அற்ற மாவட்டமாக யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாகவும் டெங்கு நடவடிக்கையை வினைத்திறனாக்குவதற்கும் இராணுவத்தின் உதவிகளும் பெறப்படவுள்ளதாக அங்கஜன்எம்.பி மேலும் தெரிவித்தார். (ம-3,10)

## பாடசாலை பரிசில் நாள் நாளை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் பரிசில் தினம் நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரி திறந்த வெளி அரங்கில் அதிபர் தி.மதிவதனன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின செயலாளர்இ.இளங்கோவன், கௌரவ விருந்தினர்களாக தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## தேசிய பாடசாலையை ஆயிரமாக உயர்த்துவதற்கு

### 1000 பில்லியன் நிதி தேவை கல்வி அமைச்சு மதிப்பீடு

(கொழும்பு)

நாட்டில் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்த அரசு தீர்மானித்துள்ள நிலையில் அதற்கு 500 பில்லியன் ரூபாய் தொடக்கம ஆயிரம் பில்லியன் ரூபாய் வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எம்.எஸ்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

"அரசின் ஆயிரம் தேசிய பாடசாலைகள் திட்டத்தால் கிராமங்களில் உள்ள 1 இலட்சத்து 30 ஆயிரம மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் நன்மை கிடைக்கவுள்ளது.

தற்பொழுது உள்ள பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துவதற்கு 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

புதிதாக தேசிய பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்கு அமைவாக இதற்கான திட்டத்தை முழுமைப்படுத்துவதற்காக 500 பில்லியன் ரூபாய் தொடக்கம் 1,000 பில்லியன் ரூபாய் வரையில் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது" என்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார். (ம-3)

## காற்றாலை பிரச்சினை தொடர்பில் சாவகச்சேரியில் மூவர் கைது

(கொடிகாமம்)

மறவன்புலவு காற்றாலை பரச்சினை தொடர்பாக விசாரணைக்கு வருமாறு அழைத்த சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் மற்றும் மூன்று பெண்களையும் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

காற்றாலை மின் உற்பத்தியை நிறுத்தக்கோரி மறவன்புலவு பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில ஏற்பட்ட தடியடி, வாள் வெட்டுத் தொடர்பாக விசாரணைக்கு வருமாறு அழைத்துள்ளனர்.

காற்றாலை நிறுவனத்தினர் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் மீது எல்லா பிரச்சினைக்கும், சம்பவங்களுக்கும் பொறுப்பாக இருந்தார் என்று கூறி பொலிஸில் முறைப்பாடு செய்தனர் என்றும் விசாரணைக்கு வருமாறு கூறிவிட்டு விசாரணைக்கு சென்ற போது சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் மற்றும் மூன்று பெண்களையும் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-3,114)

## இரு மோட்டார் சைக்கிள்கள் மிருசுவிலில் மோதி விபத்து

### இரண்டு பேர் படுகாயம்

(கொடிகாமம்)

ஏ9 வீதியில் மிருசுவில் றோ.க.த.க. பாடசாலைக்கு அருகாமையில் நேற்று மதியம் 1.30 மணிக்கு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அருந்தவராசா மதுசன் (வயது 20) முத்துக்குமார் குணவதி (வயது 32) ஆகியோர் காயமடைந்த நிலையில் கொடிகாமம் (மிருசுவில்) பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அவசர அமபுலன்ஸ் சேவை ஊடாக யாழ் போதனாவைத்தியசாலைகக்கு மாற்றப்பட்டுள்ளனர் இது தொடர்பில் கொடிகாமம் பொலிசார் மேலதிக வசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,114)

## நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சமூக மற்றும் குடும்ப மருத்துவத்துறை டாக்டர் ந.சிவராஜாவின் நினைவுப் பேருரை இன்று 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மருத்துபீட ஹூவர் அரங்கில் இடம்பெறும். (இ-5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**அனுபவித்து அனுபவித்து புத்தி பெற அறுபது ஆண்டுகள் வேண்டும். அனுபவித்தவர்களிடம் புத்திபெற அரைநாள் போதும்.**

**- கி.ஆ.பே. விசுவநாதம்**

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- இறைவன் நம்மிடம் அன்பு கொண்டிருப்பது போல் நாமும் பிறரிடம் அன்பு கொண்டவராக இருக்க வேண்டும்.
- உன் சகோதரர்கள் ஏழ்மைப்பட்டு இளைத்து போனால், அவர்களுக்கு உதவ வேண்டும். அவர்கள் அன்னியர் போலும் விருந்தினர் போலும் உன்னோடு வாழட்டும்.
- நீ நெருங்கிக் கொண்டிருக்கும் பாதாளத்தில் எவரும் செயல்புரிவதுமில்லை, சிந்தனை செய்வதுமில்லை.நீங்கள் அச்சத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் மீட்புக்காக உழைத்து வாருங்கள்.
- அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலை வாழ்வு தரும் அழியாத உணவுக்காகவேஉழையுங்கள்.
- கடவுளுக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து, கடவுளின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்.
- நீங்கள் நன்மை செய்வதில் ஞானம் உடையவர்களாயும், தீமை என்றால் என்ன என்றே தெரியாத கபடமற்றவர்களாயும் இருக்க வேண்டும்.
- தூங்கிக் கொண்டேயிருப்பதை நாடாதே. கண் விழித்திரு, உனக்கு வயிறார உணவு கிடைக்கும்

# லாலிகா காற்பந்து லீக் தொடரின் இந்தியாவுக்கான முதல் தூதராக ரோஹித்




ஸ்பெயினில் நடைபெறும் கால்பந்து கழகங்களுக்கிடையிலான புகழ்பெற்ற லாலிகா கால்பந்து லீக் தொடரின், இந்தியாவுக்கான முதல் தூதராக இந்திய கிரிக்கெட் அணியின் துணை தலைவர் ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

கால்பந்துப் போட்டிகளுக்கு அந்த விளையாட்டோடு தொடர்பில்லாத இன்னொரு விளையாட்டு வீரர் தூதராக நியமிக்கப்படுவது இதுதான் முதல் முறையாகும்.

கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து லாலிகா கால்பந்து லீக்கில் உள்ள பிரபல அணிகளான பார்சிலோனா, ரியல் மெட்ரிட் கழக அணிகள் இந்தியாவில் கால்பந்து விளையாட்டைப் பரப்ப பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

இதற்கமைய கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் அலுவலகத்தைத் திறந்து மக்களிடம் கால்பந்து விளையாட்டைப் பரப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக ரோஹித் சர்மாவைத் தூதராக நியமித்து கால்பந்து விளையாட்டைப் பரப்பத் திட்டமிட்டுள்ளது.

லாலிகா கால்பந்து லீக்கின் இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டது குறித்து ரோஹித் சர்மா கூறுகையில், "இந்தியாவில் கால்பந்து விளையாட்டுக்கு உலகளாவிய வளர்ச்சி இருக்கிறது, மக்களிடம் வரவேற்பும் இருக்கிறது. இதைத் தூங்கிக்கொண்டிருக்கும் அசுரன் என்று கருதத் தேவையில்லை. கடந்த 5 ஆண்டுகளாக இந்தியாவில் கால்பந்து விளையாட்டுக்கான வளர்ச்சி அதிகரித்து வருகிறது. கால்பந்து விளையாட்டின் மோகமும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

லாலிகா கால்பந்து தொடரின் இந்தியத் தூதராக நான் நியமிக்கப்பட்டது எனக்குப் பெருமையாக இருக்கிறது. ஸ்பெயின் நாட்டுக் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர்களைப் பார்ப்பதும் எனக்கு ஊக்கமாக அமையும். இந்தியாவில் உள்ள கால்பந்து ரசிகர்களை லாலிகாவின் தூதராகச் சென்று சந்திப்பதில் ஆர்வமாக இருக்கிறேன் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# ரி-20 கிரிக்கெட் அணியிலிருந்து ஜோ ரூட் அதிரடி நீக்கம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாப்பிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து மூன்று வகை கிரிக்கெட் தொடரிலும் விளையாடுகிறது. முதலில் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறுகிறது. அதன்பின் பெப்ரவரி மாதத்தில் ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது.

நேற்று ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ரி-20 அணியில் ஜோ ரூட்டுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அடுத்த வரும் ரி-20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் நடக்கிறது.


இந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்கான சிறந்த காம்பினேசனை உருவாக்க ஒவ்வொரு அணியும் முயற்சி செய்து வருகிறது.

அதனடிப்படையில் ஜோ ரூட் நீக்கப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், ஜோ ரூட்டின் ரி-20 கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக்குறி என்றும் கூறப்படுகிறது.

தென்னாபிரிக்கா தொடருக்கான இங்கிலாந்து ரி-20 அணியில் இடம் பிடித்துள்ள வீரர்கள் விபரம்:-

1. மோர்கன் (கப்டன்), 2. மொயீன் அலி, 3. ஜாஃப்ரா ஆர்சர், 4. பேர்ஸ்டோவ், 5. பட்லர், 6. பேட் பிரவுன், 7. சாம் குர்ரான், 8. டாம் குர்ரான், 9. ஜோ டென்லி, 10. கிறிஸ் ஜோர்டான், 11. தாவித் மாலன், 12. மேத்யூ பார்கின்சன், 13. அடில் ரஷித், 14. ஜேசன் ராய், 15. பென் ஸ்டோக்ஸ், 16. மார்க் வுட் ஆகியோர் ஆவர். (ஐ)

# சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் மீண்டும் டுவைன் பிராவோ



ரி-20 கிரிக்கெட்டில் தனது துல்லியமான பந்து வீச்சால் 'டெத் ஓவர் ஸ்பெஷலிஸ்ட்' என பெயர் பெற்ற மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின், சகலதுறை வீரரான டுவைன் பிராவோ, மீண்டும் சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் களமிறங்க போவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையுடனான மோதலால், கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற டுவைன் பிராவோ, இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ண தொடரில், மேற்கிந்திய தீவுகள் அணியின் காத்திருப்போர் பட்டியலில் இடம்பெற்றிருந்தார்.

எனினும் அவர் உலகக்கிண்ண தொடரில் விளையாடவில்லை. இந்த நிலையில் தற்போது சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் களமிறங்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணிக்காக மீண்டும் சர்வதேச ரி-20 கிரிக்கெட்டிற்கு திரும்புவதை தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் தேர்வு செய்யப்பட்டால், ரி-20 கிரிக்கெட்டிற்காக முழுவீச்சில் களம் இறங்குவேன். மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட், ரசிகர்கள் மற்றும் இளைஞர்களுடன் விளையாடுவது உற்சாகமாக இருக்கும்" என மேலும் தெரிவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் தலைசிறந்த சகலதுறை வீரராக பார்க்கப்படும் 36 வயதான டுவைன் பிராவோ, இறுதியாக 2016ஆம் ஆண்டு அபுதாபியில் நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கெதிரான ரி-20 போட்டியில் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**


# முதலாவது டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் 166 ஓட்டங்களுக்கு சுருண்டது நியூசிலாந்து

அவுஸ்திரேலியா அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 166 ஓட்டங்களுக்கு சுருண்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், நியூசிலாந்து அணி, 250 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

நேற்று முன்தினம் பெர்த் மைதானத்தில் ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா அணி, முதல் இன்னிங்ஸிற்காக 416 ஓட்டங்களை குவித்தது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மார்னஸ் லபுஸ்சேகன் 143 ஓட்டங்களையும், ட்ராவிஸ் ஹெட் 56 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் ஆகியோர் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.




நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில், டிம் சவுத்தீ மற்றும் நெய்ல் வாக்னர் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும், கொலின் டி கிராண்ட்ஹோமி மற்றும் ஜீட் ராவல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய நியூஸிலாந்து அணி, போட்டியின் மூன்றாவது நாள் 166 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரோஸ் டெய்லர் 80 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில், மிட்செல் ஸ்டாக் 5 விக்கெட்டுகளையும், நாதன் லியோன் 2 விக்கெட்டுகளையும், பெட் கம்மின்ஸ், ஜோஷ் ஹெசில்வுட் மற்றும் மார்னஸ் லபுஸ்சகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தற்போது 250 ஓட்டங்களினால் முன்னிலை பெற்றுள்ள அவுஸ்திரேலியா அணி, தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வருகின்றது. (ஐ)

## தமிழர் உரிமை பெற சிங்கள...

தமிழ் மக்களுக்கான அடிப்படை உரிமைகளை பெற்றுக் கொடுக்க சிங்கள மக்கள் எதிர்ப்பு வெளியிடமாட்டார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மேலும் இனப்பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை இந்தியா ஒருபோதும் கைவிடாது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தனியார் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிங்கள மக்கள், தமிழ் மக்களின் தீர்வுக்கு எதிரானவர்கள் இல்லை. சிங்கள மக்களின் விருப்பமின்றி தமிழ் மக்களின் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

சிங்கள மக்களைப்போல தமிழ் மக்களுக்கு அடிப்படை உரிமைகள் இருக்கின்றன. அந்த உரிமைகளை வழங்கினால் தான், நாடு பொருளாதார ரீதியாக முன்னேற முடியும்.

அரசியல் அதிகாரப் பகிர்வினூடாகவே உலகில் உள்ள அனைத்து மக்களும், சமமாகவும், சமாதானமாகவும் வாழ்கிறார்கள். இது இலங்கைக்கு புதுமையான விடயமல்ல. சிங்கள மக்களுக்குப் பெரும்பான்மைத் தலைவர்கள் உண்மையைக் கூற வேண்டிய காலம் விரைவில் வரும்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்குக்கு அப்பால் சில மாவட்டங்களிலும் போட்டியிடும். மலையக மக்களின் பிரதிநிதிகளுடன் நாம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராகவே இருக்கிறோம்.

ஆனால் எங்களது ஒத்துழைப்பு காரணமாக அவர்கள் பலவீனமாகக் கூடாது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தந்தை செல்வா உருவாக்குவதற்கு மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதே காரணம். மலையகத்துக்கும் வடக்குக்குமான தொடர்பு ஆழமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எந்தவிதமான பிளவுகளும் இல்லை. ஐ.தே.க அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள், ஒற்றுமையின்மை, ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை அறிவிப்பதற்கு எடுத்துக் கொண்ட காலதாமதமே ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவின் தோல்விக்கு காரணம்.

புதிய அரசியலமைப்பு கொண்டுவருவதில் ஏற்பட்ட தோல்விக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கடந்த அரசாங்கத்தில் ஏற்பட்ட பிளவுகளே காரணம் எனவும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (ம-3)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 821
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 73,500,975/-
வெற்றி இலக்கங்கள் 19 50 56 76
ஆங்கில எழுத்து Z
அபிவிருத்தி லொத்தர் சபை
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3274 திகதி: 2019.12.14
பச்சை சனிக்கிழமை
சுப்பிரி தஹஸ்
விசேட இலக்கம் 9953
வெற்றி இலக்கங்கள் 28 36 41 47
ஆங்கில எழுத்து N
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 32,317,810/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1091
சீட்டிழுப்பு திகதி 14.12.2019 சனிக்கிழமை
Z 06 50 56 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,340,196
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 14/12/2019 வெற்றி வாரம் 2707 வர்ணம் இளம் நீலம்
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 10 38 49 55
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,160,286
2019/12/15 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## அரசின் முடி...

வோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையிலிருந்து இலங்கை அரசாங்கம் விலகுவதற்கு இடமளிக்க மாட்டோம்.

அவ்வாறு தன்னிச்சையாக பிரேரணையிலிருந்து அரசாங்கம் விலக முடியாது.

இதேவேளை இலங்கை குறித்த ஜெனிவா பிரேரணையை மீளாய்வு செய்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அவ்வாறு மீளாய்வு செய்த பின்னர் அரசாங்கம் எவ்வாறான முடிவை எடுக்கும் என்று நாங்கள் பார்ப்போம்.

மீளாய்வின் பின்னரான அரசாங்கத்தின் முடிவிலேயே நாம் அடுத்ததாக எடுக்கப்போகும் நடவடிக்கைகள் தங்கியுள்ளன. எப்படியிருப்பினும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம் என்றார். (ம-3)

## அர்த்தப்படுத்...

கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கை பௌத்த நாடு என அர்த்தப்படுத்துவது முற்றிலும் தவறான விடயம். பாளி மொழி மூலம் புனைக்கதைகளை உருவாக்கி பௌத்த தேரர்களால் சிங்கள சமூகத்திற்கு தவறான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிங்கள வரலாறுகள் முதல் பௌத்த தேரர்கள் வரை, வரலாறு என போலியான புனைக்கதைகளை கட்டியெழுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் வடக்குகிழக்கு பிரதேசங்களில் எந்தவொரு சிங்கள பௌத்தரும் வசிக்கவில்லை.

இலங்கை எந்தவொரு விதத்திலும் சிங்களவர்களின் பூர்விகம் அல்ல. இலங்கையின் பூர்வீக மக்கள் தமிழர்களே என்ற காரணத்தினால் இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

## சீமெந்தின்...

வற் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி 17 சதவீதமாகவிருந்து 8 சதவீதமாக டிசம்பர் முதலாம் திகதி முதல் குறைக்கப்பட்டது.

அதற்கு அமைய சீமெந்தின் விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழ் மாவட்ட...

தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ் மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றி தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் மேலதிகச் செயலாளராக திருமதி சுகுணவதி தெய்வேந்திரம் தற்போது கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. (ம-3,10)

## 83 ஆயிரம் மாணவர்கள்...

இதன் மூலம் ஆகக்கூடுதலாக 50 ஆயிரம் மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களுக்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்று தகவல் தொடர்பாடல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 50 ஆயிரம் பேரால் அதிகரிப்பது தொடர்பில் உயர் கல்வி அமைச்சு, அமைச்சரவையில் விரிவாக பேச்சு நடத்திவருவதாகத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, பல்கலைக்கழகங்களின் வசதிகள் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக இளையோருக்கு இடம் கிடைப்பதாகவும் இதன் கீழ் பல்வேறு நிறுவனங்கள் உருவாகும் என்றும் அமைச்சர் கூறினார். (ம-3)

## சந்தேகக் கண் கொண்டு இந்தியா...

தனியார் நிகழ்ச்சியொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வுகளுக்கான வாய்ப்புகளை எதிர்பார்த்து, அரசியல் தீர்வு சம்பந்தமான செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. வாய்ப்புகளைப் பார்த்து நாம் ஒருபோதும் அரசியல் தீர்வைத் தேடிப்போவதில்லை. தமிழ் மக்களுக்கு உள்ளக சுய நிர்ணய உரிமை இருக்கின்றது. அதனைப் பெறுவதற்கு நாம் தொடர்ந்து முயற்சிப்போம். அதனை எவராலும் தடுக்க முடியாது.

இந்த அரசாங்கத்தை பகைக்க நாம் விரும்பவில்லை. அரசியல் தீர்வைக் காண்பதற்காக, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நாம் எப்போதும் உதவத் தயாராகவே இருக்கிறோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் காலதாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும். இந்தியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது பல தடவைகள் அவருடன் கலந்துரையாடி உள்ளோம். இந்தியாவுக்கு சென்று நாம் பிரதமருடன் கலந்துரையாட உள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடுவோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற சில தினங்களுக்குள்ளாகவே இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர், இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழ வேண்டுமெனவும், அதற்கான அரசியல் அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதியிடம் கூறியிருந்தார்.

தீர்வு விடயத்தில் இந்தியாவை சந்தேகக் கண் கொண்டு பார்க்கக் கூடாது. தமிழர்களின் பிரச்சினைகள் 70 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கொண்டு இருக்கின்றது என்றார்.. (ம-3)

## காணிகளுக்கு சிவப்பு எச்...

துப்புரவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

டெங்கு நோயின் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் முகமாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. முதற்கட்டமாக நேற்று வலி வடக்கு பிரதேச சபை மற்றும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இணைந்து சிவப்பு எச்சரிக்கை பதாகைகளை காட்சிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவை காட்சிப்படுத்தப்பட்ட 14 நாட்களுக்குள் பாவனையற்ற நிலையில் காணிகளை வைத்திருக்கும் காணி உரிமையாளர்கள் அவற்றை துப்புரவு செய்யவேண்டும்.

அவ்வாறு துப்புரவு செய்யாதவிடத்து குறித்த காணிகளை பிரதேச சபை முன்வந்து துப்புரவுப் பணியினை மேற்கொள்ளும் எனவும் காணியினை உரிமை கோருபவர்களிடம் துப்புரவு செய்ததற்கான பணமும் அதனுடன் இணைந்து தண்டப்பணமும் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மயங்கி விழுந்த சுவிஸ்...

இந்த சம்பவம் நடந்ததாக டிசம்பர் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் திருமதி பிரான்சிஸ் சிஐடியிடம் தெரிவித்துள்ளார். சிஐடி விசாரணையின்படி, எண்: 20.2/2, பல்மேரா கோர்ட், பல்மேரா அவென்யூ, கொழும்பு - 03 ஆகிய இடங்களில் எந்தவொரு சம்பவமும் நடந்தமை தொடர்பாக எந்த ஆதாரமும் வெளியிடப்படவில்லை.

அவர் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டியிருப்பதால் மேலும் அறிக்கை பதிவு செய்யப்படும். டிசம்பர் 8ஆம் திகதி அவரிடம் முழு அறிக்கையையும் பதிவு செய்ய முடியவில்லை, ஏனெனில் அவர் இரண்டு முறை மயக்கம் அடைந்தார். மேலும் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன.

அந்த அறிக்கையின் பதிவின் போது, தூதரக மருத்துவர் மற்றும் தூதரக அதிகாரிகள் அருகில் இருந்தனர், மேலும் மற்றொரு தூதரக அதிகாரியை உள்ளடக்கிய விபரங்கள் தொடர்பில் அவரது தொலைபேசியிலிருந்து வெளிவந்த இரு நபர்களிடமிருந்து ஒரு அறிக்கையை பதிவு செய்ய வேண்டும் எனவும் சி.ஐ.டி மேலும் தெரிவித்துள்ளது. (ம-3)

செவன
திகதி 2019/12/14
சீட்டிழுப்பு இலக்கம் 244
ஆங்கில எழுத்து G
வெல்லப்பட்ட இலக்கங்கள் 11 30 52 53
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 14-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2330
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 26 61 64 68
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14/12/2019
சீட்டிழுப்பு இலக்கம் 1000
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 6 8 9 9 3 8
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 14/12/2019
சீட்டிழுப்பு இலக்கம் 1486
இலக்கம் 23
வெற்றி இலக்கம் 05 37 45 65
53 60
தேசிய லொத்தர் சபை

# நம்பிக்கையையும் தைரியத்தையும் கைவிட்டால் இலக்கினை ஒருபோதும் அடைய முடியாது – சிறீதரன்

நம்பிக்கையையும் தைரியத்தையும் கைவிட்டால் அடைய நினைக்கும் இலக்கை ஒருபோதும் அடைய முடியாது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "இன்று எல்லோரிடமும் பயத்தை ஏற்படுத்தும் விதமான பேச்சுக்களே முன்வைக்கப்படுகின்றன.

அதாவது புதிய ஜனாதிபதியுடன் பேசியுள்ளோம், நமக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கப் போகிறார் போன்ற பயங்களானது இன்று நேற்று அல்லாது பல ஆண்டுகளுக்கு முன்னரும் இருந்தது.

கைது செய்யப்பட்டதும், காணாமலாக்கப்பட்டதும் என இந்த தியாகங்களுக்கு மத்தியில் துணிச்சல்மிக்கவர்களாக இம்மண்ணில் எம்மால் இருக்க முடிந்தது.

2007இல் எங்களுடைய தேசிய விடுதலைப் போராட்டம் இல்லாமல் போய் நாங்கள் இன்னொரு அந்நிய இராணுவத்தின் பிடிக்குள் அடங்கி இருப்போம், சிறை வைக்கப்படுவோம் என்ற எண்ணம் எம்மிடம் இருக்கவில்லை.

ஆனால் அதேநேரம் 2015ஆம் ஆண்டு அரசியலில் வந்தவர்கள் அந்த ஆதிக்க வெறியோடு வந்தவர்களின் ஊடாக மாற்றம் வரும் என எண்ணியது குறைவு.

எனவே எம்மால் முடியுமென்ற நம்பிக்கை இருந்தால் மாத்திரமே மாற்றங்களை ஏற்படுத்த முடியும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# கோட்டாவின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்கத் தயார்

## ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்க நாம் தயாராக உள்ளோம் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அததுடன், நாட்டுக்குப் பாதகமான அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிதிய உடன்படிக்கையில் எவ்விதத்திலும் தற்போதைய அரசாங்கம் கைச்சாத்திடாது என நம்புவதாக அக்கட்சியின் பார்ாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், "ஏகாதிபத்திய செல்வாக்கினை இந்த நாட்டில் இருந்து அகற்ற, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்கக்கூடும். கோட்டாபய ராஜபக்ஷவின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்க மக்கள் விடுதலை முன்னணி தயாராக உள்ளது.

எம்.சி.சி. உடன்படிக்கை மிகவும் பாரதூரமான ஒன்றாகும். அதுபற்றி கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் பல இடங்களிலும் விவாதத்திற்கு உட்பட்டது.

அரசியல்வாதிகள் மாத்திரமன்றி தொழில் வர்க்கத்தினர், மதகுருமார்கள், கலைஞர்கள், மேல்திக வகுப்பு நேர ஆசிரியர்கள் கூட எம்.சி.சி உடன்படிக்கை பற்றியும் அதில் இருக்கின்ற பாதிப்பு தொடர்பாகவும் நாட்டு மக்களுக்கும் மாணவர்களுக்கும் விளக்கம் அளித்துள்ளனர். (ம-3)

# சஜித் பிரேமதாஸ தோல்வியடைவார் முதலே தெரியும் என்கிறார் ரணில்

(கொழும்பு)

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தேர்தலில் தோல்வியைத் தழுவுவார் என தாம் முன் கூட்டியே அறிந்திருந்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலி பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளித்தவர்களுக்கு நன்றி பாராட்டும் நிகழ்வு ஒன்று காலியில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்றபோது தாம் சஜித் பிரேமதாஸ தேர்தலில் தோல்வியடைவார் என முன்கூட்டியே அறிந்திருந்ததாகத் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-3)


ICT, Science Classes
தரம் 6 - 11
தமிழ், ஆங்கில மொழி மூலம் ICT, Science குழு பிரத்தியேக வகுப்புக்கள் (1492)
Antony (B.Sc) 0765561231
மடத்தடி, யாழ்ப்பாணம்.

கணக்கீடு
2021, 2020 Day Class
குழு/பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பம்
23.12.2019
யாழ்/கொழும்பு/நீர்கொழும்பு
பிரபல ஆசிரியர் K. ஸ்ரீ (1484)
தொடர்பு: 075 943 6137

கடை விற்பனைக்கு
இல.31–1ம் மாடி
மாநகரசபைக் கட்டிடம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு -
077 390 2087 (C-8536)

பதவி வெற்றிடம்
அலுவலக உதவியாளர் தேவை.
A/L கற்றவர்கள் நேரில் வரவும்.
பழைய மாணவர்களுக்கு முன்னுரிமை
The Express Institute
Irupalai Junction, Kopay. (1467)

விற்பனைக்குண்டு
லண்டனில் இருந்து கொண்டு வரப்பட்ட சவுண்ட் அன்ட லைற் System விற்பனைக்குண்டு. (1485)
தொடர்புகளுக்கு:-
076 239 5544

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION MONEY TRANSFER 070 330 5500 WESTERN UNION MONEY TRANSFER
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-8404)
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK – 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) (C-8115)
யாழ்ப்பாணம் கிளிநொச்சி நெல்லியடி கொடிகாமம் வல்வெட்டித்துறை பருத்தித்துறை மானிப்பாய் திருகோணமலை சாவகச்சேரி சுன்னாகம் மருதங்கேணி
0768226240
V2 TRAVELS

SMART SCIENCE CENTRE
நீராவியடி, யாழ்ப்பாணம்.
2022 (A/L)
கணித உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்: 15.12.2019 5.00 P.M
பௌதிகவியல் — T.K. Kajan (B.Sc)
இணைந்த கணிதம் — T.S.Rankan (B.Sc.PGDE) (1495)
உயர்தரத்தில் உயர்ந்திட தனிப்பட்ட ரீதியான கவனத்துடனான வகுப்புக்கள்
T.P: 0776531177/0776222298

NEW SCIENCE WORLD
2022 A/L
கணித, உயிரியல் பிரிவுகள்
தமிழ் மொழி மூலம்
பௌதிகவியல் — திரு. R. குமரன், திரு. R. குகன்
இரசாயனவியல் — திரு. டயஸ், திரு. K.T. சிவகுமார்
உயிரியல் — திரு. N.T: கஜேந்திரன்
இணைந்த கணிதம் — திரு. S. செந்தில்ராஜ்
English Medium
Physics — Mr.R.Kumaran
Chemistry — Mr.Dias
Biology — Mr.N.T.Gajenthiran
Com.Maths — Mr.S.Krishna
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
நேர அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும் (C-8546)
T.P - 077 336 4055, 021 221 6690
(Navalar Road - Brown Road Junction, Jaffna)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (1456)
021 222 8093
புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8397)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 246

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 15.12.2019 | தொலைபேசி : 021 222 3378

## அநாதைத் தமிழினம்



## கைலாசா உதயமாகட்டும்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

பண்டிதர் பரமலிங்கம் சோகத்துடன் அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த விதானையார் விசுவலிங்கம் என்ன பண்டிதர் ஐயா, முகம் காஞ்சு போய் இருக்குது. என்ன சங்கதி என வினவினார்.

**பண்டிதர்:** முல்லைத்தீவு நீராவியடியில புத்தர் சிலையை வைத்துப் போட்டினம். ஒருத்தரும் எதிர்ப்பார் இல்லை. இலங்கையில் பௌத்த மதத்தைப் பாதுகாக்க வேணும் என்பதில கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மிகத் தீவிரமாக இருக்கிறார். இங்க பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்தின்ர நுழைவாயில் வளைவைத் தள்ளி விழுத்துகினம். என்ன நடக்கப் போகுதோ தெரியல்ல.

**கங்காணி:** என்னைப் பொறுத்தவரை இனி இலங்கையில இந்து மதத்திற்குத்தான் பேராபத்து வரப் போகுது.

**மூப்பர்:** ஐக்கிய தேசியக் கட்சியின்ர ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை தமிழ் மக்கள் ஆதரித்தினம். ஆனால் இனி பௌத்தத்தை முதன்மைப்படுத்தியே எங்களின் நடவடிக்கை இருக்குமெண்டு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சொல்லியிருக்கிறார் எண்டால்...

**சிறாப்பர்:** தமிழ் அரசியல் தரப்பு தங்களை ஆதரித்ததற்குப் பின்னரல் தாங்கள் எவ்வளவு காசை அவர்களுக்குக் கொடுத்தது என்பது கொடுத்தவர்களுக்குத் தெரியும் தானே. போரால பாதிக்கப்பட்ட இனத்தின்ர உரிமைக்காகப் போராட வேண்டிய ஓர் அரசியல் தலைமை அதைக் கைவிட்டிட்டு காசில ஆசைவைத்து தன்னை நம்பின இனத்தை விற்றுப் பிழைக்கும் போது அந்தத் தரப்பை ஆரும் நம்ப மாட்டினம் தானே!

**சாத்திரியார்:** உண்மை தான். வடக்கு- கிழக்கில ஆயிரம் விகாரை அமைக்கிறது எண்டு ஐக்கிய தேசியக் கட்சி தன்ர தேர்தல் விஞ்ஞாபனத்தில அறிவித்த பின்பும் ரணில் விக்கிரமசிங்கவின்ர பிரதமர் பதவியைக் காப்பாற்றுகின்ற வேலையில எங்கட அரசியல் தரப்பு ஈடுபட்டது எண்டால் இவையள என்ன செய்யிறது?

**வாத்தியார்:** என்னைப் பொறுத்தவரை இலங்கையில இந்து சமயத்தைக் காப்பாற்றுவது எண்டால், சிவசேனை அமைப்போட 'நாங்கள் ஒரு தொடர்பை ஏற்படுத்த வேணும். இல்லையெண்டால் இலங்கையில இந்து சமயத்தைக் காப்பாற்றுவது முடியாத காரியமாய்ப் போகும்.

**பண்டிதர்:** உலகத்தில எல்லாச் சமயங்களுக்கும் மதிப்புக் கொடுக்கிற ஒரு சமயம் எண்டால் அது சைவசமயம் தான். ஆனால் அந்த நல்ல இயல்பை சைவத்தின் பலவீனமாகக் கருதிய ஏனைய சமயங்கள், சைவத்தை நிந்தை செய்யவும் அதனை அழிக்கவும் மறைமுகமாகச் சதி செய்யினம். எனினும் அந்த உண்மையை இப்ப எங்கட கம்பவாரிதி போன்ற இலக்கிய ஜாம்பவான்களும் புரிந்து கொண்டிருப்பதுதான் மனதுக்கு ஆறுதலைத் தருகுது.

**கங்காணி:** நீங்கள் இப்படிச் சொல்லுறியள். ஆனால் தமிழ் கத்தோலிக்க மதகுருமாரில ஒரு பகுதியினரைத் தங்கட கைக்குள்ள வைத்துக்கொண்டு தமிழினத்தின்ர ஒற்றுமையை உடைக்கிறதுக்குப் பெரும் பிரயத்தனங்கள் நடக்கிறதாகவும் கேள்வி.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:** மடு தேவாலயத்தைப் புனித பிரதேசமாக ஆக்குவதன் மூலம் கத்தோலிக்க மதகுருமாரை சிங்களப் பேரினவாதம் தனக்குள் உள்வாங்கிப் போட்டுது.

அரசாங்கம், இராணுவம் எனப் பல பக்கங்களாலும் மடு தேவாலயத்திற்கு உதவி வந்து குவியுது. ஒரு கத்தோலிக்க மதகுரு குறித்த மடுப்பிரதேசத்தில உள்ள இராணுவ அதிகாரிக்குப் போன் போட்டால் சரி, மணல் வருகுதாம். சீமெந்து வருகுதாம். அப்ப தமிழினத்தின்ர ஒற்றுமை எப்படி உடைபடுகுது என்பது தெரியுது தானே.

**சாத்திரியார்:** மடுத் தேவாலயப் பகுதியைப் புனித பிரதேசமாக்குறது தொடர்பில மைத்திரி ஜனாதிபதியாக இருந்தபோது ஆவணம் கையளிக்கப்பட்டபோது எத்தனையோ கத்தோலிக்க மதகுருமார் அந்த நிகழ்வில கலந்து கொண்டவியள் என்பதைப் பார்த்தனாங்கள்தானே.

**சிறாப்பர்:** கத்தோலிக்க மதகுருமார் இராணுவத்திற்குப் போன் பண்ணி உதவி பெற்றால் அது பற்றி எவரும் கதைக்கமாட்டினம். ஆனால் இதை ஒரு அந்தணச் சிவாச்சாரியார் அல்லது சைவசமயத் தலைவர் செய்தால் துலைஞ்சுது. துரோகிப்பட்டம் கொடுத்துப் போடுவினம்.

**வாத்தியார்:** சமய பேதத்தில எங்கட தமிழினத்தின்ர ஒற்றுமையை எவரும் குலைக்கக்கூடாது. என்னைப் பொறுத்தவரை தமிழ் வாழ்ந்தால்தான் சைவமும் கத்தோலிக்கமும் இந்த மண்ணில வாழும். இல்லையெண்டால் அவ்வளவுதான். இதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேணும்.

**பண்டிதர்:** முன்பெல்லாம் சைவம், கத்தோலிக்கம் எண்ட பேதம் எங்களிட்ட ஒருபோதும் இருந்ததில்லை. மடுத்தேவாலயத்திற்கு சைவமக்கள் வழிபடச் செல்லுவினம். அது போல நல்லூர் முருகனிட்ட கத்தோலிக்க மக்கள் வருவினம். இப்படியாக இருந்த எங்கள் ஒற்றுமையை உடைக்கிறதுக்குப் பெருமுயற்சி நடக்குது.

இதற்கு எங்கட சைவ, கத்தோலிக்க மதத் தலைவர்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

எப்பவும் தமிழினம் என்ற இனப்பற்றை நாங்கள் கொண்டிருக்கவேணும். அற்பசொற்ப சலுகைகளுக்காக எங்கட தாய்மொழி தமிழை விட்டுக் கொடுப்பமாக இருந்தால், எங்கட இளைஞர்கள் செய்த தியாகம் எல்லாம் அர்த்தமற்றதாகிப் போய்விடும். அந்தப் பாவம் எங்களைச் சும்மாவும் விடாது.

**சாத்திரியார்:** எங்கட வரலாறுகளை, தமிழினத்தின்ர பெருமைகளை நாங்கள் ஒருக்காலும் மறக்கவும் கூடாது, கைவிடவும் கூடாது.

**விதானையார்:** நீங்கள் சொல்லத்தான் ஞாபகம் வருகுது. கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் நாவற்குழியில அரும்பொருட்காட்சியகத்தை அமைத்து வருகிறார். எதிர்வரும் தைமாதம் திறப்பு விழா நடக்க இருக்குது. எங்கட வரலாற்று அம்சங்களைப் பாதுகாக்கின்ற கலாநிதி ஆறு. திருமுருகனின்ர முயற்சிக்கு நாங்களும் எங்களால் இயன்ற உதவிகளைச் செய்யவேணும்.

**வாத்தியார்:** உண்மைதான். எங்கட மண்ணில பாடசாலைகளை அமைத்து கல்விப்பணி செய்த பெருவள்ளல்களின்ர புகைப்படங்கள், துறைசார் வல்லுநர்கள், வரலாற்றுச் சாதனையாளர்களின் புகைப்படங்கள், எங்கட வாழ்வியலோட சம்பந்தப்பட்ட அந்தக் காலத்துப் பாத்திரங்கள், தளபாடங்கள் போன்றவற்றைக் கொடுத்தால் அவர்கள் அந்த அருங் காட்சிப் பொக்கிச நிலையத்தில காட்சிப்படுத்துவினம்.

**மூப்பர்:** நல்ல பணி. தமிழர்கள் தங்கட வரலாற்றுச் சான்றுகளை ஆவணப்படுத்திறதில்லை என்ற குறைபாடு இந்த அருங்காட்சியகத்தின் மூலமாகத் தீரும் போது, அதற்கு உதவி செய்யவேணும் எண்டு ஆலடியில ஒரு தீர்மானம் நிறைவேற்றுவம்.

மூப்பர் இவ்வாறு கூற, ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் அதனை ஏகமனதாக நிறைவேற்ற அதனைத் தானும் அங்கீரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## மதபேதத்தை ஏற்படுத்தி தமிழினத்தை பிரிக்க முயற்சி

ஆதித்தன்

# தமிழர்கள் நடுத்தெருவில் நிற்பதற்கு தமிழ்ப் புத்திஜீவிகளும் காரணம்






தமிழ் அகராதி நூல் வெளியீட்டு விழா கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ங்கலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரையின் மூலப்பொருள் தமிழ் இனத்தின் அரசியல் சார்ந்ததாக இருந்ததன் காரணமாகவே அவரின் உரை மீது இங்கு கவனம் செலுத்தப்படுகிறது.

தமிழ் அகராதி நூல் வெளியீட்டில் உரையாற்றிய பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் அரசியல் சார்ந்து ஆற்றிய உரைக்காக அவரைப் பாராட்டலாம். அரசியல் நமக்குத் தேவையில்லை. என்றிருக்கக்கூடிய தமிழ் புத்திஜீவிகளின் மத்தியில், பேராசிரியர் சி.பத்மநாதன் அந்த விடயத்தைத் துணிந்து எடுத்துப் பேசினார் என்பதற்காகவே நம் பாராட்டு. மற்றும்படி அவர் ஆற்றிய உரையில் அரசியல் சாடல்கள் இருந்தமை உணரப்பட்டன.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் ஏற்பாட்டால் உருவான 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் தமிழ் மக்களுக்கான உரிமைகள் இருந்தன. எனினும் அவற்றை அன்றைய ஊடகங்கள் வெளியிடத் தவறிவிட்டிருந்தன.

உண்மையில் 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தால், இன்று தமிழ் மக்களின் நிலை வேறு விதமாக இருந்திருக்கும் என்பது அவரின் கருத்து.

இதுதவிர, ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுத்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு அரசியல் பற்றித் தெரிந்திருக்கவில்லை என்ற அடிப்படை உண்மையையும் பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிட்டிருந்தார்.

இங்கு பேராசிரியர் பத்மநாதன் போன்ற அறிவியலாளர்கள் தங்களின் ஆதங்கத்தை முன்வைக்கும் போது, புத்திஜீவிகள் என்ற அடிப்படையில் தமிழினத்தை வழிப்படுத்துவதில் அவர்கள் ஆற்றிய அரசியல் பணி என்ன என்பதுதான் நம் கேள்வி.

ஆக, இன்று நம் தமிழினம் நடுத்தெருவில் நிற்பதற்கு எங்கள் தமிழ்ப் புத்திஜீவிகள் மௌனம் காத்து நின்றமையே மூலகாரணமாகும்.

உண்மையில் எங்கள் புத்திஜீவிகள் விடுதலைப்புலிகள் உட்பட அரசியல் தரப்புக்களை வழிப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் தமிழ்ப் புத்திஜீவிகள் என்போர் தாம் உண்டு தம்பாடு உண்டு என்றே இருந்தனர். தேவையாயின் விடுதலைப்புலிகளை விமர்சிப்பதை விடுத்து அவர்களை உயர் புகழ்ச்சிப்படுத்தி தத்தம் காரியங்களை நிறைவேற்றுகின்ற தந்திரோபாயத்தையே எங்கள் கல்வியாளர்கள் கையாண்டனர்.

இந்நிலையில் இன்றைய தமிழ் மக்களின் அவலத்திற்கு பின்னணி என்ன? என்று நம் கல்வியாளர்கள் காரணம் கண்டுபிடிப்பது விசித்திரமானது.

இப்போதுகூட எங்கள் தமிழ் மக்களை வழிப்படுத்துகின்ற பணியை புத்திஜீவிகள் செய்யவில்லை. மாறாக நேரத்திற்கொரு கதை கதைப்பதையே அவர்களிடம் காணமுடிகின்றது.

உண்மையில் தமிழ்புத்திஜீவிகள் ஒற்றுமையோடும் பொறுப்புணர்வோடும் செயலாற்றியிருந்தால், 2009 ஆம் ஆண்டில் தமிழினத்திற்கு ஏற்பட்ட இழப்பை எங்களுக்கான பலமாக்கி சர்வதேசத்தின் உதவியுடன் எம்மினத்திற்கான உரிமையை வென்றெடுத்திருக்க முடியும்.

ஆனால் அதனைச் செய்வதற்கு உரியவர்கள் தயாராகாத நிலையில், எங்கள் தமிழ் அரசியல் என்பது விலைபோகும் ஈனர்களிடம் அகப்பட்டு இன்று நடுத்தெருவில் நிற்கிறது.

தமிழ் அரசியல் தரப்பின் போக்கு மிகவும் தவறானது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குத் தமிழ்ப் புத்திஜீவிகள் தயாராக இருக்கவில்லை. இப்போதுகூட அந்த அவலநிலையே நீடிக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் முதுமை காரணமாக எதைக் கதைப்பது, எதைக் கதைக்கக்கூடாது என்பதைக்கூடத் தெரியாமல் இருக்கின்றார்.

எனினும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் என்ற பெயரோடு அந்த அரசியல் அமைப்பு தமிழினத்திற்கு எதிராகச் செயற்படுவதற்காக இயங்கி வருகிறது.

எனினும் அதைக்கூட உணர்ந்து கொள்ளமுடியாதவர்களாகவே நம்மவர்கள் இருக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்து கொண்ட முறையால் ஆட்சிப்பீடத்துடன் பேச்சு நடத்துவதற்குக்கூட நெருங்க முடியாதுள்ளது. இதுதான் என்றால் இல்லை. தமிழ் மக்கள் வாக்களித்த சஜித் பிரேமதாஸ கூட தமிழ்மக்களுக்கு நன்றி தெரிவிக்கமுடியாதவராக வெறுப்புக் கொண்டுள்ளார்.

அவரைப் பொறுத்தவரை தனது தோல்விக்கு முழுக்காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதுதான். ஆக, சொல்லாமல் நடக்கக்கூடிய ஒரு விடயத்தை சொல்லிக் கெடுத்த வேலையைச் செய்த கூட்டமைப்பை தமிழினம் இன்னமும் நம்பியிருக்கிறது.

இருந்தும் இதுபற்றி தமிழ்ப் புத்திஜீவிகள் தமிழ் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபடுவதாக இல்லை.

ஆக, தொடர்ந்தும் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்ற நிலையில் பேராசிரியர் சி.பத்மநாதன் போன்ற அறிவார்ந்தவர்களின் உரைகள் தமிழ்மக்களுக்கு உண்மையைச் சொல்வதாகவும் உண்மையைச் சொல்வதில் தமிழ்ப் புத்திஜீவிகளின் பங்களிப்பை ஏற்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து பழைய குறைகளைக் கட்டளைப்படுத்தி; நாம் எல்லாம் சரியாகச் செயற்பட்டோம், அவர்கள் பிழையாக நடந்து கொண்டார்கள் எனக் கூறுவது சந்தர்ப்பவாதக் கருத்துக்களேயன்றி அவற்றுக்குள் உண்மை, நேர்மை, நீதி இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே இனிமேலாவது தமிழ்ப்புத்திஜீவிகள் தமிழ் அரசியலை வழிப்படுத்த முன் வர வேண்டும். இந்தப் பணியை சிங்களப் புத்திஜீவிகள் பௌத்த சிங்களத்தின் பேரால் செம்மையாகச் செய்து வருகின்றனர் என்ற உண்மையை உணர்ந்து செயலாற்றுவதே பொருத்துடையது.

திருநீலகண்டன்

## பொது அறிவு

● காந்தியடிகள் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தை என்ன?
**ராம்**

● நீந்தத் தெரியாத மிருகம் எது?
**ஒட்டகம்**

● சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரி எது?
**புழலேரி**

● தீப நகரம் என்றழைக்கப்படும் நகரம் எது?
**மைசூர்**

● மயக்க மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
**சேர் ஜேம்ஸ் சிம்சன்**

● ஐஸ்கிறீமைக் கண்டுபிடித்தவர்கள் யார்?
**ரோமானியர்கள்**

● திரவத்தங்கம் என்றழைக்கப்படுவது எது?
**பெற்றோலியம்**

● உலகிலேயே மிக உயரமான கோபுரம் எந்த நாட்டில் உள்ளது?
**நியூசிலாந்து**

● எகிப்தின் வெள்ளைத் தங்கம் எது?
**பருத்தி**

● உலகின் மிகச்சிறிய நாடு எது?
**வாடிகன்**

மதிமோகன் மதுரா,
12 ஏ 1, யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி.

## விடுகதைகளும் விடைகளும்

● மழையில் பிறந்து வெயிலில் காயுது?
**காளான்**

● காலில் தண்ணீர் குடிப்பான், தலையில் முட்டையிடுவான் அவன் யார்?
**தென்னை**

● சலசலவென சத்தம் போடுவான், சமயத்தில் தாகம் தீர்ப்பான். அவன் யார்?
**அருவி**

● கல்லில் காய்க்கும்பூ தண்ணீரில் மலரும்பூ, அது என்ன பூ?
**சுண்ணாம்பு**

● காற்றைக் குடித்து காற்றில் பறப்பான், அவன் யார்?
**பலூன்**

● நடந்தவன் நின்றான் கத்தியை எடுத்து தலையைச் சீவினேன் மறுபடியும் நடந்தான் அவன் யார்?
**பென்சில்**

● எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது. அது என்ன?
**மின் விசிறி**

● வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை அது என்ன?
**உழுந்து**

● முத்துக் கோட்டையிலே மகாராணி சிறைபட்டிருக்கிறாள். அவள் யார்?
**நாக்கு**

## பழமொழிகள்

- அண்ணன் எப்போ சாவான் திண்ணை எப்போ காலி யாகும்.
- அடக்கமே பெண்ணுக்கு அழகு.
- அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர்.
- அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பக் கூடாது.
- இஞ்சி இலாபம் மஞ்சளில்.
- இறங்கு பொழுதில் மருந்து குடி
- ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

## வண்ணச் சிறகை விரிக்கிறாய்



வண்ணச்சிறகை விரிக்கிறாய்
வானில் பறந்து திரிகிறாய்
வண்ண மலரின் தேனையே
வயிறு நிறைய குடிக்கிறாய்

வானில் பறக்க உன்னைப்போல்
வண்ணச்சிறகு இல்லையே
வானில் பறக்க உன்னைப்போல்
வண்ணச்சிறகு இல்லையே
வண்ணச்சிறகு இல்லையே











## பிகில் படம் பற்றி தங்களின் கருத்து என்ன?

## முள்ளிவாய்க்கால் முடிவுக்கு பதில் கிடைக்குமா?

## தமிழரின் சுயாட்சியை பிரித்தானியாவின் புதிய அரசு ஏற்குமா? ஏமாற்றுமா?

**கஜன் — வடமராட்சி**

**தனிப்பட்ட மனித சுதந்திரம் என்றால் என்ன வியாசரே?**

ஒருவர் வீதியினால் தடியைச் சுற்றிக் கொண்டு செல்கிறார். அருகில் செல்பவரின் மூக்கின் நுனிவரை அந்த தடியைச் சுழற்றலாம். அவரின் மூக்கில் பட்டு விட்டால் அது அவரின் தனிமனித சுதந்திரத்தை மீறும் செயல்.

நாம் இங்கு சொல்வது என்னவென்றால் அருகில் வருபவரை இலக்கு வைத்து தடியை விசிக்கிக் கொண்டு மூக்கு நுனிவரை வரலாம் என்று விவாதிப்பது தனிப்பட்ட சுதந்திரத்தை மீறும் செயல்தான்.

**நிதர்ஷன் — யாழ்ப்பாணம்**

**பிகில் படம் பற்றி தங்களின் கருத்து என்ன?**

ஒரு அருமையான கதைக்களம். விளையாட்டுத் துறையில் பெண்கள் படும் துயரம் சொல்லில் அடங்காது அப்படிப்பட்ட ஒரு கதைக்களத்தை எடுத்தது சவாலுக்குரியது.

படத்தைப் பற்றிய கருத்துக்கள் கடந்து விளையாட்டுத்துறையில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்ற புது விடயத்தை எடுத்த விஜய் - அட்லி கூட்டணியை வாழ்த்த வேண்டும்.

**நீலாம்பரி — விஸ்வமடு**

**கூட்டமைப்பின் கதைகளை மக்கள் நம்புவார்களா?**

கவலைகள் இருக்கட்டும் மறந்துவிடு. காரணம் அதை நீ தொடர்ந்து விடு. எடுத்தவர் யாரோ மறைத்தவர் யாரோ இருக்குது நீதி சிரித்து விடு.
இது கவிஞர் கண்ணதாசனின் அருமையான வரிகள்.

இதைத்தான் இப்போது நானும் சொல்கிறேன் இருக்குது நீதி சிரித்துவிடு.

**அருட்கதிர் — துன்னாலை**

**தற்போதைய நிலையை எண்ணும் போது மனம் வருந்துகிறதே?**

தொடக்கம் என்ற ஒன்று உண்டெனின் முடிவு என்பது நிச்சயம் உண்டு.

ஒரு விதைக்குள்ளே அடைபட்ட ஆலமரம் கண் விழிக்கும் அதுவரை பொறுமனமே.

**திகழன் — யாக்கரு**

**கூட்டமைப்பு இந்த முறையும் அதிக படியான ஆசனங்கள் கைப்பற்றுமா?**

பூனையல்லாத வீட்டில் எலி சன்னதமாடியதாம் என்ற பழமொழியில் எலியின் நிலையில் தான் இப்போது கூட்டமைப்பு இருக்கிறது.

யாரும் பூனையாய் மாற நினைத்தால் துரோகிப் பட்டம் கட்டி அவர்களை கடை நிலைக்குத் தள்ளும் சூட்சுமத்தை ரொம்பவே வைத்திருக்கும் அவர்கள் சன்னதமாடும் எலிகளாகத்தான் இருப்பார்களே ஒழிய எமக்கான தீர்வை கனவிலும் பெற்றுத் தரார். இதுவே நிதர்சனம்.

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்
021 567 1532
என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்

**தவன் — நெல்லியடி**

**ஈழம் தந்த பாடம் என்ன?**

ஓ... ஆட்சியாளர்களே தமிழர்களாகிய எங்களுக்கு சுய நிர்ணயத்துடன் வாழ ஒரு நல்ல தீர்வு தாருங்கள். இப்போது எங்கள் ஒற்றுமை எனும் பலத்தைப் பாருங்கள் என்று படம் வரைந்து காட்டியிருக்கிறார்கள்.

**சுதன் — குப்பிளான்**

**முள்ளிவாய்க்கால் முடிவுக்கு பதில் கிடைக்குமா?**

பதில் கிடைக்க வேண்டும். அதற்கு முன் தமிழரின் மனதறிந்து அவர்களுக்கான தீர்வை ஜனாதிபதி கோட்டாபயவின் புதிய அரசு உருவாக்கித் தரவேண்டும்.

இதுவே இப்போதைய தமிழரின் நிலை.

**த னு — இணுவில்**

**எனக்கு எதற்கெடுத்தாலும் கோபம் வருகிறது என்ன செய்ய?**

தம்பி இந்தக் கோபம் இருக்கிறதே அது மின்னல் போன்றது. நொடியில் உருவாகி மறைந்து விடும். ஆனால் அதன் அழிவுகளும் விளைவுகளும் ஏராளம்.

கோபத்தைக் கட்டுப்படுத்தப் பழகுவது மனிதனுக்கு மிக முக்கியம். இல்லையேல் அவன் மிருகத்திற்குச் சமமாகி விடுவான்.

**தயா — பருத்தித்துறை**

**ஓட்டப் போட்டியில் தோல்வி என்று தெரிந்தும் ஓடுகிறார்களே ஏன்?**

அப்படியென்றால் வெல்லப் போகும் ஒருவர் மட்டும் தான் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ள வேண்டும். அப்படியென்றால் அது விளையாட்டு இல்லையே.

போட்டி என்பது வெற்றியை நோக்கிய முயற்சியே தவிர வெற்றி ஒன்றே இலக்கல்ல. முதலில் அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கடைசியாய் வரப்போகிறோம் எனத் தெரிந்தும் முடிவு எல்லைவரை தனது வேகத்தைக் குறைக்காமல் உத்வேகத்துடன் எந்த வீரன் ஓடுகிறானோ அவன் ஓர் நாள் எல்லோரையும் பின்தள்ளி முன்னோக்கி ஓடுவான் என்பது உறுதி.

**தர்ணிகா — கவுந்தில்**

**தமிழரின் சுயாட்சியை பிரித்தானியாவின் புதிய அரசு ஏற்குமா? ஏமாற்றுமா?**

சர்வதேசம் எமது பிரச்சினையைத் தீர்க்கும் என்ற எண்ணக்கருவை தயவு செய்து தூக்கி எறியுங்கள்.
விபத்துக்களில் காயம் ஏற்பட்டால் அந்தக் காயத்திற்கு இடும் மருந்தின் பெயர் உடன் காய மருந்து.
அதைக் காயம் பட்ட உடன் வழங்க வேண்டும். தமிழருக்குக் காயம் பட்ட உடன் இதற்கான மருந்தை வழங்காத சர்வதேசம் அந்தப் புண்ணில் இருந்து ஊனம் வடிந்து சீழ் கொடிக் கிடக்கும் போது வந்து மருந்திட்டு ஆற்றும் என்று இன்னும் நம்பிக் கொண்டிருப்பது எவ்வளவு மடைத்தனம் சொல்லுங்கள் பார்ப்போம்.

உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்

## வித்தகப்பெண்ணே!

யாழ்வாகீஷ்



பெரு வெளியதில்
நிலவதாய் உளமதில்
வந்தாய் உனக்கது
புரியாதா பெண்ணே
பிறைநிலவதுவாகி
மறைமுகில் போனாய்
உனக்கது தெரியாதா?
கறைபழந்தது எம்மின்
கண் இமை ஓரம்
நிறையுருத்தருவாயா?
வரமொருகோழ
நாம் வாழ்வதைத் தேழ
வாழ்ந்திட வருவாயா?
தரமெது வாழ்வெது
காதலின் தகுதிகள்
தத்துவம் சொல்வாயா?
வெறுமைகள் சப்பிய
பொழுதுகள் இரவதில்
கனவுகள் ஆகின்றாய்
வழிதொடு விழிபடும்
வீரியம் வரைக்கும்
பிறைமொழி தருகின்றாய்
தனிமையை நிரைத்து
தவணைகேட்டு
தத்துவம் ஆகின்றாய்
காதல் வித்தகமே
செய்கின்றாய்
என்னில் பெண்ணே





## வன்முறைகள் வேண்டாம்

நாட்டிலே வன்முறைகளாம்– தம்பி
நம் இனம் அழிந்து போகின்றது
உயிரை மதிக்காத செயலால்
உறவுகளை இழக்கின்றோம்–பார்

வாள் எடுத்தவன் வாளாலே மழவான்
என்றுரைத்தனர் சான்றோர்
சட்டத்தை கையில் எடுக்காதே–தம்பி
சங்கடத்தில் மாட்டிக் கொள்ளாதே

நாளுக்குநாள் செய்தி வருகின்றது
நாங்களும் தினம் பார்க்கின்றோம்
வாழ்க்கையை தொலைத்தவர்களாக
வாழ்கின்றனரே இளைய சமூகம்

வேதனையில் பெற்றோர்கள் பலர்
வெந்து மழவதைப் பார் தம்பி
வேற்றுப்பொருளாய் இருக்காதே
வேறு எங்கே உன் சாதனைகள்

பெ.தனா, தெல்லிப்பழை

## விடியலுக்காய்

ஐந்தாண்டு அரசியலில் அழக்கழ மாற்றம்
அரச அரங்குக்குள்ளும் ஏகப்பட்ட குழப்பம்
ஒற்றைப்பதவிக்காய் பல கூட்டங்கள்
அவை நிரப்பவே பல அரசியல் தந்திரங்கள்

ஓகோ இதுதான் தேர்தலின் காலமா?
பேச்சு வன்லுமயால் மனங்களை
ஈர்த்திட நடந்திடும் விமர்சன கூட்டமாய்
பிரசாரம் இங்கேதான் பிரபல்யமோ!

வாக்குறுதிகள் அடுக்கடுக்காய் வெளியாக
கரகோசங்கள் பலமாய் தான் ஒலித்ததே
தோழர்கள் தொண்டர்களாய் திரண்ட கூட்டம்
சேரிப்புறத்திற்கும் தயங்காமல் நுழைந்ததே

பல கொழகள் வானை முட்டிக் கிடக்கவே
அறியா கட்சிகள் இன்னும் முளைத்தன
கொண்டதுயர் சொன்னாலே– குறை
தீர்ப்போம் என்றே பல கட்சிகள் கிளம்பின

சொல்லி அழுதாலும் மாளுமோ– தமிழர்
நாம் கண்ட துன்பங்கள்– வருங்காலம்
நமக்கென்றும் வழிவிட்டுச் செல்ல– விழயலுக்காய்
இம்மாற்றமென்ற விடை கொடுப்போம்

த.லக்ஸ்மன், நல்லூர்

## விலையேற்றம்

நிலவே திரை விலக்கு
உன் அழகிய முகம் காட்டு
முகில் என்னும் மாயவன்
நீ துயில்
கொள்ளும் வேளையில்
புகை என்னும்
திரை கொண்டு
உன் முகம் மறைப்பான்
மானிடா நிலவிற்கு உன்னை
ஒப்பிட துளியும் மனமில்லை
துன்பம் வருமுன்னே
துடிப்புடன் செயற்படாமல்
கண்கெட்ட பின்
சூரிய நமஸ்காரம்
செய்யலாமா?
விலையேற்றம் விண்ணைத்
தொட்டுத் தொடர்ந்ததால்
விழிபிதுங்கி நிற்கிறோம்
விடிந்தால் தேவைகள் பற்பல
வருமானம் போதவில்லை
வரும் செலவை
சமாளிப்பதெப்படி?
பிரச்சினை இல்லாத
மனுசனும் இல்லை
பிரச்சினை இல்லாதவர்
மனுசனே இல்லை
சாதிக்க நினைப்பவன்
மட்டுமே சோதிக்கப்படுகிறான்

ரி.கஜேந்தினி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
ஊடகக் கற்கைகள் துறை
2ஆம் வருடம்

## மௌனத்தின் தேடல்– 476



## காலநிலை மாறுமா?

காலநிலை மாற்றத்தால்
கனமழை தொடர்ந்து பெய்ய
குளங்கள் பள்ள நிலங்கள்
வெள்ளப்பெருக்கால்
நிறைந்து போக்குவரத்துக்கு
தடையாக உள்ளதால்
மக்களின் நாளாந்த
வாழ்க்கை பாதிப்படைகிறது
மழை வெள்ள அனர்த்தத்தால்
வீடுவாசல்களை இழந்து
மக்கள் துன்பதுயரமதில்
வாடித் துடிக்கின்றனர்

துரை
தென்மட்டுவில்

## மௌனத்தின் தேடல் –477



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## சிந்திப்பாய் இனியும்

பூகோள வெம்மை
புரியாமல் மானிடமோ
பேய்ப்போக்காய்
காடுகளை அழித்ததனால்
பூமியின் நுரையீரல்கள்
புரியும் புனிதப் பணிக்கு
சேமிப்பே இலா கஜானாவாய்
இயற்கை சினந்த நிலை
சிந்திப்பாய் இனியும் மானிடனே

கந்தபாலன்
நல்லூர்

## வருணபகவானே அமைதிகொள்

நீரின்றி அமையாது உலகம்
ஆண்டவா நீர் மழையாக
பொழிந்து வெள்ளக்காடாய்
மக்களை இடம் நகர்த்தி
வேடிக்கை பார்க்கும்
வருணபகவானே
நம்மவர் துயரைத் துடைக்க சற்று
அமைதிகொள் பகவானே

அபிகுலமாலிகா
சங்கானை

## பெருவெள்ளம்

மனிதர்களே!
உலகையே வாழவைப்பது
மழையடா– அதுவே
பெரு வெள்ளமாய்
கொட்டித் தீர்த்ததால்
இன்று உங்களுக்கு
இந்த நிலையடா

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மழையே!

வா! வா! என்று நாமும்
வானம் பார்த்து நின்றபோது
வராமல் இருந்துவிட்டு
காலம் கடந்துவந்து– நீ
கொடை வள்ளல் என்பதை
காட்டுகின்றாயோ? மழையே
நடக்க வேண்டிய வீதியில்
நீந்தவைக்கப் பார்க்கிறாயே
நிலைமை இதை எங்கே
நாமும் போய் கூற?

சு.ஆர்த்திகா
தொல்புரம் கிழக்கு

## இன்முகம் கொண்டு வாரீர்!

மழைதந்த வீழ்ச்சி
மண்ணிலே அதிகரித்ததால்
மக்களிங்கே பெருந்துயர்கொண்டு
மனைமகிழ்விழந்து மடிகின்றனர்
பொங்கிவந்த வெள்ளத்தால்
தங்கியிருந்த இடமெல்லாம்
தண்ணீர் பரவி
தாங்கனாந் துயர்கொண்டு
இடம்விட்டு இடம்போக நேர்ந்தது
மழையின்றி உலகில்லை
என்றார் வள்ளுவர்
மழைநீர் உயர்ந்தாலும் உலகில்லை
இயற்கை தந்த இத்துன்பங்கள் ஒழிய
இவர்களுக்கு உதவிடுவோம்'
வாரீர் இன்முகம் கொண்டு

சி.திவ்வியா
யா/ப/மெ/ம/வி.

## இப்படிக்கு இயற்கை

மண்ணுலகே வறளும்
மழை நீரின்றி
அழைத்தாலும்
உடன் வாராத
பருவமழை
பிழைத்திங்கு
பேய் அடைமழையாய்
விளைத்த வினை
வேதனைதான்–அட
மானிடமே விழி!
அடாச்செயலாம்
காடுகளை அழியாதே
இப்படிக்கு இயற்கை

சிவமணி
சுருவில்

## நீயும் மாறிவிட்டாயோ?

மழையே கொட்டும் மழையே
இந்த மண்ணிலே வாழும்
மானிடர்களின் வலியும் ரணமும்
நீ அறிவாயோ?– மழையே
நீ அறிந்தும் இரக்கமில்லாமல்
பெய்கின்றாயோ? மழையே
வன்போர்செய்த கொடியவர்கள்
போல் நீயும் மாறிவிட்டாயோ? மழையே!

ச.பிரநிதன், மட்டுவில்

## ஊருக்குள் வானம்

குளங்கள் நிரம்பி வாய்க்காலால்
களனி நிரம்பி பயிர் செழித்து
மீதும் மழையே கடலில் கலந்து
கருணை செய்வாய் ஊருக்குள் வானம்
பிளந்து கொட்டி வலிதீர்க்கும்
வன்மமா இச்சீற்றம்

தணிகைவாசன், தாவடி

சிறுகதை



# தாய்மை

நேரகாலம் பாராது மழை அடிக்கடி மண்ணை முத்தமிட்ட வண்ணம் இருந்தது. விரும்பியோ விரும்பாமலோ மண் அந்த முத்த மழையில் நனைந்து கொண்டேயிருந்தது. " இது என்னுடைய காலம்" என மழை இறுமாப்புடன் அவ்வாறு செய்தது.

மதியச்சாப்பாட்டை முடித்த ராதாவோ சாலையோர ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டு ஜன்னல் கரையோரமாக சாய்மனைக் கதிரையைப் போட்டவாறு மழையை ரசிக்கத் தொடங்கி விட்டாள். மழையை ரசிக்கத் தெரியாதவர் இந்த உலகில் யாரும் உளரோ? மழைத்துளிகள் அந்தத் தார்வீதியில் விழுந்து தெறித்தன.

பாடசாலை முடிந்து செல்லும் மாணவர்கள் அந்த மழையில் நனைந்த வண்ணம் சென்றார்கள். அதனை மிகவும் விரும்பி அவர்கள் செய்தார்கள். பதின்ம வயது மாணவர்கள் அவர்கள். இளங்கன்று பயமறியாது என்பது அவர்கள் செயலில் தெரிந்தது. அந்த மாணவர்களைப் பார்த்து அவளிடம் இருந்து ஒரு பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

அவளுக்குக் குழந்தைகள் பிறந்திருந்தால் நிச்சயம் இவர்களது வயதில் இருந்திருப்பார்கள். ஆனால் அவளுக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை.

"அம்மா" என்ற அந்த மிக உயர்ந்த அந்தஸ்து அவளுக்கு எட்டாக்கனியாகப் போய்விட்டது. இனி நிச்சயம் அவளுக்குக் கிடைக்கப் போவதும் இல்லை. சென்ற வருடம் தான் அவள் கணவன் கண்ணன் நிரந்தரமாகக் கண்ணை மூடிக் கொண்டான்.

இடி விழுந்த சத்தத்தில் திடுக்குற்றாள் ராதா. முன்னரெல்லாம் இடி விழுந்தால் தன் கண்ணனைக் கட்டிப் பிடித்துக் கொள்வாள். அவ்வளவு பயம். இப்போதெல்லாம் இடிகளை அவளை ஒன்றும் செய்வதில்லை. ஏனெனில் அவள் வாழ்க்கையில் பேரிடிகளைத் தாங்கிய்வள்.

கண்ணனும் ராதாவும் காதலித்துக் கரம் பிடித்தவர்கள். பல்கலைக்கழகத்தில் இவள் புதுமுக மாணவியாக நுழைந்த போது அவன் நான்காம் வருடத்தில் பயின்று கொண்டிருந்தான். அவன் அவளிடம் தன் விருப்பத்தை வெளியிட்ட விதம் இப்பவும் மனதில் பசுமரத்தாணியாய் பதிந்திருந்தது.

பகிடிவதைகளில் இருந்து பலமுறை இவளை அவன் காப்பாற்றியிருந்தான். பகிடிவதைக்கு அவன் எதிரானவன் அல்ல. எனினும் வரைமுறையாக பகிடிவதை ஆரோக்கியமானது என்பது அவன் வாதம். அது ஒருபோதும் மற்றவர் மனங்களைக் காயப்படுத்தக்கூடாது என்பதில் அவன் கவனமாக இருப்பான்.

ஒருமுறை தன் நண்பனிடம் இருந்து பகிடிவதையில் இவளைக் காப்பாற்றிய போது "தாங்ஸ் அண்ணா" என்றாள் ராதா.

"அண்ணா என்று சொன்னால் திரும்பவும் உன்னை அவனிடம் அனுப்பிடுவன்" என்றான் கண்ணன்.

ஏதுமறியாது முழித்தாள் ராதா.

" நான் ஏதும் பிழையாக சொல்லிவிடடனா அண்ணா?" என்றாள்.

"அண்ணா என்று கூறி என்னை அவமதித்து விட்டாய்?" அவளுக்கு சிரிப்புத் தான் வந்தது.

"வயதுக்கு மூத்தோரை அண்ணா என்றுதானே அழைக்க வேண்டும். பின்ன தம்பி என்றா அழைப்பார்கள்?" விசும்புக்குக் கூறினாள் ராதா.

கண்ணன் அவளுக்கு அருகில் வந்து அவளது கண்கள் இரண்டையும் உற்றுப் பார்த்தான். அதில் குறும்புத்தனம் குடிகொண்டிருந்தது. இவன் கண்களைச் சந்தித்ததும் அவை இயல்பாகவே தாழ்ந்து கொண்டன. அவள் முகம் சிவந்தது. மெல்ல வேர்க்கவும் செய்தது. அழுத்தமான குரலில் கண்ணன் கூறினான்.

"எனக்கு சுற்றிவளைச்சுப் பேசத்தெரியாது. பின்னால் திரிந்து சைட் அடிக்கப் பிடிக்காது. நேரடியாகவே உனக்குச் சொல்கிறன். உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு. உன்னைக் கல்யாணம் செய்ய ஆசைப்படுறேன்"

நிலைகுலைந்து போனாள் ராதா. திடீரென கண்ணன் சொன்னதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. அங்கிருந்து விருட்டென்று சென்றுவிட்டாள். பெண்கள் விடுதியில் தனது அறைக்கு வந்தவளுக்கு என்னவோ எல்லாம் செய்தது. நெஞ்சுப்படபடப்பு இன்னும் அடங்கவும் இல்லை. எவ்வளவு மனக்கட்டுப்பாட்டுடன் இருந்தவள் ஒரு நொடிப்பொழுதில் எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கிவிட்டானே அந்த மாயக்கண்ணன்.

அவள் உள்ளத்தில் இன்பத்தின் ஊற்று மெல்ல மெல்ல மடை திறந்த வெல்லம் போல் பிரவாகிக்கத் தொடங்கியது. தன்னையும் அறியாமலே அறையிலிருந்த சிறு கண்ணாடியின் முன் போய் நின்றாள் ராதா. கரிய இரு பெருவிழிகள். வில் போன்ற புருவம். பிறை போன்ற நெற்றி. உச்சி வகிடு எடுத்து பின்னிய நீண்ட இரட்டை ஜடைக் கூந்தல். அவை அவள் நடையின் ஜதிக்கு ஏற்ப பின்னழகில் தாளம் போடும். மொத்தத்தில் அவள் சந்தனத்தில் செதுக்கிய சிலையாக இருந்தாள். தலையைச் சிலுப்பி ஒற்றை ஜடைக் கூந்தலை முன்னுக்கு எடுத்தாள். தன்னையே அழகு பார்த்தவள் பின் நாணிச் சிரித்தாள். "அழகி தான்" என்று முணுமுணுத்தாள்.

"ஆனாலும் நீ ஒரு கோழை. உன் இலட்சியம் மற்றும் மனோதிடம் என்பவற்றை ஒரு நொடிப் பொழுதில் இழந்து விட்டாயே" என்று அவளது விம்பமே அவளை ஏளனம் செய்வது போல் இருந்தது.

மெல்ல மெல்ல மொட்டாக அரும்பிய காதல் பூவாக மலர்ந்தது. பல தடைகளையும் தாண்டி திருமணம் எனும் பந்தத்தில் இருவரும் இணைந்து கொண்டனர். காலம் கரைந்தோடியது. மாதங்கள் உருண்டோடி வருடங்கள் ஆனது. இவர்கள் போகும் இடமெல்லாம் "விசேஷம் ஒன்றும் இல்லையா? என்று கேட்டுத் தொலைத்தனர்.

இதனால் கொண்டாட்டங்களுக்கு செல்வதையே தவிர்த்தாள் ராதா. நொந்து நொந்து நூலாக இழைத்துப் போனாள். ஐந்து வருடங்கள் கடந்து போனது.

வைத்தியரின் ஆலோசனைக்கு இணங்க சில பரிசோதனைகளை இருவரும் செய்தனர். மருத்துவர் மருத்துவச் சான்றிதழைப் பார்த்துவிட்டு இருவரையும் பார்த்தார். அந்தக் குளிரூட்டப்பட்ட அறையிலும் அவர்கள் இருவருக்கும் வேர்த்தது.

"அம்மாவிற்கு பிரச்சினை இல்லை. ஐயாவிடம் தான் சின்னப் பிரச்சினை" என்றார். மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி போல் ஆனான் கண்ணன். " நான் கொஞ்ச குளிசைகள் தாறன் மூன்று மாதங்கள் மட்டும் பாருங்கள். முன்னேற்றம் இல்லாவிட்டால் வாருங்கள்" என்றார் வைத்தியர். மூன்று மாதம் அல்ல ஒருவருடம் முழுதாய் முடிந்தும் முன்னேற்றம் ஏதும் இல்லை.

ஒருநாள் கண்ணன் மது போதையில் வீடு வந்திருந்தான். "இது என்ன புதுப் பழக்கம்" என்று கடிந்தாள் ராதா. கைவிரல்களுக்கிடையே சிகரெட் ஒன்று புகைந்து கொண்டிருந்தது. அதன் மணம் ஒவ்வாமையால் இருமத் தொடங்கினாள் ராதா.

"தூர எறியுங்கள். இந்த இரண்டு பழக்கமும் இருந்தால் உடம்பு கெட்டுவிடும்" என்றாள். "இனி கெட என்ன இருக்கு"? என்றான் விரக்தியுடன். அவன் கண்களில் இருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்தோடியது.

" ஏன் அழுகிறீர்கள். அழாதையுங்கோ" என்று தானும் அழுதாள் ராதா. எமக்கு குழந்தைப் பாக்கியம் நிச்சயம் கிட்டும். கடவுள் எம்மைக்கைவிடமாட்டார்" என்றாள்அவள்.

" அது வெறும் பகற்கனவு" என்றான் அவன்.

"ஏன் அப்படிச் சொல்லுறீங்க?" " நான் உன்னை ஏமாற்றி விட்டேன்" என்றான் குரல் தளதளக்க. இடிந்து போனாள் ராதா. "என்ன சொல்லுறீங்க?" இளவயதில் ஏற்பட்ட விபத்து என் ஆண்மைக்கு பங்கம் ஏற்படுத்தி விட்டது.

பேயறைந்தவள் போல் தூண் ஒன்றைப் பிடித்தவாறு இருந்தாள். படிக்கும் காலத்தில் கண்ணனின் கண்மூடித்தனமான மோட்டார் சைக்கிள் ஓட்டம் விபத்தில் முடிந்தது. அதனால் அவன் ஆண்மை பறி போனது. வைத்தியர்கள் முன்னமே இதைச் சொன்னபோதும் அவன் அதை அலட்சியம் செய்திருந்தான். அதன் விளைவை இப்போ உணருகின்றான்.

அவன் கதை அறிந்து அப்படியே இடிந்து போய் உட்கார்ந்திருந்தாள் ராதா. ஏமாற்றத்தின் வலியால் அவள் புழுவாய்த் துடித்தாள். சிறிது காலத்தில் கண்ணன் கொடிய நோய்க்கு ஆளாகி இறந்து போனான். தனிமை கொடுமை இதுதான். இவள் வாழ்க்கை ஆயிற்று. இரவில் மாத்திரம் தூரத்து உறவுக்காரப் பெண் ஒருவர் வந்து தங்கிச் செல்வார். எவ்வளவு காலத்திற்குத் தான் இவள் இப்படி இருப்பாள்?

ராதா... அடி புள்ள ராதா... என்று கூப்பிட்ட குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்தாள் ராதா. கமலமக்கா தான்.

என்னடி புள்ள லைட் ஒன்றும் போடாமல் இருட்டில் இருக்கிறாய்? என்றவாறு லைட்டுக்களை ஒவ்வொன்றாக போட்டார் கமலமக்கா. "என் வாழ்க்கையே இருள் சூழ்ந்ததுதானே" என்று விரக்தியோடு சிரித்தாள் ராதா. இப்படியெல்லாம் கதைக்காதே புள்ள என்று கதைக்கு முற்றுப் புள்ளி வைத்த கமலமக்கா இரவுச் சாப்ாட்டிற்குரிய ஆயத்தத்தில் ஈடுபட்டார்.

கை, கால், முகம் கழுவி திருநீற்றை நெற்றியில் அள்ளிப் பூசிய வண்ணம் வந்திருந்தாள் ராதா. கமலமக்கா சாப்பாடு தயாரிப்பதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அக்கா! நான் எனக்கென்று ஒரு வாழ்க்கையை தேர்ந்தெடுக்க உள்ளேன்? இதனை எதிர்பாராத கமலமக்கா தன்னை சுதாரித்துக் கொண்டு "உனக்கு வயசு இருக்குத்தானே. இதில் ஒன்றும் தப்பில்லை" என்றார்.

"ஓமக்கா எனக்கு விரும்பியவாறு என் வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகிறேன். " உன்னிடம் அழகில்லையா? இல்லை வசதிதான் இல்லையா? இதைக்கேட்டதும் வெள்ளி நாணயங்கள் சிதறியதுபோல் கலகலவென்று சிரித்தாள் ராதா. "உண்மையாகவா?" "பின்ன. நீ ஓம் என்று சொன்னால் எத்தனை பேர் லைன்ல நிப்பாங்கள்?"

ஒரு கிழமையின் பின்னால் அந்த ஆச்சிரமத்தில் இருக்கும் பெண் பிள்ளைகள் அனைவரும் வரிசையாக நின்றிருந்தனர். அவர்களை வழிநடத்தும் ஓர் வயதான அம்மா ஒருவர் பேசத்தொடங்கினார். "இன்று எமக்கெல்லாம் ஓர் மகிழ்ச்சியான நாள். எமது ஆச்சிரமத்திற்கு நிரந்தரமான ஓர் இடம் கிடைத்துள்ளது. அதேபோல் உங்களோடு தங்கியிருந்து உங்களை வழிநடத்த புதிய தாய் ஒருவர் உங்களுக்குக் கிடைக்கப்பெற்றிருப்பது நீங்கள் செய்த பாக்கியமே" என்று கூறிய அந்த வயதான பெண்மணி " வாருங்கள் ராதா... முன்னே வாருங்கள்..." என்று அழைத்தார்.

ராதா இரு கரங்களையும் கூப்பியவாறு முன்னே வந்து நின்றாள். " இவர் வயதிலே குறைந்தவர் என்றாலும் தனது வீடு மற்றும் சொத்துக்களை எங்கள் ஆச்சிரமத்திற்குத் தந்துள்ளார். மற்றும் தம்மையே எம்மோடு இணைத்துள்ளார். உங்களுடன் இருந்தே உங்களைக் கவனிப்பார். உங்கள் அனைவரையும் தத்தெடுத்துள்ளார். இவருக்கு நன்றி பாராட்ட வேண்டியது உங்கள் கடமையாகும்" என்று கூறி முடித்தார்.

ராதா அவர்கள் முன் " நீங்கள் எனக்கு நன்றி தெரிவிக்க வேண்டாம். ஆனால் என்னை உங்கள் அம்மாவாக தத்தெடுத்தாலே போதும்" என்றாள். பிள்ளைகள் எல்லோரும் ஒருசேர "அம்மா" என்று அழைத்தார்கள்.

" அம்மா எம் அன்புத் தாயே! நீங்கள் பல்லாண்டு காலம் வாழவேண்டும்" ராதாவின் விழிநீர் வழிந்தோடியது. அடிவயிறு குளிர்ந்தது. கடவுள் இப்போ ஒரு குழந்தையையல்ல அறுபது குழந்தைகளை அவளுக்குப் பரிசளித்திருக்கிறார். குழந்தைகளின் அன்பு மழையில் அவள் நனைந்தாள். பிறவிப் பயனை இன்று பெற்றதாய் அவள் உணர்ந்தாள்.

சி.சிறீரங்கன்
உரும்பிராய்

# ஆட்சியை இறுக்கும் சீன கம்யூனிஸ்ட்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கும் சவால்கள்

## எதிர்கொள்வாரா சீன ஜனாதிபதி?



சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கும் நாளுக்கு நாள் சவால்கள் அதிகரித்தவண்ணமே இருக்கின்றன. ஹொங்கொங்கில் கடந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களில் ஜனநாயக ஆதரவுச் சக்திகளுக்கு கிடைத்த மகத்தான வெற்றி ஹொங்கொங் நெருக்கடியில் கம்யூனிஸ்ட் கட்சி கடைப்பிடித்துவருகின்ற அணுகுமுறைக்கான அதிர்ச்சிதரும் வகையிலான ஒரு கண்டனமாக அமைந்தது.

மொத்தம் 18 மாவட்ட சபைகளில் 17 சபைகள் ஜனநாயக ஆதரவு உறுப்பினர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டன. அந்த தேர்தலில் முன்னென்றுமில்லாத அளவுக்கு வாக் காளர்கள் பெருமளவில் (71 சதவீதத் துக்கும் அதிகம்) கலந்துகொண்டனர்.

### ஹொங்கொங்கை கையாளுதல்

சீனப்பெருநிலப்பரப்புக்கு ஆட்களை நாடுகடத்துவதற்கு அதிகாரமளிக்கும் சட்டமூலமொன்று அறிமுகப்படுத்தப்பட்டதை எதிர்த்து இவ்வருட முற்பகுதியில் தொடங்கிய ஆர்ப்பாட்டங்களுக்கு பிறகு அந்தப் பிராந்தியத்தின் உணர்வுகளை சோதித்துப் பார்ப்பதற்கான உண்மையான முதல் பரீட்சையாக அமைந்த உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இருக்கும் பெரும் ஆதரவை வெளிக்காட்டி நிற்கின்றன.

நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் ஹொங்கொங் தலைவி காறீலாம் தனது அரசாங்கம் தேர்தல் முடிவுகளை மதிக்கும் என்றும் மக்களின் அபிப்பிராயங்களை பணிவான முறையில் செவிமடுத்து ஆழ்ந்து சிந்திக்கப்போவதாகவும் கூறினார்.

ஆனால், ஹொங்கொங் வீதி ஆர்ப்பாட்டங்களின் குரல்களை பீஜிங் கவனத்திற்கு எடுக்குமா? என்பது தெளிவாகத்தெரியவில்லை. ஜனாதிபதி ஜி ஜின்பிங் அவரது அணுகுமுறையை மாற்றுவதற்கு பீஜிங்கில் எந்தவிதமான நெருக்குதலோ அல்லது ஊக்கமோ கொடுக்கப்படுவதாக இல்லை. பதிலாக, அவரது கடும்போக்கு அணுகுமுறை மேலும் வலுப்படக்கூடும் என்றே தெரிகிறது. இவ்வருட முற்பகுதியில் ஹொங்கொங்கில் நெருக்கடி தொடங்கியபோது அவர் எதிர்பார்த்திருக்கக்கூடியதை விடவும் வேகமாக அவரது தெரிவுகள் சுருங்குகின்றன.

மெய்நடப்பில் சீனாவின் சக்கரவர்த்தியாக ஜி ஜின்பிங் மாறுவதற்கு முன்னர் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் குழுவின் நிலையியல் குழுவில் ஹொங்கொங் விவகாரங்களுக்கான பொறுப்பை வகித்தவர் என்பதால், அவரைப் பொறுத்தவரை, இது குறிப்பாக பிரச்சினைக்குரிய ஒரு நிலைவரமேயாகும்.

விட்டுக்கொடாத தனது கடுமையான நிலைப்பாட்டில் உள்ளார்ந்தமான ஒரு நம்பிக்கையை ஜனாதிபதி கொண்டிருக்கிறார் போலத்தெரிகிறது. அத்துடன் முன்னென்றுமில்லாத மட்டத்துக்கு மையப்படுத்தப்பட்ட அவர் கொண்டிருப்பதால், தன்னால் முன்வைக்கப்பட்ட கொள்கைகளுக்கான எந்தப் பழியையும் பகிர்ந்துகொள்வதற்கு அவருக்கு எவருமில்லை. எது எவ்வாறிருப்பினும், ஹொங்கொங் சீனாவின் ஒரு பகுதியே என்று கூறியிருக்கும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் ஜி, ஹொங்கொங்கை சிக்கலுக்குள்ளாக்குவதற்கான எந்தவொரு முயற்சியுமோ அல்லது அதன் உறுதிப்பாட்டையும் சுபீட்சத்தையும் சேதப்படுத்துவதற்கான எந்தவொரு முயற்சியுமோ வெற்றிபெறப்போவதில்லை என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

ஆனால், சீன அரசாங்கத்தின் இரகசிய ஆவணங்கள் சர்வதேச புலனாய்வு பத்திரிகையாளர்கள் அமைப்புக்கு வெளிப்படுத்தப்பட்டமை கட்டுப்பாட்டை உறுதியாக நடைமுறைப்படுத்துவதில் ஜி ஜின்பிங்கின் ஆட்சிக்கு இருக்கின்ற இயலாமையை தெளிவாக வெளிக்காட்டுகிறது.

வடமேற்கு சீன மாகாணமான சின்ஜியாங்கில் முஸ்லிம் உய்குர் இனத்தவர்களையும் ஏனைய சிறுபான்மையினத்தவர்களையும் பெரும் எண்ணிக்கையில் எவ்வாறு தடுத்துவைத்துக் கொடுமைப்படுத்துகிறது என்பதை வரிசைப்பட விபரிக்கின்றன அந்த ஆவணங்கள்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான இலக்குடன் தொழிற்பயிற்சி பாடசாலைகளுக்கு பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்களை அனுப்பியதாக சீனா திரும்பத்திரும்ப கூறுவதை இது பொய்யாக்குகிறது. பெருந்தொகையானோர் தடுத்துவைக்கப்படுவதற்கு உதவும் கருவிகளாக உலகம் பூராகவும் உள்ள சீனத்தூதரகங்களும் கொன்சுலேற் அலுவலகங்களும் செயற்படுகின்றன என்பதையும் ஆவணங்கள் வெளிக்கொணர்ந்திருக்கின்றன என்பது முக்கியமான ஒரு விடயமாகும். அத்தகைய விபரங்கள் வெளிக்கிளம்புகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பமும் உலகளாவிய ரீதியில் சீனாவின் நம்பகத்தன்மையை பெரிதும் குறையச் செய்கிறது.

வெளியில் இது பெருமளவுக்கு தெரியாமல் இருக்கக்கூடும். ஆனால், சீனாவின் உலகளாவிய மதிப்பு தாக்கத்துக்குள்ளாகிறது.

ஜி ஜின்பிங்கைப் பொறுத்தவரை, அதிகரித்து வருகின்ற இந்த உலகளாவிய எதிர்ப்பலை உள்நாட்டில் மிகப் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஹொங்கொங்கில் அவருக்கு நல்ல தெரிவுகள் இல்லை. அவர் தனது கடும்போக்கு அணுகுமுறையை தொடருவாரேயானால், ஹொங்கொங்கில் கள நிலைவரம் படுமோசமானதாகவே மாறும். ஆனால், சலுகைகளை செய்வதும் கூட மிகவும் சாத்தியமான ஒரு தெரிவாக அவருக்கு இல்லை. ஏனென்றால், ஜனநாயக ஆதரவாளர்களின் கோரிக்கைகள் எந்தளவு தூரத்துக்கு போகக்கூடும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

நாடுகடத்தல் சட்டமூலம் வாபஸ் பெறப்பட்டுவிட்டாலும் கூட, ஹொங்கொங் ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகள் அதிகரித்தவண்ணமே இருக்கின்றன. மெய்யான சர்வஜன வாக்குரிமை, பொலிஸாரின் கொடுமைகள் தொடர்பான முறைப்பாடுகள் மீதான விசாரணை ஆகியவையும் அந்த கோரிக்கைகளில் உள்ளடங்குகின்றன. ஜனவரியில் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் ஹொங்கொங்கிலும் தாய்வானிலும் நிலைவரங்களை சீனா கையாளுவதற்கு குறுகிய காலகட்டமே இருக்கிறது.

### கட்சி மீதான தாக்கம்

21 ஆம் நூற்றாண்டில் முக்கியமான ஒரு வல்லரசாக வெளிக்கிளம்பப்போகும் சீனாவை வழிநடத்தப்போகும் ஒரு தலைவர் என்று சி ஜின்பிங்கிற்கு உள்ள மதிப்பும் கூட சீனப்பெருநிலப்பரப்பின் மக்களைப் பொறுத்தவரை மங்கலாகக் கூடிய சாத்தியமும் இருக்கிறது.

குழப்பநிலையை கையாள இயலாததாக தங்களது தலைமைத்துவம் இருக்கிறது என்று சாதாரண சீனர்கள் நம்புவார்களேயானால், சீனாவின் அரசியலில் கம்யூனிஸ்ட் கட்சி வளர்த்து வைத்திருக்கும் நொய்மையான சமநிலையும் பாதிப்புக்குள்ளாகலாம்.

ஜி ஜின்பிங்கின் கொள்கைகள் கண்டனத்துக்குள்ளாகும்போது கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பூசல்கள் கிளம்புவதற்கான ஒரு வாய்ப்பும் இருக்கிறது. அதியுயர் தலைவராக மாறுவதற்கு அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் அவருக்கு பெருமளவு எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது.

தனது எதிரிகளுடன் அவர் ஈவிரக்கமின்றி நடந்துகொண்டார். அவருக்கு பதிலடி கொடுக்க அந்த எதிரிகளில் சிலர் சந்தர்ப்பத்துக்காக காத்துக்கொண்டிருப்பார்கள். சீனப் பொருளாதாரம் சிறப்பாக செயற்படவில்லை.

ஜி ஜின்பிங் பேரார்வத்துடன் முன்னெடுக்கும் மண்டலமும் பாதையும் செயற்றிட்டம் மீதான உட்கண்டனங்கள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. வீறுமிக்க பொருளாதார தருக்கத்தையும் விட அவரின் தற்பெருமைக்காக முன்னெடுக்கப்படுகின்ற இந்த ஆரவாரமான செயற்றிட்டத்துக்கான செலவு தொடர்பிலும் கடுமையான விமர்சனங்கள் கிளம்பியிருக்கின்றன.

மற்றைய நாடுகளில் செல்வாக்கைச் செலுத்தும் நோக்கில் சீனா முன்னெடுக்கின்ற முனைப்பான நடவடிக்கைகளுக்கும் கடுமையான எதிர்ப்பு கிளம்புகின்றது. இது தொடர்பில் அடிக்கடி புதிய தகவல்கள் வெளிவருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

அவுஸ்திரேலிய பாராளுமன்றத்திற்குள் உளவாளியொருவரை வைத்திருப்பதற்கு சீனாவினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சதித்திட்டம் ஒன்று தொடர்பாக மிகவும் அண்மையில் அவுஸ்திரேலிய பத்திரிகைகள் அறிவித்தன.

இதை "பெரும் குழப்பத்தைத் தருகின்ற" விவகாரம் என்று அவுஸ்திரேலிய பிரதமர் வர்ணித்திருக்கிறார். அந்த விவகாரம் அந்நாட்டின் உளவு நிறுவனத்தினால் தற்போது விசாரணை செய்யப்பட்டு விருகின்றது.

ஹொங்கொங்கிலும் தாய்வானிலும் சீனாவின் நடவடிக்கைகள் பற்றி தகவல்களை வழங்கியதையடுத்து ஒரு சீன உளவாளி அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருப்பதாகவும் அவர் நேரடியாகவே உளவு வேலைகளில் ஈடுபட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்த நிலைவரங்கள் எல்லாம் ஏற்கனவே பாதிப்புக்குள்ளாகியிருக்கும் உலகளாவிய சீனாவின் பெயருக்கு மேலும் சேதத்தை ஏற்படுத்துகின்றன.

ஜி ஜின்பிங் மீதும் கம்யூனிஸ்ட் கட்சி மீதும் நெருக்குதல்கள் அதிகரிக்கும் நிலையில், பீஜிங் அதன் சொந்த பிரச்சினைகள், தோல்விகளில் இருந்து கவனத்தைத் திருப்புவதற்காக உலகை குற்றஞ்சாட்டுவதில் இறங்கக்கூடிய ஆபத்துகள் இருக்கின்றன.

பீஜிங்கில் கிளம்புகின்ற பல நெருக்கடிகளில் இருந்து தோன்றக்கூடிய எதிர்மறையான தாக்கங்களை கையாளுவதற்கு தன்னை தயார்படுத்துகின்ற டில்லி, சீனாவின் எந்தவொரு வீர சாகசத்துக்கு எதிராகவும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

த இந்து

# கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் முஸ்லிம்கள் இடம்பெறாதது ஏன்?



இலங்கையில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் அமைக்கப்பட்ட புதிய அமைச்சரவையில் முஸ்லிம்கள் எவரும் இடம்பெறாத நிலையில், அண்மையில் நியமிக்கப்பட்ட இராஜாங்க மற்றும் பிரதி யமைச்சர்களிலும் முஸ்லிம் ஒருவரேனும் இடம்பெறவி ல்லை என்பது, முஸ்லிம் மக்கள் மற்றும் அரசியல் வாதிகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு முன் 15 பேர் கொண்ட புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட போதிலும், அதில் முஸ்லிம்கள் எவரும் இடம்பெறவில்லை. ஆனால், டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆறுமுகம் தொண்டமான் என தமிழர் இருவர் - அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்களாக முஸ்லிம்கள் நியமிக்கப்படலாம் எனும் எதிர்பார்ப்பு இருந்தது. ஆயினும், இன்று வழங்கப்பட்ட இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர் பதவிகளிலும் முஸ்லிம்களுக்கு இடம் வழங்கப்படவில்லை.

**சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கிறது.- மஸ்தான்**



இது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பேசிய போது, முஸ்லிம் ஒருவருக்கு அமைச்சுப் பதவியொன்றும் வழங்கப்படவில்லை என்பதை முஸ்லிம் சமூகமும், முஸ்லிம் நாடுகளும் பார்த்துக் கொண்டிருக்கின்றன" என்று கூறியதோடு, "அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக அல்லது இன்று வழங்கப்பட்ட இராஜாங்க அல்லது பிரதியமைச்சர் பதவிகளுக்கேனும் முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்" என்றார் அவர்.

இருந்தபோதும் அனுபவத்தில் மூத்தவர்கள் என்ற அடிப்படையில்தான் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், அதனால், ஆளுந்தரப்பில் முஸ்லிம்கள் இடம்பெறாமல் போயிருக்கக்கூடும் எனவும் காதர் மஸ்தான் கூறினார்.

"இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பைஸர் முஸ்தபாவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படாததால், இராஜாங்க மற்றும் பிரதியமைச்சுப் பதவிகளும் தனக்கு வேண்டாம் என்று கூறி விட்டார்.

மறுபுறம், நானும் இந்த தடவைதான் நாடாளுமன்றத்துக்கு தெரிவானவர் என்பதால், ஆளுந்தரப்பில் என்னை விடவும் பல மூத்தவர்கள் உள்ளனர்".

"எனவே அனுபவ முதிர்ச்சி என்ற அடிப்படையிலேயே அமைச்சர், இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

ஆனாலும், முஸ்லிம் ஒருவர் இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படவில்லை என்பதை, முஸ்லிம் சமூகமும், முஸ்லிம் நாடுகளும் அவதானித்துக் கொண்டிருக்கின்றன".

"இதேவேளை ஆட்சியாளர்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆயினும் காலப்போக்கில் இந்தக் குறையை ஆட்சியாளர்கள் நிவர்த்தி செய்வார்கள்" எனவும் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான காதர் மஸ்தானுக்கு ஆகக் குறைந்தது பிரதியமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்கிற பேச்சுகளும் எதிர்பார்ப்பும் அரசியல் வட்டாரங்களில் இருந்தமை குறிப் பிடத்தக்கது.

**முஸ்லிம்களின் மனதில் உள்ள கசப்பை நீக்க வேண்டும்- பைசல் காசிம்**



முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் முந்தைய அரசாங்கத்தில் பிரதியமைச்சர் பதவியை வகித்தவருமான பைசல் காசிம் இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

"அமைச்சர் பதவிகளுக்கு முஸ்லிம் ஒருவரையேனும் இந்த ஆட்சியாளர்கள் நியமிக்காமல் விட்டதன் மூலம், முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்டுள்ளது" என்றார்.

"அமைச்சரவையில் தமிழர்கள் இருவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள நிலையில், முஸ்லிம் சமூகத்திலிருந்து ஒருவரேனும் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பைஸர் முஸ்தபா ஏற்கனவே அமைச்சராக இருந்தவர். எனவே, அவரை அமைச்சராக இந்த அரசாங்கம் நியமித்திருக்கலாம். ஆனால், இதனையெல்லாம் செய்யாமல் முஸ்லிம்களை இந்த ஆட்சியாளர்கள் பழிவாங்கியுள்ளதாகவே தெரிகிறது".

"கடந்த ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம்கள் இரண்டு தரப்பாகப் பிரிந்து வேட்பாளர்களுக்கு வாக்களித்திருந்தனர்.

ஆனால், அந்த இரண்டு தரப்புக்களும் பௌத்த சமயத்தைச் சேர்ந்த வேட்பாளர்களுக்குத்தான் வாக்களித்திருந்தனர். சஜித் பிரேமதாஸவுக்கு நாங்கள் ஏன் வாக்களித்தோம் என்பதும், மற்றைய முஸ்லிம் தரப்பு கோட்டாவுக்கு ஏன் வாக்களித்தனர் என்பதும் அவரவரின் விருப்பமாகும். அதற்காக முஸ்லிம் சமூகத்தை ஆட்சியாளர்கள் பழிவாங்கக் கூடாது" என்றார் அவர்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் நடந்த சம்பவங்கள் முஸ்லிம்களுக்கு கசப்பை ஏற்படுத்திருந்தது. அதனால்தான் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் கோட்டாவுக்கு எதிராக வாக்களித்திருந்தனர்".

"ஆனாலும் முஸ்லிம்களின் மனதில் உள்ள கசப்பை நீக்குவதற்கான சந்தர்ப்பம் இப்போது ராஜபக்ஷக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதனை அவர்கள் செய்து, முஸ்லிம்களின் ஆதரவை வென்றெடுக்க வேண்டும். ஆனால், இவ்வாறு முஸ்லிம்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காமல் புறக்கணித்தால், அந்த சமூகத்தின் மனதில் ஏற்பட்டுள்ள கசப்பு மேலும் அதிகரிக்கவே செய்யும்" எனவும் பைசல் காசிம் தெரிவித்தார்.

**சிறுபான்மையினருக்குச் செய்த துரோகம்- ஜவாத்**



கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கொள்கை பரப்பு செயலாளருமான கே.எம். ஜவாத் இது குறித்து பேசிய போது, "இந்த ஆட்சியாளர்கள் சிறுபான்மை மக்களை அனுசரித்து, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடியவர்கள் இல்லை என்பதை நிரூபித்திருக்கிறார்கள்" என்றார்.

"நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியவர்கள் இனவாதத்தைத்தான் தமது மூலதனமாக்கியிருந்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இனவாதப் பல்லவியைத் தான் ஆட்சியாளர்கள் பாடப் போகிறார்கள். அதற்காகத்தான், தமது அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்காமல் புறக்கணித்துள்ளனர்".

இதன் மூலம், தமது அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்று, சிங்களப் பேரினவாதிகளுக்கு காட்டுவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சித்திருக்கிறார்கள். ஆனால், இந்த இனவாதம் அடுத்த தேர்தலில் தோற்கடிக்கப்படும். தமிழர்களும் முஸ்லிம்களும் இன்றி, நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைக் கூட, இந்த ஆட்சியாளர்களால் பெற முடியாத நிலை ஏற்படும்".

"மறுபுறமாக, முஸ்லிம்களை இவ்வாறு புறக்கணித்ததன் மூலம், இலங்கையில் சிறுபான்மையினர் சார்ந்த விடயங்களில் நியாயமாக நடந்து கொள்ளக்கூடிய ஆட்சியாளர்கள் இன்னும் வரவில்லை என்பதை, உலக நாடுகளுக்கு, தற்போதைய ஆட்சியாளர்கள் நிரூபித்திருக்கின்றனர்" என்றார்.

(பி.பி.சி. தமிழ்)

# அயோத்தியில் என்ன நடந்தது?

05

## கல்யாண் சிங் முதல் யோகி ஆதித்யநாத் வரை அயோத்தி வழக்கில் 'நீதி' யின் பங்கு என்ன?

உச்சநீதிமன்றம் எந்த முடிவெடுத்தாலும் அதற்கு உத்தரப்பிரதேச அரசு உடன்படும் என்பதுதான் கல்யாண் சிங் கொடுத்த வாக்குறுதி. அந்த மாநிலத்தின் இன்றைய முதல்வர் யோகி ஆதித்யநாத் சொன்னதும். ஆனால் நீதிமன்றங்களின் உத்தரவை ஒவ்வொரு முறையும் உத்தரப்பிரதேச அரசு மீறியதுதான் 70 ஆண்டுக்கால சர்ச்சைக்குக் காரணமாக இருந்திருக்கிறது. சர்ச்சைக்குரிய இடத்தைச் சுற்றியுள்ள இடத்தில் பூஜைக்காகக் கூடியதாகச் சொல்லி 70,000 பேர் நுழைந்தார்கள். தொடக்கத்தில் கரசேவகர்கள் பூஜையில் ஈடுபட்டதாகவே துணை இராணுவக் குழுக்கள் வாக்குமூலம் அளிக்கின்றனர்.

பாரதிய ஜனதாக் கட்சி மற்றும் விஷ்வ இந்து பரிஷத் அமைப்புத் தலைவர்கள் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென 150 பேர் வரையிலான டிக்கள் மசூதியின் மேல் ஏறத் தொடங்கினார்கள்.

இராணுவத்தின்மீதும்பொலிஸார்மீதும் அவர்கள் கற்களை வீசத்தொடங்கியதாகக் கூறப்படுகிறது. சரியாக மதியம் 12:20 மணியளவில் அவர்களில் 80 பேர் மசூதிக் கட்டுமானத்தின் மீது ஏறி அதை இடிக்கத் தொடங்கினார்கள். அந்த சமயம் மசூதிக்குள் நுழைந்தவர்கள் எண்ணிக்கை 25,000 எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.


அத்வானி ரத யாத்திரை

மதியம் 2:00 மணியளவில் அதே இடத்தில் கூட்டம் 75,000 ஆக அதிகரித்திருந்தது.

இது அத்தனையும் நிகழ்ந்துகொண்டிருந்த போது பொலிஸார் எதுவும் செய்யக் கூடாது என்ற உத்தரவுக்குப் பணிக்கப்பட்டிருந்தார்கள். உத்தரப்பிரதேச முதல்வர் ஆணைக்கிணங்க மத்திய ரிசர்வ் பாதுகாப்புப் படையும் செயலற்றுக் கிடந்தது. நீதிமன்ற உத்தரவைக் காப்பாற்றுவது எங்கள் கடமை என்று வாக்குறுதியளித்த கல்யாண் சிங், தான் பிரமாணம் ஏற்றுக்கொண்ட அரசியலமைப்புக்கு எதிராக நடந்துகொண்டார். இது நம் வார்த்தைகள் அல்ல. இவை அத்தனையையும் இதே சொற்பிரயோகத்துடன் மத்திய அரசின் வெள்ளை அறிக்கை விவரிக்கிறது. நீதவான்கள் இல்லை என்பதைக் காரணம் காட்டி மத்தியப் படைகளை உபயோகிக்க முடியாத வகையிலும் நடந்துகொண்டது அவரது அரசு. அதன்பிறகு மத்திய அரசும் உத்தரப்பிரதேச மாநில ஆளுநரும் இணைந்து செயற்பட்டு கலந்தாலோசித்து தற்காலிகக் கட்டுமானம் ஒன்றை இரவு 7.30 மணியளவில் அதே இடத்தில் நிர்மாணிக்கத் தொடங்கினார்கள்.

உடனடியாக குடியரசுத் தலைவர் ஆட்சியை உத்தரப்பிரதேசத்தில் அமுலுக்குக் கொண்டு வந்த மத்திய அரசு, கீழ்க்கண்ட உத்தரவுகளைப் பிறப்பித்தது.


1. மதச்சார்பு இயக்கங்கள் தடை செய்யப்படும்.

2.கலவரத்தைத் தூண்டிவிட்டவர்கள் உட்பட அனைவரின் மீது சட்டரீதியாக அதிதீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.


பாபர் மசூதி

3. இதில் கடமை தவறிய அதிகாரிகளின் மீது விசாரணையின் அடிப்படையில் ஒழுங்கு முறை நடவடிக்கை எடுக்கப்படும்.

4. இடிக்கப்பட்ட இடம் மீண்டும் கட்டப்பட அரசு ஆவண செய்யும்.




உச்சநீதிமன்ற

5. புதிய கோயிலுக்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவை அத்தனையும் நரசிம்மராவ் அரசு உறுதியளித்தது .

அரசு உறுதியளித்த அதே நேரம் கரசேவகர்களுக்குத் தலைமையேற்ற பாரதிய ஜனதா கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி இப்படியாகச் சொல்கிறார், 6 டிசெம்பர் 1992 அன்று கர சேவை தொடங்கும் என்று சொன்னது பஜனைகளும் கீர்த்தனைகளும் அல்ல, கற்களைக் கொண்டு கையகப்படுத்தப்பட்ட 2.77 ஏக்கர் நிலத்தில் கோயிலை எழுப்புவதுதான். காங்கிரஸ் அரசு எங்கள் ராம ஜென்ம பூமி இயக்கத்தைப் பிளவுபடுத்தி வலுவிழக்கச் செய்துவிட்டது" என்கிறார்.


யோகி, மோடி, ராஜ்நாத் சிங்

உச்சநீதிமன்றத்துக்குக் கைப்படக் கடிதம் எழுதிக் கொடுத்த விஜயராஜே சிந்தியாவோ "கோயில் கட்டுமானத்துக்காக உத்தரப்பிரதேச அரசு தங்கள் ஆட்சியை இழக்கக்கூடத் தயாராக இருந்தது. கரசேவகர்கள் இன்னும் உச்சபட்சத் தியாகங்களுக்குத் தயாராக இருக்க வேண்டும்" என்று தனது மற்றொரு பக்கத்தை வெளிப்படுத்தினார்.

இதுதொடர்பான வழக்கு மீண்டும் ராஜ்நாத் சிங் உத்தரப் பிரதேச முதல்வராக இருந்த ஆட்சிக்காலத்தில் அலகாபாத் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது, அதற்கடுத்தபடியான டைம்லைன்கள் கீழே

2002: அயோத்தி நிலம் யாருக்குச் சொந்தம் என்கிற விவாதம் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் மீண்டும் தொடங்கியது.

2010: வாக்கெடுப்பின் அடிப்படையில் உயர்நீதிமன்றம் மூன்று தரப்புகளிடையே நிலம் பிரிக்கப்படுவதற்குத் தடைவிதித்தது.

2011: உயர்நீதிமன்றத்தின் முடிவுக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தது.

2016: பாரதிய ஜனதாவின் சுப்ரமணிய சுவாமி அயோத்தி நிலத்தில் ராமர் கோயில் கட்டுவதற்காக உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

2017: தொடர்ச்சியாக உத்தரப்பிரதேச வக்ஃபு வாரியத்துக்கும் உச்சநீதிமன்றத்துக்கும் இடையிலான விசாரணை நடைபெற்றது.

கோயில் நிலத்திலேயே மசூதி கட்டமுடியும் என வக்ஃபு வாரியம் வாதம் செய்தது. அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் 2010 ஆம் ஆண்டு உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் 32 சமூக ஆர்வலர்கள் மனுத் தாக்கல் செய்தார்கள்.

2018: சமூக ஆர்வலர்கள் மனுவை உச்சநீதிமன்றம் விசாரிக்கத் தொடங்கியது. சுப்ரமணிய சுவாமி உட்பட இடைக்கால மனுதாரர்களாகத் தங்களை இணைத்துக்கொள்ளச் சொல்லித் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களையும் உச்சநீதிமன்றம் இரத்து செய்தது. ஜனவரி 2019 இற்கு விசாரணையை ஒத்திவைத்து தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு உத்தரவு பிறப்பித்தது.

2019: அயோத்தி வழக்கு விசாரணைக்கான உச்சநீதிமன்ற ஐவர் அமர்விலிருந்து நீதிபதி ரமணா மற்றும் லலித் பின்வாங்கினர். வழக்கு விசாரணை காலதாமதமானது. 26 பெப்ரவரியில் அயோத்தி விசாரணை அமர்வு மீண்டும் கூடியது. உச்சநீதிமன்றத்தின் பார்வையில் அமையப்பெற்ற மூவர் பேச்சுவார்த்தை குழு பேச்சுவார்த்தையைத் தொடங்கியது.

பேச்சுவார்த்தை பலனளிக்காததால் ஒகஸ்ட் 6 தொடங்கி இந்த விவகாரத்தில் தினப்படி விசாரணை தொடங்கியது. நிர்மோகி அகாராவின் நில உரிமை குறித்து விசாரிக்கப்பட்டது. பல்வேறு தரப்புகளின் வாதங்களும் விவாதங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விசாரணை 16 ஒக்டோபருடன் நிறைவுபெற்றது.

இப்படி பல ஆண்டுகளாக நடந்துவந்த மத, அரசியல் விளையாட்டுக்கான இறுதித் தீர்ப்பை இன்று எழுதியிருக்கிறது உச்சநீதிமன்றம். மக்களின்உரிமைகளையும் நலனையும், தேசிய ஒருமைப்பாட்டையும், ஜனநாயகத்தின் அடிப்படையான மதச்சார்பின்மையையும் கருத்தில்கொண்டே அந்த தீர்ப்பு இருக்கவேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக இருந்தது.

(முற்றும்)

ஜூனியர் விகடன்

# கட்டற்ற கருத்துச் சுதந்திரமும் அதன் தாக்கங்களும்

நாட்டின் தலைவரைத் தீர்மானிக்கும் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று முடிவடைந்துள்ளது. இனிவரும் காலங்களில் பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்று பல தேர்தல்கள் வரிசையில் வர காத்திருக்கின்றன. இந்தத் தேர்தல் காலங்களில் ஒவ்வொரு கட்சியும் ஏன் தனிநபர்களும் கூட ஆளுக்கு ஆள் வரிந்து கட்டிக் கொண்டு மற்றைய தரப்பின் மீது சேறு பூசும் செயற்பாடுகளில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. தேர்தல் காலங்களில் மட்டுமல்லாது சாதாரண காலங்களில் கூட சமூக வலைத்தளங்கள், அச்சு ஊடகங்கள், பிரசாரக் கூட்டங்களில் எவ்வித அடிப்படை ஆதாரங்களுமின்றி இவ்வாறான காழ்ப்புணர்வுப் பேச்சுக்கள் **(Hate Speech)** பரவ விடப்படுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக மக்கள் பிரதிநிதிகள் என்றழைக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை அங்கத்தவர்களை நோக்கி பெருமளவில் இவ்வாறான அவதூறுகள் பரப்பப்படுகின்றன.

இந்தச் சேறு பூசும் நடவடிக்கைகள் இன்று "கழுவி ஊத்துதல்" என்று மிகவும் நாகரிகமாக (?) அழைக்கப்படுகின்றன. இந்தக் கழுவி ஊத்தல்கள் சமூக வலைத்தளங்களான முகநூல், டுவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களிலேயே அதிகம். உண்மையில் எந்தவித அடிப்படைகளுமற்ற இவ்வகையான அவமதிப்புக்கள், பொய்ப் பிரசாரங்கள், இணையவழிக் குற்றச் செயல்களாக கருதபடக் கூடியன.

ஏனைய நாடுகளைப் பொறுத்தளவில் அவற்றின் சட்டப்பொறிமுறையில் இக்குற்றச்செயல்களுக்கான தகுந்த தண்டனைகளும் அவற்றின் அமுலாக்கங்களுமுண்டு. துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டில் இவ்வாறான சட்டங்கள் மற்றும் அவற்றின் அமுலாக்கங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

மேலும் சமூக வலைத்தளங்கள், இணையத்தளங்களில் ஒரு வினைத்திறனான தணிக்கைப் பொறிமுறை மற்றும் கட்டுப்பாட்டுப் பொறிமுறையொன்று காணப்படாமை ஒரு குறைபாடாகும். இதனால் இவற்றில் யாரும் நினைத்ததைக் கண்டபடி சகட்டு மேனிக்குப் பிரசுரிக்க இயலுமாகின்றது.

இனி இவ்விடயம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பான தரக்குறைவான கண்ணியமற்ற விமர்சனங்களைப் பார்ப்போமாயின் அரசியற் திட்டத்தின் உறுப்புரை 3 இறைமை நாட்டு மக்களிடம் உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. உண்மையில் நாட்டு மக்கள் தேர்தல்களின் மூலம் இந்த இறைமையை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கின்றனர். இது மக்களாட்சி கோட்பாடு. அதாவது இந்த மக்கள் பிரதிநிதிகள் மக்கள் சார்பாக இந்த இறைமையை அப்பியாசம் செய்கின்றார்கள் **(Exercise)** அல்லது பிரயோகிக்கின்றனர். அடிப்படையில் மக்கள் இறைமை என்பது மிகப் பெரிய ஒரு எண்ணக்கருவாகும். ஜனநாயக அரசியலில் அதற்கு மேலான ஒன்று இல்லை. **(Sovereignty is the supreme)** அதுவே அதியுச்ச அதிகாரம். இந்த அதியுச்சி அதிகாரம் மதிக்கப்பட வேண்டியவொன்று. மக்கள் பிரதிநிதிகளை கொச்சைப்படுத்துவது மக்கள் இறைமையை மறுவாறாகக் கூறினால் மக்களை கொச்சைப்படுத்துவது போலாகும். அதாவது எம்மையே கேவலப்படுத்துவது போலாகும். இது கண்ணாடி மாளிகைக்குள் இருந்து கொண்டு கல்லெறிவதற்கு ஒப்பானதாகும்.

இங்கு அரசியல்வாதிகள் எல்லோரும் மதிக்கப்படத் தகுதியானவர்களா? அவர்கள் செய்யும் கைங்கரியங்கள் எல்லாம் சரியானவையா? என்ற நியாயபூர்வமான கேள்வி எழுவது ஏற்புடையதே. விமர்சிப்பதென்பது வேறு. அவமதிப்பது கொச்சைப்படுத்துவதென்பது வேறு. காத்திரமான பக் கஞ்சாராத தரவுகளை அடிப்படையாகக் கொண்ட விமர்சனங்கள் வரவேற்கத்தக்கவை. ஒருவரை அவமானப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட விமர்சனங்களும், கேலிப் பேச்சுக்களும் தவிர்க்கப்பட வேண்டியவை. அரசியல் கலாசாரம் முதிர்ச்சியடைந்த பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் அரசியல் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பில் புரியப்படும் விமர்சனங்கள் நாகரிகமானவை. ஒருவரின் அரசியல் வாழ்க்கையை குழி தோண்டுவதை நோக்கமாகக் கொள்ளாதவை.

குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு பதவி வகிக்கவென மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகளை அனுப்புகின்றோம். அவர்கள் தமது கடமையை சரிவரப் புரியாது விடில் அவர்கள் மீது வெறுப்படைவது, கோபம் கொள் வது சரியானதே. எனினும் இந்த வெறுப்பு, கோபம் என்பன நாகரிகமான முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்கு எம்மால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படும் அரசியல்வாதிகள் தமது பதவிக் காலம் மட்டும் எவற்றையும் புரியாது விட்டால் அவர்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு எமது அரசியற் திட்டத்திலோ அல்லது வேறு முறைகளிலோ இடமில்லை. அவர்களுடைய பதவிக்காலம் முடியும் வரை காத்திருந்து மீண்டும் ஒரு தேர்தலிலேயே அவர்களுக்கு அரசியல் ஜனநாயக ரீதியில் பாடம் புகட்ட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை மக்களுக்குக் காணப்படுகின்றது. ஒரு தேர்தலில் தெரிவு செய்யப்படும் ஒரு மக்கள் பிரதிநிதி அடுத்த தேர்தலில்



போட்டியிடுவதை நோக்கமாக கொள்ளாத போது அந்தப் பிரதிநிதி தனது பதவிக் காலத்தை மக்களுக்குச் சேவையாற்றாது வெறுமனே கடத்தி விடக் கூடும்.

சுவிஸ் போன்ற நாடுகளில் இவற்றுக்கு தகுந்த அரசியல் பொறிமுறையுண்டு. அதாவது மக்களால் தெரிவு செய்யப்பட்டு சட்டமன்றத்திற்கு அனுப்பப்படும் மக்கள் பிரதிநிதி தனது கடமையை சிறப்பாக ஆற்றவில்லை என மக்கள் கருதினால் அவர்களுடைய பதவிக்காலம் முடியும் முன்னரே அவர்களை மக்கள் திருப்பி அழைத்துக் கொள்ளலாம். இதனை தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர் வடிவேலு பாணியிற் சொன்னால் "ஒரு ஆணியும் பிடுங்க வேண்டாம் திருப்பி வாருங்கள்" என திரும்ப அழைத்துக் கொள்ளலாம். இவ்வாறானதொரு முன்னேற்றகரமான ஒரு அரசியல் முறைமை இலங்கை, இந்தியா போன்ற குறைவிருத்தி நாடுகளில் காண முடியாமை எமது துரதிர்ஷ்டமேயாகும்.

ன்பன தொடர்பில் ஆராய்வோம்.

இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் 2ஆம் குடியரசு அரசியலமைப்பில் உறுப்புரை 14(1) ஆனது கருத்துச் சுதந்திரம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதன் பிரகாரம் பிரஜைகள் எல்லோருக்கும் பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் உண்டு. இது அவர்களது உடிப்படை உரிமைகளாகும். இவை மீறப்பட்டால் உயர் நீதி மன்னத்தில் அடிப்படை உரிமை வழக்கொன்றை தாக்கல் செய்ய முடியுமாகின்றது. எனினும் உறுப்புரை 15(2) இதற்கான மட்டுப்பாட்டைக் குறிப்பிடுகின்றது. இதன் பிரகாரம் இந்த கருத்துச் சுதந்திரமானது இனச் சுமுக வாழ்வு, மதச் சுமுகவாழ்வு என்பவற்றின் நலன்கருதியோ அல் லது பாராளுமன்றச் சிறப்புரிமைகள், நீதிமன்ற அவ மதி ப்பு அவதூறு என்பவற்றினூடாக மட்டுப்படுத்தப்படலாம்.

இங்கு பாராளுமன்ற சிறப்புரிமை எனப்படுவது பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பில் பொய்யான ஒரு தகவலை அல்லது பிறழ்பகர்வு ஒன்றை பிரசுரித்தல் குற்றமாகக் கருதப்படும். இதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் இடையறாத சிறப்புரிமைகளை அனுபவிப்பதோடு சாதாரண பிரஜைகள் பாராளுமன்ற நடவடிக்கைகளை விமர்சிக்க கட்டுப்படுத்தப்படுகின்றனர். இன்று இது தொடர்பாக பாராளுமன்ற சிறப்புரிமைகள் சட்டம் இல.21,1953 திருத்தியமைக்கப்பட்டு ஆளப்படுகின்றது. ஏதாவது ஒரு நபர் இந்த சிறப்புரிமையை மீறுபவராயின் அவர் பாராளுமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு உள்ளாகி தண்டிக்கப்படுவார். அரசியலமைப்பின் **4(C)** ஆனது நீதிமன்றத்திற்கு இவ்வதிகாரத்தினை வழங்குகின்றது. எது எவ்வாறாயினும் நீதிமன்றத்தினை அவமதிக்கும் நிலைக்குச் சமமாக இந்நிலைமை நோக்கப்படுகின்றது.

சட்டமா அதிபர் எதிர் நடேசன் என்ற வழக்கிலே 1972 ஆம் ஆண்டின் சட்டமன்றமான தேசிய அரசுப் பேரவை சம்பந்தமாக அவதூறுச் செய்திகள் வெளியிட்டமைக்காக இரு பதிப்பாசிரியர்கள் கைது செய்யப்பட்டனர். மலால் கொட எதிர் சட்டமா அதிபரும் மற்றவர்களும் என்ற வழக்கில் நூதன தேவதாத என்று நூலின் ஆசிரியர் தனது நூலில் முன்னைய நாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன பற்றிய அவதூறுக் கருத்துக்களை பிரசுரித்திருந்தார். இங்கு நூலாசிரியருக்கெதிராக பொலிஸ் நடவடிக்கை மேற்கொண்ட போது அதற்கெதிராக நூலாசிரியர் தான் அரசியலமைப்பில் கூறப்பட்ட கருத்து மற்றும் பேச்சுச் சுதந்திரத்திற்கமைவா கவே நடந்து கொண்டதாகவும் பொலிஸ் நடவடிக்கையால் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டதாக உயர் நீதிமன்றத்தில் வழக்கிடப்பட்டது.

எனினும் உயர்நீதிமன்றம் அவரது அடிப்படை உரிமை மீறப்பட்டதாக கருத முடியாது எனக் கூறியது. இதே போல அண்மையு உதாரணமாக நாட்டின் தற்போதைய ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷவால் 2010 ஆம் ஆண்டு சண்டே லீடர் பத்திரிகைக்கெதிராக 2 பில்லியன் நட்டஈடு கோரி தாக்கல் செய்யப்பட்ட அவமதிப்பு வழக்கைக் குறிப்பிடலாம். இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடுவதற்காக MIG 27 விமானங்களை கொள்வனவு செய்த போது ஊழல் இடம்பெற்றதாக சண்டே லீடர் பத்திரிகையில் பிரசுரமான செய்தி தொடர்பிலேயே இந்த அவமதிப்பு மானநஷ்ட வழக்கு கோட்டாபய ராஜபக்ஷவால் இடப்பட்டிருந்தது.

சமூக வலைத்தளங்கள் இணையத்தளங்களின் ஆக்கிரமிப்பு ஊடகத்துறையில் அதிகரித்துள்ள போதிலும் பத்திரிகைகள் என்னும் அச்சு ஊடகங்கள் இன்றும் பெறுமதிமிக்கனவாக தமது பலத்தினை இழந்து விடாதவையாகவே திகழ்கின்றன. அவை நடுநிலையாக செயற்பட வேண்டும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. எனினும் நடைமுறையில் இது சற்றுக் குறைவாகவே காணப்படுகின்றது. நாட்டிலுள்ள பல பத்திரிகைகள் அரசியற் கட்சிகளால் அல்லது அரசியல்வாதிகளால் அல்லது அவர்களது ஆதரவாளர்களால் நடத்தப்படுகின்றன. இவை "கட்சிப்பத்திரிகைகள்" என அழைக்கப்படுகின்றன. பத்திரிகைகள் மாத்திரமல்ல வானொலிகள் மற்றும் தொலைக்காட்சிகளின் நிலையும் இவ்விதம் தான். எனினும் எல்லாப் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகளையும் ஒட்டுமொத்தமாக அவ்வாறு சொல்லி விட முடியாது. நடுநிலை காக்கும் ஊடகப் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளும் ஊடகங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

எது எவ்வாறான போதிலும் கருத்துச் சுதந்திரம் என்பது மறுக்கப்பட முடியாதவொன்று. எனினும் அதற்கும் ஒரு எல்லையுண்டு. இவை நாட்டின் இனச் சுமுக வாழ்வு மற்றும் மதச் சுமுக வாழ்விற்கு பங்கம் ஏற்படுத்துபவையாக அமையக்கூடாது என்பது முக்கியமானது. ஏற்கனவே கனன்று கொண்டிருக்கும் தீயை ஊதிப் பற்ற வைப்பவையாக கட்டற்ற கருத்துச் சுதந்திரம் அமைந்து விடக்கூடாது. மொகொட்டி எதிர் குணதிலக என்ற வழக்கிலே மதிப்பிற்குரிய நீதியரசர் பண்டாரநாயுக்கா அவர்கள் "கருத்துச்சுதந்திரம் என்பது ஒரு பொதுமகனை அல்லது அரசினை அல்லது கட்சியினை விமர்சிக்கும் போது அவை நியாயமான ஒரு எல்லைக்கு அல்லது வரையறைக்குட்பட்டவையாக இருக்க வேண்டும்" என்கிறார். இங்கு எழும் பிரச்சினை அல்லது வினா என்னவெனில் யார் அந்த வரையறைக்குரிய கோட்டினை வரைவது? என்பதாகும்.

சி.பிரணவன்,
உதவிப் பதிவாளர்,
உயர் பட்டப்படிப்புக்கள் பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# பிரெக்ஸிட் விவகாரம்; இமாலய வெற்றி

## பிரிட்டனைக் கலக்கிய போரிஸ் ஜான்சன்




பிரிட்டனில் டிசெம்பர் 12 ஆம் திகதி நடந்த தேர்தல் வாக்குப்பதிவுகளின் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டன. அங்கு மொத்தமுள்ள 650 இடங்களில் கன்சர்வேட்டிவ் கட்சி 365 இடங்களையும் தொழிலாளர் கட்சி 203 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. மீதமுள்ள இடங்களில் ஸ்காடிஸ் தேசியக் கட்சி 48, தாராளவாத ஜனநாயகவாதிகள் அமைப்பு 11, டெமாக்ரடிக் யுனியனிஸ்ட் கட்சி 8 மற்றும் பிற கட்சிகள் 15 இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

சுமார் 30 வருடங்களுக் குப் பிறகு பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சி மிகப் பெரும் வெற்றி பெற்றுள்ளது. அதே போல் 1935 ஆம் ஆண்டுக் குப் பிறகு, தொழிலாளர் கட்சி மிகவும் மோசமான தோல்வியைச் சந்தித்துள்ளது. பிரிட்டனைப் பொறுத்தவரை பிரெக்ஸிட் (Brexit) விவகாரம் பெரிதாகப் பார்க்கப்படுகிறது. இதனால் அந்நாட்டின் புதிய பிரதமர் போரிஸ் ஜான்சன் இந்த விவகாரத்துக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைத்து, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டனை வெளியேற்றுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.



இந்தப் பெரும் வெற்றி தொடர்பாகப் பேசியுள்ள போரிஸ், “எனக்கு வாக்களிக்க மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப நடந்துகொள்வேன். விரைவில் பிரெக்ஸிட் நிறைவேற்றப்படும். தொழிலாளர் கட்சியின் ஆதரவாளர்கள் முதல்முறையாக கன்சர்வேட்டிவ் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். அவர்களின் நம்பிக்கைக்கு நிச்சயம் பலன்



கிடைக்கும்" என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், இதே பிரிட்டன் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 15 பேர் வெற்றி பெற்று அந்நாட்டு நாடாளுமன்றத்துக்குள் சென்றுள்ளனர். இவர்களில் கோயன் மொஹிந்த்ரா, கிளாரி கௌடின்ஹோ மற்றும் நவேந்திர மிஸ்ரா ஆகிய 3 பேரைத் தவிர, மீதமுள்ள அனைவரும் ஏற்கனவே அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள்.

இவர்கள் அனைவரும் பல ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தங்களின் வெற்றியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

**பிரீத்தி படேல்**

குஜராத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ப்ரீத்தியின் பெற்றோர்கள் பணி நிமிர்த்தமாக இங்கிலாந்தில் குடியேறியுள்ளனர். பிற்காலத்தில் அங்கேயே செட்டில் ஆன ப்ரீத்தி 2010 ஆம் ஆண்டு முதல் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டு வருகிறார். முந்தைய அமைச்சரவையில் இவருக்கு உள்துறை அளிக்கப்பட்டது.

தற்போது இவர் 24,082 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

**ரிஷி சுனக்**

இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தியின் மருமகன் ரிஷி சுனக்கும் 2015 ஆம் ஆண்டு முதல் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் செயற்பட்டு வருகிறார்.

தன் மாமனாரைப்போல் பிசினஸ்மானாக அறியப்பட்டாலும் இங்கிலாந்தின் முக்கிய கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியில் மிகவும் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார். இந்தத் தேர்தலில் 26,086 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

**தன்மஜித்சிங் தேசி**

பஞ்சாபைப் பூர்வீகமாகக் கொண்ட தேசி குடும்பத்துடன் இங்கிலாந்தில் செட்டிலாகிப் பல வருடங்கள் ஆகிவிட்டன.

தேசிக்கு பூர்வீகம் இந்தியாவாக இருந்தாலும் இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்தவர். பிரிட்டனின் எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சியின் முக்கிய உறுப்பினராக இருக்கும் தேசி 2017 இல் தான் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றார்.

தற்போது நடைபெற்ற தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்டவரைவிட 25,678 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : இரத்த திலகம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



பசுமை நிறைந்த நினைவுகளே
பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் கழித்த தோழர்களே
பறந்து செல்கின்றோம்

பசுமை நிறைந்த நினைவுகளே
பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் கழித்த தோழர்களே
பறந்து செல்கின்றோம்

குரங்குகள் போலே மரங்களின்
மேலே தாவித்திரிந்தோமே
குரங்குகள் போலே மரங்களின்
மேலே தாவித்திரிந்தோமே

குயில்களைப் போலே இரவும் பகலும்
கூவித் திரிந்தோமே
குயில்களைப் போலே இரவும் பகலும்
கூவித் திரிந்தோமே

வரவில்லாமல் செலவுகள் செய்து
மகிழ்ந்திருந்தோமே
வரவில்லாமல் செலவுகள் செய்து
மகிழ்ந்திருந்தோமே

வாழ்க்கைத் துன்பம் அறிந்திடாமல்
வாழ்ந்து வந்தோமே நாமே
வாழ்ந்து வந்தோமே

பசுமை நிறைந்த நினைவுகளே
பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் கழித்த தோழர்களே
பறந்து செல்கின்றோம்

எந்த ஊரில் எந்த நாட்டில்
என்று காண்போமோ
எந்த ஊரில் எந்த நாட்டில்
என்று காண்போமோ
எந்த அழகை எந்த விழியில்
கொண்டு செல்வோமோ
எந்த அழகை எந்த விழியில்
கொண்டு செல்வோமோ

இந்த நாளை வந்த நாளில்
மறந்து போவோமோ
இந்த நாளை வந்த நாளில்
மறந்து போவோமோ

இல்லம் கண்டு பள்ளி கொண்டு
மயங்கி நிற்போமோ
என்றும்மயங்கி நிற்போமோ

பசுமை நிறைந்த நினைவுகளே
பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் கழித்த தோழர்களே
பறந்து செல்கின்றோம்
நாம் பறந்து செல்கின்றோம்

# வெந்தயத்தின் மருத்துவ குணங்கள்





வெந்தயம் நம் சமையலில் அன்றாடம் கட்டாயம் சிறிதளவு சேர்த்துக் கொள்ளவேண்டிய ஒரு முக்கிய பொருள். வெந்தயத்தின் சுவை கசப்பாக இருந்தாலும், சில வகையான குழம்பு வகைகளுக்கு, அதிக சுவை கூட்டுவதாக இது அமைகிறது. இந்த சிறு வெந்தயமானது சுவைக்காக மட்டுமல்லாமல், பல மருத்துவ குணங்களையும் உள்ளடக்கியுள்ளது. வெந்தயத்தின் மகத்தான பயன்கள் என்ன என்பதைப் பற்றி இந்தப் பதிவில் சற்று விரிவாக காண்போம்.

**வெந்தயத்தில் உள்ள சத்துக்கள்**

மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, நீர் சத்து, புரதச்சத்து போன்றவை வெந்தயத்தில் அடங்கியுள்ளன. இது தவிர சுண்ணாம்புச்சத்து, சோடியம் சத்து, இரும்புச் சத்து, பொட்டாசியம் போன்ற தாது பொருட்களும், ரிபோபிளேவின், தயமின், விற்ற மின் ஏ போன்ற சத்துகளும் அடங்கியுள்ளன.

**பிரசவ வலியை குறைக்க**

பிரசவ காலத்தில் பெண்களுக்கு உண்டாகும் வலியினை கட்டுப்படுத்த வெந்தயம் உதவியாக உள்ளது. பெண்களின் கருப்பையை சுருக்கி, குழந்தை பிறப்பதற்கு தூண்டுதலாக இருக்கிறது. ஆனால் பெண்கள் கர்ப்பகாலத்தில் வெந்தயத்தை அளவோடு சாப்பிடுவது நல்லது. அளவுக்கு அதிகமாக சாப்பிட்டால் கருச்சிதைவு அல்லது குறை பிரசவம் உண்டாக வாய்ப்பு உள்ளது.

**தாய்ப்பால் சுரக்க**

வெந்தயத்தில் உள்ள டையோஸ்ஜெனின் என்ற வேதிப்பொருள் பெண்களுக்கு தாய்ப்பால் சுரப்பதை அதிகரிக்கிறது. குழந்தை பெற்ற பெண்களுக்கு கஞ்சியில் வெந்தயத்தை சிறிதளவு சேர்த்து காய்ச்சிக் கொடுத்தால் பால் அதிகமாக சுரக்கும்.

**பெண்களின் உடல் நலனைப் பாதுகாத்துக் கொள்ள**

பெண்களுக்கு மாதவிலக்கு வருவதற்கு முன் சில உபாதைகள் ஏற்படும். இந்த உபாதைகளை குறைக்க வெந்தயம் உதவியாக உள்ளது. முதன்முதலில் மாதவிடாய் ஏற்படும் சமயத்திலும், கர்ப்ப காலத்திலும் பெண்களுக்கு உடம் பில் ஏற்படும் சூட்டை தணிக்கவும், மனநிலை மாற்றத்தை சரி செய்யவும் வெந்தயத்தை சிறிதளவு வாயில் போட்டுக் கொண்டு தண்ணீர் குடிக்க வேண்டும். இதன் மூலம் நல்ல பலனை அடையலாம்.

**பெண்களின் மார்பகம் ஆரோக்கியமாக இருக்க**

வெந்தயமானது பெண்களின் ஓமோன்களை தேவையான அளவில் சுரக்கச் செய்து, மார்பகங்கள் சரியான அளவில் ஆரோக்கியமாக இருக்க வழி செய்கிறது.

**இதய அடைப்பை தவிர்க்க**

வெந்தயத்தில் உள்ள பொட்டாசியம் சத்தினால் நம் இதயத்துடிப்பும், இரத்தக் கொதிப்பும் சீராக இருக்கும். வெந்தயத்தில் இருக்கும் நார்ச்சத்தானது இதய அடைப்பை வர விடாமல் தடுக்கிறது. வெந்தயத்தை சீமைப்புளி, அத்திப்பழம், திராட்சை, இவைகள் அனைத்தையும் ஒரே அளவாக எடுத்துக் கொண்டு நீருடன் தேன் கலந்து சாப்பிட இதய வலி, மூச்சடைப்பு இவை நீங்கும்.

**கொலஸ்ட்ரோலை குறைக்க**

நம் உடலில் உள்ள கொழுப்புப் புரதத்தை இது குறைப்பதால் உடலில் கொலஸ்ட்ரால் அளவு கட்டுப் படுத்தப்படுகிறது. இதன் மூலம் நம் உடலின் எடையை குறைக்கலாம்.

**நீரிழிவு நோய் கட்டுப்படுத்த**

வெந்தயத்தில் கரையும் நார்ச்சத்து உள்ளதால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். அமினோ அமில சத்து வெந்தயத்தில் இருப்பதால், இன்சுலின் சுரப்பியை நம் உடலில் சீராக வைக்கிறது. இரவு நேரங்களில் வெந்தயத்தை தண்ணீரில் ஊறவைத்து, விடிந்ததும் தண்ணீருடன் சேர்ந்த வெந்தயத்தை குடித்து வந்தால் இரத்தத்தில் உள்ள சர்க்கரை சர்கரை அளவு குறையும்.

**செரிமானத்தைத் தூண்டும்**


சில சமயங்களில் நாம் உண்ணும் உணவானது செரிமானம் ஆகாமல் மலச்சிக்கலை உண்டாக்கி விடும். வெந்தயத்தில் உள்ள நார்ச்சத்து செரிமானத்தை ஊக்குவித்து மலச்சிக்கலை நீக்கி உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்ற உதவியாக உள்ளது. அதுமட்டுமல்லாமல் இது நம் உடலுக்கு குளிர்ச்சியை தருகிறது. சிறுநீரகத்தை சீராக வெளியேற்றுகிறது. நம் உடம்பை வரட்சியில் இருந்து பாதுகாக்கிறது. நன்றாக பசிக்கும் தன்மையை கொடுக்கும் நரம்புகளை பலப்படுத்தும்.

**வயிற்று கடுப்பு**

சூட்டினால் சில சமயங்களில் திடீரென்று ஏற்படும் வயிற்று வலியாக இருந்தாலும், வெந்தயத்தை வறுத்து நீர் விட்டு காய்ச்சி, சிறிதளவு தேன் கலந்து அந்த நீரை குடிக்க வேண்டும். அல்லது வெந்தயத்தை பொடியாக்கி மோரில் கலந்து குடிக்கலாம். இப்படி செய்தால் வயிற்று கடுப்பு குணமாகும்.

**சீதபேதியை நிறுத்தும்**

20 கிராம் அளவிற்கு வெந்தயம் எடுத்து வறுத்துக்கொள்ள வேண்டும். அதில் இடித்த வெல்லத்தை 50 கிராம் சேர்த்து பிசைந்து ஒரு நாளைக்கு நான்கு முறை சாப்பிட்டு வந்தால் சீதபேதி நிற்கும். சிறிது வெந்தயத்தை எடுத்து மோரில் போட்டு ஊறவைத்து



அரைத்து மோருடன் கலந்து நீர் மோராக குடித்தாலும் குணமாகும்.

**நெஞ்சு எரிச்சலைத் தடுக்கும்**


வெந்தயத்தில் இருக்கும் பசை தன்மையானது உங்கள் வயிற்றில் உள்புறத்தில் சூழ்ந்து கொள்வதால் எரிச்சலை உண்டாக்கும் குடல் தசைகளை சரி செய்கிறது. நம் உணவினை தாளிக்கும்போது ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை சேர்த்துக் கொள்வதால் நெஞ்செரிச்சலில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

**காய்ச்சலைக் குறைக்க**

வெந்தயத்தூள் ஒரு தேக்கரண்டி, எலுமிச்சை சாறு மற்றும் தேன் இவைகளை நீரில் கலந்து குடிக்க காய்ச்சல் குறையும். உடல் இழந்த ஆற்றலை மீண்டும் பெறும். வெந்தயத்தில் உள்ள பசை தன்மையானது இருமலையும் குறைக்கிறது.

**சரும அழகை பாதுகாக்க**

நீரில் ஊறவைத்த வெந்தயத்தை நன்றாக அரைத்து நம் சருமத்தில் ஏற்பட்டுள்ள காயத்தின் மீது பயன்படுத்தலாம். தீக்காயம், கொப்பளம் பிரச்சினைகளை இது தீர்க்கிறது. நீண்ட நாட்களாக



மறையாமல் இருக்கும் தழும்புகள் கூட மறையும்.

**முக அழகிற்கு**

வெந்தயத்தை ஊறவைத்து தயிருடன் சேர்த்து பேஸ்ட் போல அரைத்து ஃபேஸ் பேக்காக உபயோகப்படுத்தலாம். இதன் மூலம் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள், பருக்கள், சுருக்கங்கள் மறைந்து முகம் பொலிவாகும்.

**தலை முடி பிரச்சினைக்கு தீர்வு**

வெந்தயத்தை பேஸ்ட் போல அரைத்து தலையில் நன்றாக மசாஜ் செய்து குளித்து வர தலைமுடி வழுவழுப்பாகவும் கருமையாகவும் மாறும். தேங் காய் எண்ணெயில் வெந்தயத்தை சேர்த்து ஊற வைத்து மறு நாள் காலையில் வெந்தயத்துடன் சேர்த்து தேங்காய் எண்ணெயை தலையில் மசாஜ் செய்து வந்தால் முடி உதிர்வு குறையும்.




# ஏலம் ஆரம்பம்!



வன்...ரூ...த்ரீ... தி ப்ளேயர் கோஸ் டு... சுத்தியலின் சத்தத்திற்காக கிரிக்கெட் ரசிகர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த வாரம், ஐ.பி.எல். 13 ஆவது சீசனுக்கான ஏலம் தொடங்கப் போகிறது. இந்த ஆண்டு என்னென்ன ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன?

ஏலத்தின் மையப்புள்ளியாக இருக்கப்போவது அவுஸ்திரேலிய வீரர் கிளென் மக்ஸ்வெல். உளவியல் காரணங்களுக்காக கிரிக்கெட்டிலிருந்து தற்காலிகமாக விலகிய அவரது பெயர் ஐ.பி.எல்.ஏலப் பட்டியலில் இருந்ததே பலருக்கும் ஆச்சரியமாக இருக்கும். ஆனால், சிறு ஓய்வுக்குப் பிறகு மீண்டும் களமிறங்கி விட்டார் மக்ஸி. விக்டோரியா அணியினரோடு கடந்த வாரமே பயிற்சியைத் தொடங்கிவிட்ட அவர், முந்தைய உத்வேகத்தோடு களம் காண்பார் என எதிர்பார்க்கலாம். மிடில் ஓடர் பலவீனமாக இருக்கும் பெங்களூரு, கிங்ஸ்லெவன் அல்லது அவரது பழைய அணியான டில்லி கப்பிடல்ஸ் இவருக்காகக் கடும் போட்டியில் ஈடுபடலாம்.


கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐ.பி.எல்.தொடரில் பங்கேற்காத அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் மிட்செல் ஸ்டார்க், இந்த ஆண்டுக்கான ஏலத்துக்குத் தனது பெயரைப் பதிவிடவில்லை. அதேபோல், ஐ.பி.எல்.அணிகளால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுவந்த இங்கிலாந்து டெஸ்ட் கப்டன் ஜோ ரூட், ஏலத்தில் பங்கேற்காமல் “புறக்கணிப்பைப் புறக்கணித்துள்ளார்.

ஐ.பி.எல்.ஏலத்தில் ஆச்சரியமே நட்சத்திர வீரர்கள் புறக்கணிக்கப்படுவதும், அறிமுகமில்லாத வீரர்கள் கோடிகளைக் குவிப்பதிலும் தான் இருக்கிறது. அப்படியான ஆச்சரியங்கள் இந்த ஏலத்திலும் நிறைய காத்திருக்கின்றன. கொல்கத்தாவின் நம்பிக்கை நாயகனாக இருந்த ராபின் உத்தப்பா, டேல் ஸ்டெய்ன் போன்ற பெயர்கள் 'அன்சோல்டு' பட்டியலில் இணைவதற்கான வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன. மும்பை இந்தியன்ஸ், யுவராஜ் சிங்கை வாங்கியதுபோல் தங்கள் முன்னாள் வீரர் உத்தப்பாவை வாங்குவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இல்லையெனில், அவரது ஐ.பி.எல்.பயணம் முடிவுக்கு வரலாம்.

'சையது முஷ்தாக் அலி' தொடரில் அசத்திய மும்பை வேகப்பந்துவீச்சாளர் ஷாம்ஸ் முலானி பல கோடிகளுக்கு ஏலம் போகலாம். கிங்ஸ் லெவன், ராஜஸ்தான் ரோயல்ஸ், சுப்பர் கிங்ஸ் அணிகள் அவருக்குப் போட்டிபோடக்கூடும். அந்தத் தொடரின் டொப் விக்கெட் டேக்கரான தமிழக ஸ்பின்னர் சாய் கிஷோர் நிச்சயம் பல அணிகளின் கவனத்தைப் பெறுவார். அதேபோல் ரோஹன் கடம், ஷாரூக்கான், விராத் சிங் போன்றவர்களும் நல்ல தொகை பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.


வெளிநாட்டு வீரர்களில் வழக்கம்போல் மேற்கிந்தியத்தீவு வீரர்களுக்கு பெரிய வரவேற்பு இருக்கும். ஷெல்டன் காட்ரல் நிச்சயம் மிகப்பெரிய தொகைக்கு ஏலம் போவார். கரீபியன் பிரீமியர் லீக்கில் அசத்திய பிராண்டன் கிங், ஹெய்டன் வால்ஷ் ஜூனியர் போன்றவர்களுக்கும் பெரிய போட்டி இருக்கும்.

இயான் மோர்கன்



எதிர்பாராத கோடீஸ்வரர்கள் பட்டியலில் இணையவும் நிறைய பெயர்கள் இருக்கின்றன.

கிளென் மக்ஸ்வெல்




இங்கிலாந்து வீரர்களுக்கு இந்த முறை பாதியில் கிளம்பும் பஞ்சாயத்து இல்லையென்பதால் ஜேம்ஸ் வின்ஸ், அலெக்ஸ் ஹேல்ஸ், பேன்டன், ஜோர்தான், சாம் கரண் போன்றவர்களை இந்த சீசனில் அதிகம் காண்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த அணியின் ஒருநாள் கப்டன் இயான் மோர்கன் அனைத்து அணிகளின் விஷ் லிஸ்ட்டிலும் இருப்பார். கிங்ஸ்லெவன் அணிக்கு கப்டன் மெட்டீரியல் இல்லையென்பதால், பிரீத்தி ஜிந்தாவின் அணிக்கு மோர்கன் ஆடுவதற்கான வாய்ப்புகள் அதிகம்!

வழக்கம்போல் இந்த ஏலத்திலும் பிஸியாக இருக்கப் போவது கிங்ஸ் லெவன் நிர்வாகம்தான். கிட்டத்தட்ட தங்கள் அணியின் பாதியைக் கழற்றிவிட்டிருக்கும் அந்த அணியிடம் 42.7 கோடி ரூபாய் கைவசம் இருக்கிறது. கிறிஸ்லின், உத்தப்பா, பிராத்வெயிட் போன்ற காஸ்ட்லி வீரர்களை விடுவித்திருக்கும் நைட் ரைடர்ஸிடம் 35.65 கோடி ரூபாய் மீதமிருக்கிறது. குறைந்த பட்சமாக, மும்பை இந்தியன்ஸ் வசம் 13.05 கோடி ரூபாய் இருக்கிறது. அவர்களின் முதல் லெவன் ஏற்கனவே பர்பெக்டாக இருப்பதால், அவர்கள் வாங்க வேண்டியதெல்லாம் பேக் அப் வீரர்களைத்தான். அதனால், ஏலத்தில் மும்பை கொஞ்சம் ஃபிரீயாக இருக்கும்.

சென்னை சுப்பர் கிங்ஸ் வசம் 14.6 கோடி ரூபாய் இருக்கிறது. தங்களின் பழைய போர் முலாவை இந்த முறையும் பின்பற்றி, 'கோர்' வீரர்களைத் தக்கவைத்திருக்கிறது சென்னை அணி. வாட்சன், பிராவோ போன்ற முன்னணி வீரர்கள் இருபது-10 லீக்கில் பழைய உத்வேகத்தோடு விளையாடியிருப்பதால், அந்த அணிக்கு எந்த மாற்றமும் தேவைப்படப் போவதில்லை. தீபக் சஹாரின் எழுச்சி, அணிக்குள் இந்திய வேகப் பந்துவீச்சாளருக்கான இடத்தையும் நிரந்தரமாக்கியுள்ளது.


சாய் கிஷோர்



கடந்த ஆண்டு லுங்கி எங்கிடிக்கு ஏற்பட்ட காயம் சென்னை அணிக்குச் சற்று சிக்கலை ஏற்படுத்தியது. அதனால், ஒரு நல்ல வெளிநாட்டு வேகப்பந்துவீச்சாளரை வாங்குவது அவசியம். சாம் பில்லிங்ஸ் இடத்துக்கு ஒரு பட்ஸ்மேனையோ அல்லது பிராவோவுக்கு பக் அப்பாக ஒரு பாஸ்ட் பௌலிங் ஓல் ரவுண்டரையோ வாங்கலாம்.

இவர்களோடு சேர்த்து, இந்த முறையாவது ஓரிரு தமிழக வீரர்களை வாங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஷாரூக்கான், சாய் கிஷோர், பாபா அபராஜித் போன்றவர்கள் நல்ல ஃபார்மில் இருப்பதால், அதற்கான வாய்ப்பும் இருக்கிறது!

# மகாபாரதத்தின் விடுகதை



பஞ்சபாண்டவர்களில் ஒருவரான சகாதேவன் சந்தைக் குள் நுழைந்தான். அழகான குதிரையை அவனும் பார்த்தான். உடனே குதிரையின் உரிமையாளரை நெருங்கி, "குதிரை என்ன விலை? என்று கேட்டான்.

குதிரையின் உரிமையாளரோ, "ஐயா! இந்த குதிரை விற்பனைக்கு அல்ல. நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொன்னால், குதிரையை இலவசமாகவே கொடுப்பேன்" என்றார். சகாதேவன் உடனே, "சரி கேள்வியைச் சொல்லுங்கள்" என்றான்.

குதிரையின் உரிமையாளர், "நன்றாகக் கவனியுங்கள்! பிறகு பதில் சொல்லுங்கள்! ஒரு பெரிய கிணறு. அதில் உள்ள தண்ணீரைக் கொண்டு ஏழு சிறிய கிணறுகளை நிரப்பலாம். ஆனால், அந்த ஏழு கிணறுகளில் இருக்கும் தண்ணீரை எடுத்து, மறுபடியும் அந்த பெரிய கிணற்றில் ஊற்றினால், பெரிய கிணறு நிரம்பவில்லை. இது ஏன்? நன்றாக யோசித்து பதில் சொல்லுங்கள்" என்றார். சகாதேவனால் பதில் சொல்ல முடியவில்லை. அங்கேயே சந்தையில் உட்கார்ந்து விட்டான்.

சற்று நேரத்தில்.... சகாதேவனை தேடிக்கொண்டு நகுலனும் சந்தைக்கு வந்து விட்டான். அவனும் குதிரையைப் பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான். குதிரையின் உரிமையாளர், நகுலனிடம் ஒரு கேள்வி கேட்டார். "ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லி விட்டு, குதிரையை இலவசமாகவே பெற்றுக் கொள்ளுங்கள்.

துணி தைக்கும் ஊசி இருக்கிறது அல்லவா? அதன் ஓட்டையின் வழியாக ஒரு யானை புகுந்து, அடுத்த பக்கம் போய்விட்டது. ஆனால் யானையின் வால் மட்டும் அந்த ஓட்டையின் வழியாகப் போக முடியவில்லை. ஏன்?" என்றார். நகுலனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் சந்தையில் உட்கார்ந்திருந்த சகாதேவனுடன் சேர்ந்து உட்கார்ந்து விட்டான்.

அதன் பிறகு ஒரு சில நிமிடங்களில், அர்ஜுனனும் அங்கு வந்தான். அவனும், 'குதிரையைப் பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான். குதி ரையின் உரிமை யாளர், அர்ஜுனனிடமும் கேள்வி கேட்டார்.

"ஐயா! ஒரு வயல் காட்டில் நன்றாக விளைந்து இருந்தது. அதற்கு வேலியெல்லாம் போட்டு பாதுகாப்பாக வைத்து இருந்தார்கள். ஆனால் அறுவடை காலத்தில், அந்த வயல் காட்டில் எதுவுமே இல்லை. வேலியெல்லாம் அப்படியே இருந்தது. அப்படி இருந்தும் விளைந்த தானியங்களை எல்லாம் யார் எடுத்தார்கள்? பதில் சொல்லி விட்டு, குதிரையை கொண்டு செல்லுங்கள்" என்றார். அர்ஜுனனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் ஆலோசனை செய்தபடி அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

சகோதரர்கள் மூவரும் இப்படியே உட்கார்ந்திருக்க, அரண்மனையில் அவர்களைக் காணாமல், தர்மர் திகைத்தார். பீமனைக் கூப்பிட்டு, "தம்பி! நம் தம்பிகள் மூவரையும் நீண்ட நேரமாக காணவில்லை. நீ போய், அவர்கள் எங்கு இருந்தாலும் தேடி அழை த்து வா!" என்றார்.

பீமனும் போய் தேடிப் பிடித்து, அர்ஜுனன், நகுலன், சகாதேவன் மூவரையும் அழைத்து வந்தான். பாஞ்சாலியோடு அரியணையில் அமர்ந்திருந்த தர்மர், அவர்களைப் பார்த்ததும், "அர்ஜுனா! நீண்ட நேரமாக நீயும் உன் தம்பிகளும் இங்கு இல்லை. எங்கே போய் இருந்தீர்கள்?" எனக் கேட்டார். அதற்குப் பதிலாக அர்ஜுனன், நடந்ததை எல்லாம் சொல்லி, குதிரை உரிமையாளர் கேட்ட மூன்று கேள்விகளையும் சொன்னான்.

அதைக் கேட்டதும் தர்மர் நடுங்கினார். அதைப் பார்த்த தம்பிகள் எல்லாரும் திகைத்தார்கள். "அண்ணா! நீங்கள் நடுங்கும் படியாக என்ன நடந்தது?" எனக் கேட்டார்கள். தர்மர் பதில் சொல்லத் தொடங்கினார்..

"தம்பிகளே! எதிர்காலத்தில் நடக்கப் போகும் விபரீதங்களை, அந்த மூன்று கேள்விகளும் சொல்கின்றன." அதை நினைத்துத்தான் நடுங்கினேன். "ஒவ்வொன்றாகச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று விரிவாகக் கூறினார்.

"உங்களிடம் கேள்வி கேட்டவன் கலி புருஷன். அவன் கேட்ட முதல் கேள்வியில் பெரிய கிணறு என்பது பெற்றோர்கள். ஏழு சிறிய கிணறு என்பது அவர்களது பிள்ளைகள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, அவர்கள் எவ்வளவு பேர்களாக இருந்தாலும் சரி! அவ்வளவு பிள்ளைகளையும் காப்பாற்றுவார்கள். இதைத்தான் பெரிய கிணற்றின் தண்ணீரைக் கொண்டு சிறிய கிணற்றை நிரப்பினார்கள் என்பது குறிக்கிறது.

ஆனால், அந்த பிள்ளை களோ, அவ்வளவு பேர்களும் சேர்ந்தால் கூட, தங்கள் பெற்றோரை காப்பாற்ற மாட்டார்கள். இதைத்தான் ஏழு சிறிய கிணறு களில் உள்ள தண்ணீரைக் கொண்டு, பெரிய கிணற்றை நிரப்ப முடியவில்லை என்பது குறித்தது.

அடுத்து இரண்டாவது கேள்விப்படி, இனி வருங்காலங்களில் அக்கிரமங்கள், முறைகேடான செயல்கள் ஏராளமாக நடைபெறும். ஆனால் நல்ல செயல்கள் நடைபெறுவது மிகவும் கடினமாக இருக்கும். இதைத்தான் யானையே போன வழியில், அதன் வால் போக முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்.

அடுத்து மூன்றாவது கேள்வியில், பயிர்கள் என்பது மக்களைக் குறிக்கும், பாதுகாக்கும் வேலி என்பது அதிகாரிகளைக் குறிக்கும். அதாவது மக்களைப் பாதுகாக்க வேண்டிய அதிகாரிகளே அவர்களை அழித்து விடுவார்களே தவிர, அதிகாரிகள் செழிப்பாகத்தான் இருப்பார்கள்.

இதைத்தான், வேலி அப்படியே இருக்க, பயிர்கள் எப்படி அழிந்தன என்ற கேள்வி குறிப்பிடுகிறது என்று சொல்லி முடித்தார் தர்மர்.

கலியுகத்தில் உலகம் இப்படித்தான் இருக்கும், என்பது மகாபாரத காலத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1917

Search for people, places and things

### ராஜ்குமார்

அவ அப்படித்தான் எனக் கணவரும் அவர் அப்படித்தான் என மனைவியும் புரிந்து கொண்டிருப்பதால் மட்டுமே பல குடும்பங்கள் இன்றும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறது



### வசந்தன்

பேச்சில் இனிமை, கொள்கையில் தெளிவு, செயலில் உறுதி ஆகிய மூன்றும் உள்ளவரால் எதையும் சாதிக்க முடியும்...!



### ஜானகி

மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைத்தாலும் அதற்கு நாம் பொறுப்பல்ல. ஆனால் அவர்கள் நம்மைப் பற்றி எப்படி நினைக்க வேண்டும் என்பதற்கு முழுப்பொறுப்பும் நாம்தான்




### மிருதுளா



தேவைக்கு மட்டுமே பயன்படுத்தினால் அதற்குப் பெயர் பாசம் அல்ல சுயநலம்

### வேணி

இந்தக் கோடு நேராகும் போது எல்லோரும் உன்னை நேசிப்பார்கள்



### புகழ்

இரக்கப்படுங்கள்... அன்பு காட்டுங்கள்... ஆனால் ஏமாளியாக இருக்காதீர்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




இந்த சமூகத்தில்தற்போதைய சூழலில் என்னென்னவோ பிரச்சினைகள் நடைபெறுகின்றன. அதில் குடும்ப உறவுகளுக்குள்ளே எத்தனை எத்தனையோ பிரச்சினைகள். அதைவிட கணவன், மனைவி இடையே உறவு விரிசல் பல காரணங்களால். இதையும் தாண்டி சில கொடூர சம்பவங்களும் அரங்கேறுகின்றன. அந்த வகையில் இதன் பின்னணியை கொண்டு காளிதாஸ் அதிரடியாக களமிறங்கியுள்ளது. சரி படத்திற்குள் போகலாமா?

நடிகர் பரத் இப்படத்தின் ஹீரோவாக ஒரு பொலிஸ் அதிகாரியாக வருகிறார். காளிதாஸ் கரக்டரான அவருக்கு மனைவியாக அன் ஷீட்டெல். இருவரும் இடையே முகம் சுளிப்பு. குறிப்பாக அவரின் மனைவி வித்யாவுக்கு. காரணம் கணவர் தன்னை கண்டு கொள்ளாமல் வேலை வேலை என பிசியாக இருக்கிறார் என்பதே.

இதற்கிடையில் அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றில் அடுத்தடுத்து மூன்று தற்கொலைகள். இறந்த மூவருமே பெண்கள். ஒரே மாதிரியான சம்பவங்கள். கொலையா? தற்கொலையா? என பல கேள்விகள்.

இதனால் பரத் மற்றும் பொலிஸ் குழு மிகவும் தீவிரமாக இந்த சம்பவத்தில் விசாரணையை தொடங்குகிறது. இது ஒருபக்கம் இருக்க பொலிஸாருக்கு கிடைக்கும் துப்புகளால் அதிர்ந்து போகிறார்கள். மறுபக்கம் பரத்தின் மனைவிக்கு மன நலபிரச்சினை. அவருக்குஅப்படி என்ன பிரச்சினை?

நடந்த சம்பவங்களுக்கு யார் காரணம் என்பதை கண்டு பிடிப்பதே இந்த காளிதாஸ்.

ஹீரோ பரத் பாய்ஸ் படம் முதல் பல படங்கள் மூலம் தன் திறமையான நடிப்பை வெளிப்படுத்தியவர். அவருக்கு இந்த காளிதாஸ் ஒரு நல்ல வாய்ப்பு என்றே சொல்லலாம். சொன்னது போல ஒரு பொலிஸ் அதிகாரியாக அப்



படியே மாறியுள்ளார்.

மலையாள படங்களில் நடித்து வந்த ஹீரோயின் அன் ஷீட்டல் புதிதாக திருமணமான மனைவி என்ன எதிர்பார்ப்பார் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். அதிலும் பொலிஸ்காரரின் மனைவி சகமனைவிக்ள் போல சகஜமாக கணவருடன் வாழ்க்கையை எஞ்சோய் செய்யமுடியவில்லை என வருத்தத்தை முகத்தில்காட்டுகிறார்.

சீனியர் பொலிஸ் அதிகாரியாக இந்த தற்கொலை சம்பவத்தை கையில் எடுக்கிறார் நடிகரும் இயக்குநருமான சுரேஷ்மேனன். அனு பவத்தை திறமையில் காட்டுவதோடு முந்தைய தலைமுறை கணக்கில் எப்படி என எடுத்து வைக்கும் வசனங்கள் பளிச்சிட வைக்கிறது.

இயக்குநர் ஸ்ரீசெந்தில் படத்தில் வழக்கமான படங் கள் போல மசாலா பூசாமல் காளிதாஸை முழுமையாக காட்டுவதிலேயே கவனம் செலுத்தியிருக்கிறார். கதை போகும் போக்கு கூடுதல் சுவாரஸ்யம்.

ஆங்காங்கே சின்ன இரட்டை அர்த்த வசனங் களுக்கு இளைஞர்களிடம் கிளாப்ஸ். மற்றும் சிரிப்பு சத்தம் எழுகிறது.

கதையை இயக்குநர் சுவாரஸ்யமாக கொண்டுசென்ற விதம். கிளைமாக்ஸ் திரில்லர் சற்றும் எதிர்பாராதது.

விஷால் சந்திரசேகர் இசையில் பாடல்கள் மனதை ஈர்க்கும் ரகம். சம்பவங் களும், கடைசியில் நடக்கும் நிகழ்வுகளும் பல கேள்வி களை எழுப்புவது.

மொத்தத்தில் காளிதாஸ் ரியலான கிரைம் திரில்லர். வித்தியாசமான படமாக பார்த்த ஒரு மன திருப்தி.

